[...ered No. 1514.]

[October 19..]

...E OF THE REGISTRAR ...
8-NOV 1927




# செங்குந்த மித்திரன்.

## SENGUNTHA MITHRAN

### உள்ளுறை


| | |
|---|---|
| பத்திரிகாசிரியரின் முன்னுரை | ௫௭௫ |
| கேதாரிகௌரி விரதம் | ௫௭௭ |
| வலங்கை இடங்கையும் | ௫௮௧ |
| பெண் கல்வி | ௫௮௫ |
| கொல்லாமை | ௫௮௮ |
| மாமிச பக்ஷணவிலக்கு | ௫௯௧ |
| பொது நன்மைக்கு உழைத்தல் | ௫௯௫ |
| காஞ்சிச் செங்குந்த வாலிப சங்கம் | ௫௬௯ |
| ஒட்டக் கூத்தர் திருநாள் | ௬0௧ |
| போலிச் செங்குந்தர்கள் | ௬0௨ |
| ஓர் முக்கியமான அறிக்கை | ௬௫௯ |
| பஞ்சாங்கம் | ௬௫௯ |

௨௯ ... 27.1.10 208439

# செங்குந்த மித்திரன்

மாதப் பத்திரிகை

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

*இதனுள் பொதுநீதிகள், அறிவை விருத்தி செய்யத்தக்க பலவியாசங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சரித்திர ஆராய்ச்சிகள், வயித்தியக் குறிப்புகள் முதலான அரும்பெரும் விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.*

*அன்றியும், முக்கியமாக செங்குந்தரின் முற்கால தற்கால வருங்கால நிலமையை, ஆராய்ச்சியுடனும் ஆதாரத்துடனும் விளக்கமாக எழுதி வரப்படும். ஆதலால், ஒவ்வொரு செங்குந்த குலமக்களும் உடனே சந்தாதாரராய்ச் சேர்ந்து மித்திரனை ஆதரித்து வருதல் வேண்டும்.*

தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

| | | | |
|---|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1 | 8 | 0 |
| பிணங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 2 | 0 | 0 |
| தனிச் சஞ்சிகை ஒன்றுக்கு விலை அணா | 0 | 2 | 0 |

## அறிவிப்பு.

நமது மித்திரன் தோன்றி 10 (பத்து) மாதமாகியும் நமது சகோதரர்களில் அநேகர் சந்தாத் தொகையைச் செலுத்தாமலிருப்பது விசனிக்கத்தக்கதாக இருக்கிறது. நமது சகோதரர்களில் சிலர் மித்திரன் நடுவழியில் நழுவி விடுவானோ என்ற நோக்கத்துடன் பணம் அனுப்பாமலிருக்கலாம். மித்திரன் ஒருவரின் போஷணையில் இல்லை என்றும், ஆறு லக்ஷம் ஜனங்களின் ஆதரணையிலிருக்கின்றனென்றும் அறிந்துகொண்டு தாமதமில்லாமல் சந்தாத் தொகையை அனுப்பக் கோருகிறேன்.

V. P. யில் அனுப்பினல் சில நண்பர்கள் திருப்பிவிடுகிறர்கள். சாதாரண போஸ்டில் அனுப்பினல் பெற்றுக்கொண்டு 9 மாதம் சென்ற பின்னர்க் கனவு கண்டாற்போல் வேண்டாமென்று சில நண்பர்கள் எழுதியிருக்கிறர்கள். அவ்விதம் எழுதுகிறவர் [சந்தா நம்பரைப் போடாது யெழுதுகிறர்கள்] அன்னை என்னென்று சொல்லுவோம். கடிதம் எழுதுவோர் சந்தா நம்பரைக் குறித்து யெழுதுதல் வேண்டுமென எத்தனை முறையோ எழுதியும் கவனியாது தங்கள் பெயரை மட்டும் யெழுதிய கடிதங்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக் கவனிக்க நமக்குக் கூடாமையாக இருப்பதால் இனியேனும் நேயர்கள் அன்புகூர்ந்து அவரவர்கள் யெழுதும் கடிதங்களில் பத்திரிகையின் மேல் ராப்பரிலிருக்கும் தத்தம் சந்தா நம்பரைக் குறித்து யெழுதுதல் வேண்டும். அப்படி இல்லாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

**T. N. சபாபதி முதலியார்.**
மானேஜர்:—செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
31. அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
3-NOV 1927

உ

முருகன் துணை

# செங்குந்த மித்திரன்

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,]

மாதப் பத்திரிகை

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க வெளியீடு

| | | |
|---|---|---|
| தொகுதி - க | பிரபவ௵ ஐப்பசி௴ | பகுதி - க0 |

வேலுமயிலுந் துணை

*ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட் பதங்கள்*
*சேவிக்க வென்று நினைக்கின்றி லேன் வினை தீர்த்தருளாய்*
*வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்*
*சேவற் கொடியுடை யானே யமரர் சிகாமணியே*

---

## பத்திரிகாசிரியரின் முன்னுரை.

### வாலிபரின் வெற்றி.

வாலிபர் மனதுவைத்துச் சாதிக்க இயலாத காரியம் உலகத்திலில்லை. இதற்குச் சான்று காஞ்சிபுரத்துச் செங்குந்த வாலிபர் சங்கத்தார் சென்ற முனிசிபல் தேர்தலில் ஜெயக்கொடியை நாட்டி நம்மவர் ஒருவருக்குத் தேர்தல் செய்வித்த பெருமுயற்சியேயாகும். வாலிபர் ஒத்தாசையால் தேர்தலடைந்த திருவாளர் பிள்ளையார்பாளையம் வை. வினைதீர்த்த முதலியார் அவர்களுக்கு எங்களது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். செங்குந்த உலகம் காஞ்சி வாலிபர் குலாபிமானத்துக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. (விவரங்களைச் 'செங்குந்தர் கிளர்ச்சி' என்னும் பகுதியில் காணலாம்.) வாலிபர்களை மேலும் மேலும் ஊக்கிவருவது ஆங்காங்குள்ள நமது குலத் தலைவர்களது கடமையாகும்.

208439

## [illegible]ளைச் சங்கங்கள்.

சென்ற [illegible] திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வீரவநல்லூரில் ஒரு செங்குந்த வாலிபர் சங்கமும், பெருநகரிலும், கொடுங்காலூரிலும், குருராசபேட்டையிலும், சோளிங்கபுரத்திலும் செங்குந்தர் சங்கங்களும் ஏற்பட்டிருப்பதைக் குறித்து மிகவும் மகிழ்கின்றோம். அடுத்த சஞ்சிகை வெளிவருவதற்கு முன் இன்னும் பல செங்குந்தர் சங்கங்கள் நிறுவப் பெறுவுமென்றே நம்புகின்றோம்.

## போலிச் செங்குந்தர்கள்.

கோயம்புத்தூர் சங்கத்தார் தமக்குள் இருந்து வரும் ஒரு துராசாரத்தைச் செங்குந்த வகுப்பினர்க்குண்டென்று சொல்லி அவ்வகுப்பிற்கு ஒரு பெரும் இழிவை உண்டாக்க முயற்சிப்பதைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர் கண்டித்துச் சென்ற சஞ்சிகையில் நம்மவர்களுக்கு விளம்பரப்படுத்தினார்கள். இம்மாதத்திய சஞ்சிகையில் கோயம்புத்தூர் சங்கத்துக் காரியதரிசியின் பதிலும், ஈரோட்டு திரு. S. மீனாக்ஷி சுந்தர முதலியார், பி.ஏ., எல்.டி., ஸ்ரீலஸ்ரீ சிவசாமிதேசிகரவர்கள் முதலியவர்களின் கடிதங்களும், மகாநாடு கிளைநாடுகளின் முக்கிய ஸ்தலங்களைச் சூழ்ந்த பல செங்குந்த கிராமத்தாரின் கண்டனங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரின் முடிவான அபிப்பிராயமும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களிலும் கண்டன கூட்டங்கள் போட ஏற்பாடு நடக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். வீரர் வழிவந்த செங்குந்த ஆண்மக்களும், உத்தமிகள் வழி வந்த செங்குந்த பெண்மக்களும், அவைகளைப் பன்முறையும் படித்து நமது சீரிய கைக்கோள குலத்துக்கு எவ்விதத்திலும் இழிவுண்டாகாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். முன்போல் இனியும் உறங்குவராயின், நமது புனித செங்குந்த குலம் தாசிக்குலத்துக்கும் கீழ்ப்பட்ட இழிவை அடையுமென்பதில் சந்தேகமில்லை. செங்குந்தர்களே! ஆங்காங்கே கூட்டங்கள் கூட்டி இப்பழியைக் கண்டிக்க முந்துங்கள், முந்துங்கள்! முந்தாது விடுவீராயின், செங்குந்தரென்னும் பெயருக்கும் கைக்கோளரென்னும் பெயருக்கும் நீங்கள் பாத்திரர் ஆக மாட்டீர். தூங்குவதற்கும், செயலும், சிரத்தையும் அற்றுச் சோம்பிக் கிடப்பதற்கும் இது சமயமல்ல.

பத்திரிகாசிரியர்.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி—அ | பவ௵ ஆவணி மீ | பகுதி அ |
|---|---|---|

OCT ... MADRAS

## உள்ளடக்கம்

பத்திரிகாசிரியர் முன்னுரை ... 430
நினைவுக் குறிப்புகள் .... 432
உற்சவ சாந்தி ... 439
செங்குந்தர் கல்விநிதி உபகாரச் சம்பளம் ... 443
கிளியும் பூனையும் ... 445
கறைகளைப் போக்கும் வழி ... 449
எங்கே எனது நாடு ... 450
கொஞ்சம் ஊன்றிப் பாருங்கள் ... 452
அதிசயம், அற்புதம், ஆச்சரியம் ... 455
விகடத் துணுக்குகள் ... 457
ஏழை அழுத கண்ணீர் ... 460
சின்னஞ் சிறு பாப்பாவுக்கு—வெள்ளைப் பாம்பு ... 465
ஒற்றுமை—முன்னேறும் வழி ... 469
கபிலாசலக் குமரேசர் பிள்ளைத்தமிழ் ... 473
பொன் மொழிகள் .... 475
செங்குந்தர் கல்விநிதியின் சட்டதிட்டங்கள் ... 478
வர்த்தமானம் ... 485
நன்கொடைகள் ... 491
கிளர்ச்சி ... 492

208448

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

இரவுபகற் பலகாலும் இயலிசைமுத் தமிழ்கூறி
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் துவஞான
அரனருள்சற் புதல்வோனே அருணகிரிப் பெருமாளே.

—ஸ்ரீ அருணகிரிநாதர்.

## நெசவுத் தொழிலாளரும்—சிம்லா மகாநாடும்

கைத்தறி நெசவுத் தொழிலானது இந்திய மக்களின் ஜீவாதாரத் தொழிலா யிருக்கிறது. நாளுக்குநாள் வேலையற்றோர் தொகை பெருகி வரும் இக்காலத்தில்—வறுமைத் துன்பமும், பசிக்கொடுமையும் தாங்கமுடியாது அபிவிருத்தியடைந்துவரும் இந்நாளில் அரை வயிறு கஞ்சியாவது அளித்து பெரும்பாலோரை இரட்சித்து வருவது இத்தொழிலே யாகும்.

இத்தகைய தொழிலின் உயிர்நாடி கொஞ்சங் கொஞ்சமாய் அன்னிய தேசப் போட்டிகளால் நசுக்கப்பட்டு—ஒடுக்கப்பட்டு வருகிறதென்றும், அரசாங்கத்தார் உடனே காப்பளிக்க வேண்டியது மிக அவசியமென்றும், கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் வாய்மூடி மௌனிகளாய் இருப்பாராயின் அவர்களுக்கு ஆபத்து விரைவில் சம்பவிக்கக் கூடுமென்றும், தறி நெசவுத் தொழில் புரியும் எல்லா சமூகத்தவர்களும் ஒன்றுபட்டு ஒரு சங்கம் ஸ்தாபித்துத் தமது குறைகளைப் போக்கிக்கொள்ள முனைதல் மிகமிக அவசியமானதென்றும் கடந்த மார்ச், ஏப்ரல், மே மாத இதழ்களில் மிக விரிவாக எழுதி யிருந்தோம். ஆனால் எந்த நெசவுத் தொழிலாளரும் இதுவரை தமது உறக்கத்தி லிருந்து எழுந்ததாகத் தெரியவில்லை. இப்படி நீண்ட உறக்கம் கொள்வார்களானால் இத்தொழில் கண்டிப்பாய் நசித்துப் போகுங் காலத்தை வெகு சமீபத்தில் நாம் காணக் கூடுமென்பதில் சந்தேகமே இல்லை. இவ்வாறு நெசவுத் தொழிலாள ரனைவரும் உறக்கங்கொண் டிருப்பதைக் கண்டு எந்த அறிவாளியும் வருந்தாதிருப்பதற் கில்லை.

சென்ற மாதத்தில் சிம்லாவில் கூடிய கைத்தொழில் மகாநாட்டின் சிபார்சை யொட்டி, இந்திய சர்க்கார், ஐந்து லட்சம்



ரூபா கைத்தறி நெசவின் அபிவிருத்திக்கு ஆண்டுதோறும் செலவு செய்வதெனத் தீர்மானித்து, இவ்வாண்டுக்கும் மான்யம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்த மான்யத்தை இரு பாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை சென்ற ஐந்து வருட காலத்திலே கைத்தறி நெசவுத் தொழிலுக்காக மாகாண சர்க்கார்கள் எவ்வளவு தொகை செலவழித் திருக்கிறார்களோ அதன் வீதாசாரப்படி பகிர்ந்தளிப்பதென்றும், மற்றோர் பகுதியை, மாகாணங்களில் கைத்தறிகளில் நெசவாகும் நூல்களின் அளவுக்கேற்ப பிரித்துக் கொடுப்பதென்றும், இந்த மான்யங்கள் கிடைப்பதால் கைத்தறி திட்டத்தை மாகாண சர்க்கார்கள் திருத்தி யமைக்க வேண்டுமென்றும் கைத்தொழில் மகாநாடு தீர்மானித்திருக்கிறது. இதுவன்றியும், ஆராய்ச்சி ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதென்றும், அதில் எல்லா மாகாணங்களி லிருந்தும் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கச் செய்வதென்றும் தீர்மானஞ் செய்திருக்கிறது.

இதைக்கேட்டு நெசவாளிக ளனைவரும் மிக்க மகிழ்ச்சியடைவார்க ளென்பதில் ஐயமில்லை. ஆயினும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரித்து வழங்கப்படும் மான்யமானது வீணாக ஆராய்ச்சி போர்டுகளுக்கும், கைத்தொழில் இன்ஸ்பெக்டர்கள், சூபரிண்டெண்டுகள் போன்ற உத்தியோகஸ்தர்களுக்கும் வழங்கப்படாமல், உண்மையில் தறித்தொழிலாளிகளின் நன்மையின் பொருட்டே செலவழிக்கப்பட வேண்டுமென்றும், கைத்தொழில் ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் எல்லா தறித்தொழில் சமூகத்தவர்களும் சேர்ந்து நியமித்த அங்கத்தினர்கள் பலர் அங்கம் பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நாம் பூரணமாய் விரும்புகின்றோம். அவ்வாறின்றி, ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் முதலாளிகளைமட்டும் அரசாங்கம் அங்கத்தினர்களாய் நியமிக்கும் பட்சத்தில், அதனால் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு யாதொரு பாதுகாப்பும் ஏற்படாதென்பதே நமது அபிப்பிராயமாகும்.

---

செங்குந்த திலகர், கவிச்சக்கரவர்த்தி

# ஒட்டக்கூத்தர் திருநாள்

நிகழும் பவஹூ ஆவணிமீ 6உ புதவாரம் வருகிறது. இத்திருநாளைச் செங்குந்த ரனைவரும் விமரிசையாகக் கொண்டாட வேண்டுகிறோம்.

# நினைவுக் குறிப்புகள்

## ஐயோ! நட்டாற்றில் விட்டுப் போகிறீர்களே!

நூற்றைந்து டிகிரிக்குமேல் காய்ச்சல். இப்பவோ, பின்னையோ என்றிருக்கிறது. தத்துப் பிள்ளைகளெல்லாம் வந்து சேர்ந்துவிட்டார்கள். பிரமன் விதித்த வயதையெல்லாம் தாண்டி—கண்டங்களையெல்லாங் கடந்து எப்படியோ இன்று வரை பிழைத்து வந்த ஸ்ரீமதி இந்திய சட்டசபைத் தேவியார் இந்த முறை பிழைக்க வழியில்லையென குடும்ப டாக்டர் ஸ்ரீ வைசராய் பிரபு அறிவித்துவிட்டார். 'இனி நீடிக்க முடியாது. 1934-ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 31-ந்தேதி வரையில் தான் ஜீவிக்க முடியும். ஜனவரியில் புனர் ஜன்மந்தான். ஆனால் மறு ஜென்மம் எடுப்பதற்குள் நவம்பர் மாதத்தில் அவளது தத்துப் பிள்ளைகளைப் பரிசோதித்துப் பதிவு செய்துவிட வேண்டும்.' என அறிக்கையும் வெளியிட்டுள்ளார்.



இந்தியா சட்டசபையின் புதிய தேர்தலைக் கேள்விப்பட்ட அங்கத்தினர்களின் பரிதாப நிலை எப்படியிருக்கிறதென 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகைக்குப் படம் வரைவோர் உள்ளத்தில் தோன்றும் காட்சி.

இந்த அறிக்கையைக் கண்டு ஸ்ரீமதி தேவியின் தத்துப் பிள்ளைகளென இதுவரை அவளுடன் ஒண்டிப் பிழைத்து வந்தவர்கள் நெஞ்சம் ஆட்டங் கொடுத்துவிட்டது. 'என்ன செய்வோம்! இப்படி எங்களை நட்டாற்றில் விட்டுப் போகிறீர்களே!' என்று மரணாவஸ்தையிலுள்ள ஸ்ரீமதி தேவியின் பக்கத்திலிருந்து கதறுகிறார்கள். இவர்களனைவருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேடும்—பள்ளமும், வாழ்வும்—தாழ்வும் மாறி மாறி வருவது இயற்கையாதலால் வருந்துவதில் பயனில்லை என மனந்தேறி இருக்குமாறு இவர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.



## தாமதம் வேண்டாம்

'அப்பனும் பிள்ளையும் ஆடிக் காற்றில் பறக்கும்போது, ஆம்படையானோடு மகளும் வந்து சேர்ந்தால்' என்று ஒரு பழமொழி சொல்லுவதுண்டு.

'இந்தத் தள்ளாத வயதில்—தரித்திர காலத்தில், மகளையும் வைத்துப் போஷித்துக்கொண்டிருப்பது என்றால் முடியாத காரியம். கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் குடும்ப பாரம் எவ்வளவோ குறையும்' என்று எண்ணினான் ஒரு தரித்திரப் பிடுங்கல். 'நாளாவது, நட்சத்திரமாவது' என்று அந்த க்ஷணமே கல்யாண முடித்து பெண்ணையும் மாமியார் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். ஆனால், போனவளோ, புருஷனையும் அழைத்துக் கொண்டு பொழுதோடு வந்து சேர்ந்துவிட்டால் தகப்பன் பாடு எப்படி இருக்குமென சிந்தித்துப் பாருங்கள். மேலே எடுத்துக் காட்டிய பழமொழி இத்தகைய பேர்வழிக்காகத்தான் ஏற்பட்டிருக்குமென்பதில் எவருக்கும் சந்தேகம் இருப்பதற்கு நியாயமில்லையல்லவா?

இன்றைய இந்தியாவின் கதியும் இந்தப் பழமொழிக்கு விலக்காக இருக்கவில்லை. இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் வரவர மிகுந்து வருகின்றது. அதனால் மனம் சலிப்புற்ற வாலிபர்களிடையே அடிக்கடி தற்கொலைகள் ஏற்பட்டு வருவதைக் கண்டு இந்தியரனைவரும் திகைப்புறுகின்றார்கள். வயிறார உண்பதற்கு வருவாய் காணாது பல கோடி மக்கள் பட்டினி கிடந்து கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டங்கள் போதாதென கடல் கடந்து சென்ற இந்திய சகோதரர்களும் இங்கே திரும்பி வருவதென்றால்...........?

'இதோ பார்; கை நிறையப் பணம்' என்று ஆசை காட்டி அழைத்துச் சென்ற இந்தியர்களை, ஒவ்வொரு குடியேற்ற நாடும் 'இன்னுமா இங்கே இருக்கிறீர்கள். கப்பல்கள் தயாராக இருக்கின்றனவே. சீக்கிரம் மூட்டைகட்டிக் கொள்ளுங்கள்' என்று விடைகொடுத் தனுப்புவதில் முனைந்து நிற்கின்றன.

தென்னாப்பிரிக்கா யூனியன் சர்க்கார் காட்டையும் மேட்டையுங் காட்டி 'தயவு செய்து அங்கே போய்விடுங்கள்' என்

கின்றனர். ஜான்ஸிபார் சர்க்காரோ 'வெள்ளையர்களாகிய எங்கள் வர்த்தகத்தில் நீங்கள் இவ்வளவு தூரம் முன்னுக்கு வருவதாவது' என்று, ஜான்ஸிபார் இந்தியர்களின் வர்த்தகத்திற்குப் பாதகம் தரக்கூடிய புதிய சட்டங்களை நிறைவேற்றி யிருக்கிறார்கள். அதனால் ஏற்படும் கஷ்டந் தாங்காமல் அநேகர் இந்திய நாட்டுக்குத் திரும்பிவிட யோசித்து வருவதாகத் தெரிகிறது. வேலை இல்லாக் கொடுமையாலும், வருவாய் குறைவினாலும் சகிக்கமுடியாத கஷ்டத்துள் ஆழ்ந்து தத்தளிக்கும் இந்தியாவில், குடியேற்ற நாடுகளில் விரட்டி யடிக்கப்படும் இந்திய சகோதரர்களும் வந்து சேருவார்களானால் இந்தியா தற்கொலை செய்து கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை.

'ஜான்ஸிபாரில் நியாயமான உரிமைகளையும் சுகத்தையும் இழந்து தாய்நாடு திரும்பும் இந்தியர்கள், இந்தியா முழுதும் பிரிட்டிஷார்மீது பகைமை உணர்ச்சியைக் கொளுத்தி விடுவார்கள். அவர்கள் விஷயத்தில் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால், இந்தியாவில் பிரிட்டிஷார் உரிமைக்குக் கட்டாயம் பங்கம் ஏற்படும்' என ஸ்ரீ மனு சுபேதார் எச்சரிக்கிறார். இந்தியத் தலைவர்களனைவரும் ஜான்ஸிபார் அதிக்கிரமத்தை ஒரு முகமாகக் கண்டிக்கிறார்கள்.



ஜான்ஸிபாரில் இந்தியர்களின் உரிமை பறிக்கப்பட்டு விரட்டி அடிக்கப்படும் கொடுமையை இந்திய சர்க்கார் ஆராய்ச்சி செய்வதை படத்தில் பாருங்கள்

இந்திய சர்க்காரும் இந்த விஷயத்தில் அசிரத்தையாக இராமல் அங்குள்ள உண்மை நிலையை நேரில் சென்று அறிந்து வருவதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித் திருப்பது மிக-



வும் மகிழ்ச்சிக் குரியதேயாகும். ஆனாலும், ஆராய்ச்சி, அறிக்கை, ஆலோசனை எனக் காலங் கடத்தப்படுமானால் ஜான்ஸிபார் இந்தியர்கள் உதைபட்டும், இடிபட்டும், மிதிபட்டும் பாதி பிராணனை இழந்து விடுவார்கள் என்பது நிச்சயம். எனவே, வெறும் ஆராய்ச்சியிலேயே அதிக காலம் போக்காமல் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள இந்திய சர்க்கார் கவனம் செலுத்துவார்களென பாரத மக்களனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

## உண்மைத் தொண்டர்களுக்கு ஒரு புதிய தொண்டு

"போதும்—ஐயா—போதும். இந்த 'டாணா' உத்தியோகம் பார்த்தது போதும்" என்று வருந்துகிறார் கனம் 'டாணா' சார்ஜி அவர்கள். திடீரென இவ்வளவு அலுப்பும் சலுப்பும் எதற்கு? "ஆரம்ப வாத்தியார் உத்தியோகம் என்றால் மிகவும் நிம்மதியானது; அவர்கள் தமது மனச்சாட்சியை மட்டும் வேறு எங்கேயாவது மறந்து வைத்துவிட்டுப் பாடசாலைக்குச் செல்வார்களானால், தங்கள் வகுப்பிலுள்ள நாற்காலிகளின் பின்புறம் கொஞ்சம் அழுத்தமா யிருக்கிறதா எனப் பரிசோதித்தபின் 'ஹாய்' என அதில் சாய்ந்துவிட்டால், அப்புறம் அடுத்த மணி அடிக்கும் வரையில் அவர்கள் கவலைப்பட வேண்டியதே இல்லை. ஆயிரம் கனவுகள் கண்டாலும், 'என்ன கனவு கண்டீர்' என்று கேழ்ப்பதற்கும் ஆள் கிடையாது" என்பது வம்பர்கள் சங்கத்தார் வெகு நாட்கள் ஆராய்ந்து முடிவு செய்த விஷயம். ஆனாலும், அந்த முடிவை நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை. டாணா சார்ஜிகளோடு இரண்டொரு நாள் பழகிப்பாருங்கள். இது எவ்வளவு அபத்த பஞ்சாங்க மென்பது உங்களுக்கே வெளிச்சமாகிவிடும்.

'டாணா மாஸ்டர்கள் உண்மையான பரோபகாரிகள்; பிறருக்காகவே ஜென்மம் எடுத்தவர்கள்; பகல் இரவு என்று இல்லாமல், மேலோர் தாழ்ந்தோர் என்று நினைக்காமல் உழைக்கும் உத்தமத் தொண்டர்கள்' என்பதே நமது அபிப்பிராயம். சாதாரணமாய் அவர்கள், தாலூக்கா போர்டு அங்கத்தினர்களின் சாக்கடைப் புழுக்கள் கொஞ்சம் பெருமூச்சு விடுமானால், உடனே ஓடி அதன் தலைவலிக்கு சிகிச்சை செய்யவேண்டும். ஜில்லா போர்டு தலைவர் வீட்டுக் குப்பைமேட்டுக் காளான் வெய்யில் தாங்காமல் தலை சாய்க்குமானால் இவர்கள் விழுந்தடித்துக்கொண்டு போய் அதன் பசியை ஆற்றி அதற்குச் சோடசோபசாரமும் செய்யவேண்டும். பரீட்சாதிகாரிகள், தலைமை ஆசிரியர்களின் நாய்க்குட்டிகள் குரைக்குமானால் தாமதமின்றி அவற்றின் கவலையைப் போக்க வேண்டும். ஊரிலுள்ள மற்ற பெரிய மனிதர்களின் குழந்தைகள் காம்போதி ராகம் பயிலத்தொடங்கினால் கால் கீழே படா

மல் பறந்துபோய் அவற்றிற்கு எவ்வளவு கஷ்டப்பட்டாவது சூரியனையோ, நட்சத்திரத்தையோ பிடித்துக் கொடுக்கவேண்டும். இந்த வேலைகளெல்லாம் வேறு யாரால் செய்ய முடியும்?

எப்படியோ இந்த வேலைகளெல்லாம் செய்து, புண்ணியம் சம்பாதித்து விடுகிறார்களே என்று நீங்கள் பொறாமைப்பட்டால் ஆகுமா? முதன் மந்திரி பொப்பிலி ராஜாதான் மனந்தளாமல் முதல் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இனி தாலூக்கா போர்டு அங்கத்தினர்களின் சாக்கடைப் புழுக்கள் என்ன செய்யுமோ தெரியவில்லை. இப்படி ஒவ்வொரு வேலையாகப் பிடுங்கிவிட்டால் 'சார்கள்' புண்ணியம் தேடுவதுதான் எப்படி? வடநாட்டிலும் எங்கே பொப்பிலிகள் ஏற்பட்டு இந்த வாத்தியார்களின் புண்ணியத்தில் கைவைத்து விடுகிறார்களோ என அங்குள்ள அதிகாரிகள் இப்பொழுதே புதிய வேலைகள் கற்பிக்கத் தொடங்கி இருப்பதற்கு உபாத்தியாயர்களனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மைமன் சிங் என்ற ஊரிலுள்ள பண்டிதர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு, போலீஸ் சூபரெண்டெண்டு 12-7-34 முதல் ஒரு வேலை கொடுத்திருக்கிறார். 'பாடசாலைகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் புரட்சி இயக்கத்திற்கு அதிகமாக ஆள் சேர்ந்து வருகிறது. ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களுடைய வீடுகளுக்குப் போய், புரட்சி இயக்கத்தின் கெடுதிகளை அவர்களுக்கு நிதானமாக எடுத்துக்கூறி எச்சரிக்க வேண்டும். வாலிபர்களிடை புரட்சித் துண்டுப் பிரசுரங்கள் நடமாடாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூறும் யோசனைகளை நிறைவேற்றத் தவறுவார்களேயானால், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகள் தங்கள் அதிகாரங்களை உபயோகித்து நிர்ப்பந்தப் படுத்துவார்கள்.'

இந்த உத்தரவைப் பார்த்ததும், சார்களின் குணத்தை இன்னும் சூபரிண்டெண்டு உணரவில்லை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. நிர்ப்பந்தம் எதற்கு? புழுக்களுக்கும், காளான்களுக்கும், நாய்க்குட்டிகளுக்கும் தொண்டாற்றுவதில் நிறைந்த ஊக்கங்காட்டும் இவர்கள், இந்த வேலையைச் செய்ய ஒருக்காலும் தவறமாட்டார்கள் என்று நாம் உறுதி கூறுகிறோம்.

## தியாகப் பெருமகள்—ஸ்ரீ அமிர்தகார்

'சட்டமறுப்புக் காலத்தில் நான் நான்கு முறை சிறை சென்றிருக்கிறேன். என்னுடன் சிறை சென்ற தோழர்களனைவரும் இப்பொழுது அஸாம் வெள்ளக் கஷ்ட நிவாரணத்திற்கு உதவி செய்ய வராததைக் கண்டு வருந்துகிறேன். மாகாத்மா



காந்தியின் உண்மை சிஷ்யை என்ற முறையில், உண்மையான சத்தியாக்கிரகியாகவே நான் இறக்க விரும்புகிறேன். நான் பட்டினி கிடந்து இறந்து விட்டால் எனக்குப் பாடை கட்டக் கூடாது. புட்பம் போடக்கூடாது. பிணத்தை நாய் கழுகுகள் தின்னும்படி ஒரு குழியில் எறிந்துவிடவேண்டும். அஸாம் சகோதரிகள் வெள்ளக் கொடுமையால் கட்டத் துணியற்று, உணவற்று வருந்தி சாவதற்கு உதவி புரிய முன்வராத 'மகா ஜனங்களின் பாபத்திற்கு இது பிராயச்சித்தமாக இருக்கட்டும்.'

என்ன வீர மொழிகள்! எத்தகைய உள்ள முருக்கும் வார்த்தைகள்! மகாத்மா காந்தி ஆண்மக்களின் நெஞ்சங்களைத்தான் இரும்புகளினும் கடினமாக, எதற்கும் அசையாத பெரு மலைகளாக மாற்றிவிட்டாரென அநேகர் நினைத்திருந்தார்கள். ஆனால், இந்த வீரமுடிவு—கர்ஜனை, ஸ்ரீமதி அமிர்தகார் ஜமியாஸ்த சிங் அவர்களுடையதெனக் கேட்டு வியப்புறாத இந்தியர் இருக்க முடியுமா?

பண்டைக் காலத்தில் அநேக வீரத் தாய்மார்கள் இருந்தனரென நூல்கள் அறிவிக்கின்றன. அவை பொய்யல்லவென்பதை நிரூபிக்கவே ஸ்ரீமதி சிங் இப்போது தோன்றியிருப்பதாக நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. 'உயிர் எமனுக்கு விருந்தளிக்கட்டும், உடல் நாய்களுக்கு உணவளிக்கட்டும்' என கர்ஜிக்கும் இந்த தியாகப் பெருமகள் இறக்கும்படி வட இந்தியர் ஒருக்காலும் பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். அவ்வம்மையாரின் எண்ணத்தைப் பூர்த்திசெய்து அநேக கோடி, பெண்மணிகளின் உள்ளத்தில் இத்தகைய உண்மைத் தியாக உணர்ச்சியை-வீரந் ததும்பும் எண்ணத்தை—சகோதர வாஞ்சையை எழுப்பி இந்தியாவிற்கோர் மகத்தான பெருமையை நிலை நாட்ட இன்னும் பன்னெடுங்காலம் அவர்கள் ஜீவித்திருக்குமாறு செய்வார்களென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அம்மையார் ஜூலைமாதம் 23-ந் தேதி உண்ணா விரதத்தைத் துவக்கினார்களோ இல்லையோ, அன்றே அவர்களது எண்ணத்தில் பாதி நிறைவேறி விட்டது. எதற்காக இறக்கும்வரை பட்டினி கிடக்கும் சபதத்தைச் செய்துகொண்டார்கள் தெரியுமா?

அஸ்ஸாமில் பெய்த பெருமழையினால் வீடு வாசலை இழந்து, புருடன் பிள்ளைகளை இழந்து பல்லாயிரக் கணக்கான சகோதரிகள் உணவின்றி பட்டினி கிடக்கிறார்கள்; ஆடையின்றி நிர்வாணமாய்க் கிடக்கிறார்கள். பதினைந்தாயிரம் குடும்பங்களுக்குமேல் இக்கொடுமைக் குள்ளாகி இருப்பதைக் கண்ட இத் தியாக மணியின் உள்ளம் உருகிவிட்டது. அஸ்ஸாம் சகோதரிகளின் இக்

கொடுமையைப் போக்க எவரும் முன் வராத பழி—பாவத்திற்காக ஆண்டவன் சந்நிதானத்தில் பிராயச்சித்தம் செய்துகொள்ளவே இவ்விரதத்தைத் துவக்கினார்கள்.

விரதம் துவக்கியதுதான் தாமதம். அஸ்ஸாம் மட்டுமென்றி இந்தியா முழுவதிலும் பரபரப்பு உண்டாகிவிட்டது. ஆயிரக் கணக்கான பெண்கள் ஸ்ரீமதி சிங்கின் ஜாகைக்குத் துணி, புடவைக ளடங்கிய பொட்டணங்களுடன் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். மாணவர்க ளெல்லாம் பணவசூல் செய்து அம்மையாரிடம் செலுத்தி வருகிறார்கள். மூட்டை மூட்டைகளாகப் புடவைகள் வந்து சேருகின்றன. சர். பி. ஸி ராய் மூலம் 541 புடவைகளும், கஷ்டநிவாரண சங்கத்தின் மூலம் 800 புடவைகளும், ஹௌரா மூலம் 8 மூட்டை புடவைகளும் கிடைத்துள்ளன. இவையன்றி, மூல்ஜி ஜேதா மார்க்கட் ஜவுளி வியாபாரிகள் 200 புடவைகளும், பம்பாய் ஜீவகாருண்ய சங்கத்தார் 500 புடவைகளும் அளித்துள்ளனர். அநேக மில் முதலாளிகள் பல பேல் புடவைகள் அனுப்ப ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஸ்ரீமதி அமிர்தகார் சிங்கின் தியாகப் பெருமையை என்னென்று புகழ்வது? வாழ்க, வாழ்க, பல்லாண்டு வாழ்கவென அம்மையாருக்கு வாழ்த்துக் கூறுகின்றோம்.

---

## முக்கிய அறிவிப்பு

ஆபீஸ் சம்பந்தமான கடிதங்கள் எழுதும்போது விலாசத்தில் தனிப்பட்டவரின் பெயரைக் குறிப்பிட் டனுப்புவதால் பல வித சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகையால், இனி கடிதங்கள் எழுதுவோர், விலாசத்தில் எவருடைய பெயரையும் குறிப்பிடாமல் கீழ்க் கண்டபடி விலாசம் குறிப்பிட வேண்டுமெனத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

1. **சங்க சம்பந்த மானவற்றிற்கு** :—'அமைச்சர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், பவழக்காரத் தெரு, சென்னை.'

2. **மித்திரன் சம்பந்த மானவற்றிற்கு** :—'மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத் தெரு, சென்னை.'

3. **மித்திரனில் வெளியிடவேண்டிய விஷயங்கள் அனுப்புவதற்கு** :—'ஆசிரியர், செங்குந்த மித்திரன், பவழக்காரத் தெரு, சென்னை.'

4. **கல்வி நிதி சம்பந்த மானவற்றிற்கு** :—'அமைச்சர், செங்குந்தர் கல்வி நிதி, பவழக்காரத் தெரு, சென்னை.'

**குறிப்பு** :—மித்திரனில் வெளியிடுவதற்காக ஆசிரியர் பெயருக்கு அனுப்பப்படும் விஷயங்களை மட்டும் எப்பொழுதும் புக் போஸ்ட் மூலம் அனுப்பலாம்.

## உற்சவ சாந்தி

கோவிலில் பிரம்மோற்சவம் 'ஜம்' என நடக்கிறது. இவ்வளவு சிறப்பாக இதுவரை எந்தக் காலத்திலும் நடந்து என் கண்களால் பார்த்தது கிடையாதெனப் பலரும் புகழ்கிறார்கள். தர்மகர்த்தர் மிகவும் பயபக்தியுடன் உற்சவங்களை நடத்தினார் என்பது உண்மைதான். எவ்வளவு பயபக்தியுடன்—அக்கரையுடன் நடத்தி யிருந்தாலும், தெரிந்தோ தெரியாமலோ உற்சவததில் குற்றங்குறைகள் நடந்திருக்கு மென்ற அபிப்பிராயத்துடன் பிராயச்சித்தமாக உற்சவங்களின் பின் உற்சவ சாந்தி செய்வது வழக்கமாயிருக்கிறது.



மகாத்மா காந்தியடிகள்

மகாத்மா காந்தி யடிகள் சென்ற ஆண்டு இறுதியில் ஹரிஜன முன்னேற்ற மஹோற்சவத்தைத் துவக்கினார். அது இம்மாதம் 2-ந் தேதி வரை மிகச் சிறப்பாகவே நடந்து முடிவு பெற்றது. ஆயினும், எக்காலத்திலும் அவ் வுற்சவமானது நடந்தவண்ண மிருக்க வேண்டு மென்பது அடிகளாரின் ஆவல். அந்த ஆவலைப் பூர்த்தி செய்ய இந்தியரனைவரும் அவரது பாதங்களில் காணிக்கைகளைக் கொட்டி யிருக்கிறார்கள். வெள்ளி தங்க நாணயங்கள், வெள்ளி ராட்டைகள், ஆபரணங்கள், படங்கள், பிரதிமைகள், சோப்புகள், பல காரங்கள், பழங்கள், மாலைகள் முதலிய கையில் கிடைத்த பொருளை—தத்தம் சக்திக்கேற்ப, இல்லை யென்னாது காணிக்கையாக வழங்கி இருக்கிறார்கள். எவ்வளவோ ஆசையோடு அவர்கள் அளித்த பொருளை அந்த புண்ணிய புருஷர் கையினாலாவது தொட்டுப் பார்த்தாரா? அதுதான் இல்லை. பக்கத்திலுள்ள ஒருவர் வாங்குகிறார். உடனே காந்தியடிகள் 'ஐந்து ரூபாய், பத்து ரூபாய், ஒரு தரம், இரண்டு தரம்' என்று கூறி பணத்திற்கு அவற்றை மாற்றி விடுகிறார்.

பொன்னையும் பொருளையும் விற்றுக்கொள்வதில் கவலை இல்லை. ஜனங்களது உள்ள உணர்ச்சியை உணர்த்துகின்ற உபசாரப் பத்திரங்களையும் ஏலம் போடுவதைப் பார்த்து யாருக்குத்தான் சிரிப்பு வாயைப் பிளந்துகொண்டு வெளியில் வராமல் அடங்கிக் கிடக்கும்.

இதெல்லாம் அவர் இஷ்டம். எப்படியாவது செய்து கொள்ளட்டும். உருண்டு புரண்டு வந்து காணிக்கை செலுத்திய பேர்வழிகளுக்கு ஒரு உபசார வார்த்தையாவது உண்டா? எல்லாவற்றையும் மூட்டை கட்டிக்கொண்டு, 'இந்த ஊரில் நான் எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை. மிகவும் குறைவாகவே கிடைத்திருக்கிறது.' என்று ஒரு போடு போட்டுவிட்டுப் புறப்படுவதென்றால், 'அட, ஆண்டவனே! இந்தக் குட்டு வாங்கிக் கொள்ளவா பொருளைக் கொடுத்தோம்' என்ற எண்ணம் எவருக்கேனும் உண்டாகாமலா இருக்கும். ஆனால் எனக்கு மட்டும் அந்த எண்ணம் உதிக்கவே இல்லை. கொடுத்த எல்லாவற்றையும் பெற்றுக்கொண்ட பின் 'காசியிலே, கங்கையிலே, கோதானம் பூதானம் செய்த பலன் உண்டாகட்டும்' எனக் கூறும் வதப்பாரோடு அவர் நெருங்கிய உறவோ அல்லது நட்போ கொண்டிருக்க வேண்டும் என்று மட்டும் என் அந்தராத்மா எனக்கு உணர்த்தியது.

மூட்டை கட்டிக்கொண்டதுதான் தாமதம். மறுவினாடி ஆளைப் பார்க்க முடியாது. வாயுவேகம், மனோவேகம் என்பதைத் தமிழ் நாட்டில் அவர் செய்த இந்த ஹரிஜன மஹோற்சவத்தில்தான் தெரிந்துகொள்ள வேண்டும். 'அப்பாடா! ஒரே நாளில் என்பாடு திக்குமுக்காடி விட்டது. அவரோடு ஒரு நாள் பிரயாணம் செய்வதே என்றால் சாத்தியப்படவில்லை' என்று கூறினார் ஸ்ரீமதி மூரியல் லெஸ்டர். காலை 4 மணிக்கு விழிப்பு, 4-30-க்குப் பிரார்த்தனை, 5-30-க்குப் போஜனம், 6 மணிக்கு யாத்திரை புறப்பாடு; தினந்தோறும் 30 முதல் 100 மைல் வரை பிரயாணம்; இடையில் எழெட்டு இடங்களில் பிரசங்கம்; இரவு 10-30-க்குப் படுக்கை என்றால் அது அந்தக் கோவணாண்டிப் பேர்வழியா லன்றி மற்றவர்களால் முடியக் கூடியதா?

அவரைப்பற்றி அடிக்கடி எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுவதுண்டு. அவர் என்ன பெல்லமா? ஜிலேபியா? ரகசியமான பாதைகளில் மறைந்து மறைந்து போனாலும் 'அதெல்லாம் விடமாட்டோம்.' என்று, ஜனங்கள் அவரை முற்றுகை யிட்டுச் சூழ்ந்துகொள்வதின் ரகசியந்தான் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. எத்தனை கூட்டங்களில் மூச்சுத் திணறினார். எத்தனை கூட்டங்களில் வெளியே வர வழி காணாமல் மதிலேறிக் குதித்தார்.

இந்தக் கஷ்டங்கள் அவரோடு தொலைவதுமில்லை. அவரைப் போன்ற ஜாடை கொஞ்சம் இருந்தால் போதும்; அவரும் இதே கஷ்டங்களை அனுபவித்துத்தான் தீரவேண்டி யிருக்கிறது. லாகூரில் ஒரு பெருங் கூட்டம் முடிந்ததும் மகாத்மா ஒருவர் கண்ணிலும் படாமல் வெளியே போய்விட்டார். புழுக்கம் பொறுக்க முடியாமல் தன் சட்டையைக் கழட்டி யிருந்த ஒரு கிழவர் அகப்பட்டுக் கொண்டா



ராம். எல்லாரும் அவரே மகாத்மா என நினைத்து, அவர் பாதத்தைத் தொட்டுக் கும்பிட்டுப் பேராரவாரம் செய்யவே அவர் மூர்ச்சித்து விழுந்து விட்டாராம். இப்படியா தன்னைப்போன்ற கோவணாண்டிகளுக்குக் கஷ்டத்தைத் தருவது.

பூனாவில் மகாத்மாமீது வெடிகுண்டு எறிந்தார்களாமே, அது ஒரு வேளை இந்தக் குற்றத்தின் தண்டனையாக இருக்குமோ என்று கூட எனக்கு எண்ணந்தான்.

அவர் தொடங்கிய மஹோற்சவம் இந்த 2-ந்தேதி காசியிலே ஒருவாறு பூர்த்தி யடைந்தது. அதன் தர்மகர்த்தா என்ற முறையில் ஏதாவது குற்றங் குறைகள் நேர்ந்திருக்குமென்றே 7-ந்தேதி முதல் ஒருவாரம் உண்ணாவிரதம் இருந்து உற்சவ சாந்தி செய்து முடித்தார். 'எனது சுற்றுப் பிரயாணமானது ஓர் பிராயச்சித்த உபவாசத்துடன் முடிவது பொருத்தமாகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது. தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றங்களுக்குப் பரிகாரமாக இவ்வுபவாசம் இருக்கட்டும்' என்று அவரே கூறியிருப்பது இது உற்சவ சாந்திதான் என்பதை மெய்ப்பிக்கின்றது.

ஆனால் மகாத்மாவோ மகா தந்திரசாலி. எந்தக் காரியத்தையும் ஒரே ஒரு காரணத்தை முன்னிட்டுத் தொடங்குவது அவர் வழக்கமில்லை. எனவே இந்தப் பிராயச்சித்த விரதமும், சனாதன தர்மத்தைத் தலையில் சுமந்து திரியும் பண்டித லால்நாதர்மீது சீர்திருத்தத் தொண்டர்கள் ஹிம்சை முறையைக் கையாண்டதற்குப் பிராயச் சித்தமாகவே தொடங்கப்பட்டதென அவர் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்விரதத்திற்கு இந்த இரண்டு காரணங்களே யன்றி இன்னும் வேறு காரணங்களும் உள்ளன. 'இப்போராட்டத்தில்இது புதியதோர் சுத்தமான சகாப்தத்தை ஆரம்பிப்பதாக இருக்கட்டும்; இந்த இயக்கத்தில் இப்போது சேர்ந்துள்ளவர்களுக்கும் இனி சேரப்போகின்றவர்களுக்கும் மனோவாக்கு காயத்தால் அசத்தியம், ஹிம்சையாகியவற்றை ஒழித்து திரிகரண சுத்தியாக இருக்க வேண்டுமென்பதற்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்' என்று அவர் வெளியிட்டிருப்பதால் இந்த நான்கு காரணங்களுக்காகவே இவ்விரதம் துவங்கப்பட்டதென்றே கருதவேண்டும்.

இவ்வளவு காரணங்கள் இருக்கிறபோது 'இவ்விரதத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டால் அவர் நிறுத்துவாரா? அல்லது லால்நாதரின் ஒரே காரணத்தைக்கொண்டு 'அந்த குற்றம் என்னால்தான் நேர்ந்தது. ஆகையால் நானே விரதம் இருக்க வேண்டும்' என, ராஜபுதன ஆதி இந்து போர்டு காரியதரிசி ஸ்ரீராம நாராயண சௌத்திரியும், 'நானே லால்நாதரைத் குடையால் அடித்துக் காயப்படுத்தினேன். ஆகையால் உங்கள் இருவருக்கும் அந்த விரதம் இருக்க உரிமை இல்லை. நான்தான் பிராயச் சித்தம் செய்து கொள்ளவேண்டும்' என சீர்திருத்தத் தொண்டர் ஒருவரும் கூறினால்

பிடிவாதப் பேர்வழி விட்டுக் கொடுப்பாரா? பிராயச்சித்தம் செய்து கொள்வதென்றால், ஏதோ ஒன்று தலைமேல் இடிந்து விழுவதாக நினைக்கக்கூடிய இக்காலத்தில், இந்தப் பிராயச்சித்தத்திற்கு இப்படி மூன்று பேர்கள் போட்டியிடுவது கலியுக அதிசயங்களில் ஒன்று போலும்.

இத்தனை போட்டிகளினிடையே மகாத்மா விரதத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டார். இனி ஆண்டவன், அவர் தொடங்கிய ஹரிஜன மகோற்சவம் சிறப்பாக நடைபெறத் துணைபுரிய வேண்டுமென்பதே அனைவரது பிரார்த்தனையாகும். நாமும் அப்பிரார்த்தனையில் சேர்ந்து கொள்வோமாக.

மகாத்மா காந்திக்கு—ஜே!


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் ஏதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறேம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:—"எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வந்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.


**சுருக்கமாயில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்)**

# செங்குந்தர் கல்வி நிதி

## உபகாரச் சம்பளம்

10-8-'34-ந் தேதி கூடிய காப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட மாணவர்களுக்கு அவரவர் பெயருக்கு எதிரில் குறிக்கப் பெற்றுள்ள தொகை 1934-35-ம் ஆண்டுக்கு உபகாரச் சம்பளமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

### சென்னை

1. C. K. ருக்மணி, கான்வென்ட் ஸ்கூல், திருமயிலை. ரூ. 15
2. ஈஸன், 3-வது பாரம், ஸென்ட் தோம் ஹை ஸ்கூல், திருமயிலை. ரூ. 10
3. சுணேஸன், 1-வது பாரம், P. S. ஸ்கூல், திருமயிலை. ரூ. 10

### செங்கற்பட்டு ஜில்லா

4. ஐ. பழனி, 6-வது பாரம், மாடல் ஸ்கூல், சைதாப்பேட்டை. 18
5. அண்ணாமலை, 3-வது பாரம், போர்ட் பாடசாலை, உத்திரன்மேரூர். ரூ. 11
6. N. கணபதி, 4-வது பாரம், பச்சையப்பன் உயர்தர பாடசாலை, காஞ்சீபுரம். ரூ. 21
7. P. C. ஆறுமுகம், 4-வது பாரம், மாடல் ஸ்கூல், சைதாப்பேட்டை ரூ. 18
8. M. S. கிருஷ்ணசாமி, 5-வது பாரம், பச்சையப்பன் உயர்தர பாடசாலை, காஞ்சீபுரம் ரூ. 21
9. E. கோவிந்தராஜன் ,, ,, ரூ. 21

### வட ஆற்காடு ஜில்லா

10. K. ஜெயராமன், 5-வது பாரம், தொண்டை மண்டலம் உயர்தர பாடசாலை, சென்னை ரூ. 21
11. S. கணபதி, 4-ம் வகுப்பு, போர்டு ஹைஸ்கூல், திருவத்திபுரம் ரூ. 5
12. M. A. தேவராஜன், 2-வது பாரம், போர்டு ஹைஸ்கூல் திருவத்திபுரம் ரூ. 11

### தென்னாற்காடு ஜில்லா

13. வெள்ளை வாரணன், வித்வான் முடிவு, அண்ணாமலை தமிழ்க் கல்லூரி, சென்னை ரூ. 10
14. N. சம்பந்த சுவாமி, சீனியர் இண்டர் மீடியட், பச்சையப்பன் கல்லூரி, சென்னை ரூ. 35
15. V. குப்புசாமி, ஜூனியர் இன்டர் மீடியட், அண்ணாமலைக் கல்லூரி, சிதம்பரம் ரூ. 35
16. M. சண்முகஸ்வாமி, 3-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல் திருப்பாதிரிப் புலியூர் ரூ. 18

17. N. குழந்தைவேலு, 4-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல் கடலூர் ரூ. 18

தஞ்சை ஜில்லா

18. K. S. சோமசுந்தரம், 6-வது பாரம், நேஷனல் ஹைஸ்கூல், நாகப்பட்டணம் ரூ. 21

சேலம் ஜில்லா

19. K. சின்னையா, 6-வது வகுப்பு, ஹையர் எலிமெண்டரி ஸ்கூல், குருசாமி பாளையம் ரூ. 10

கோயமுத்தூர் ஜில்லா

20. V. N. மாரியப்பன், 5-வது பாரம், முனிசிபல் ஹைஸ்கூல் கோயமுத்தூர் ரூ. 18

கோர்ச்சின் ஸ்டேட்

21. A. கிருஷ்ணன், 4-வது பாரம், சர்க்கார் ஹைஸ்கூல், சித்தூர் ரூ. 21

குறிப்பு:—இவர்களனைவருக்கும் முதல் தவணைத் தொகை செப்டம்பர் மாத இறுதியில் அனுப்பப்படும். இரண்டாவது தவணை அடுத்த பிப்ரவரி மாத இறுதியில் மாணவர்களிடமிருந்து தமது மார்க்குகள், கல்லூரித் தலைவரின் சிபார்சு, தமது நடக்கை, கல்வி யபிவிருத்தி ஆகியவை பற்றிய நற்சாட்சிப் பத்திரம் இவை கிடைத்தபின் அனுப்பப்படும்.

151, பவழக்காரத் தெரு, சென்னை. S. T. நடேச முதலியார், அமைச்சர்.

---

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமென்றி இலங்கை, இரங்கூன், பினங்கு, தென்னுப்பிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10
அரைப்பக்கம் ரூ. 5 காற்பக்கம் ரூ. 3

# கிளியும்—பூனையும்

[T. M. வாசுதேவன், துறையூர்]

இரவு பத்து மணி யிருக்கலாம். சந்திரன் தனது முழு உருவத்துடன் வானத்தில் பிரகாசித்துக்கொண் டிருந்தான். மெல்லிய மந்தமாருதம் வீசிக்கொண் டிருந்தது. 'நேரு விலாஸ்' பங்களாவின் பிற்பகுதியி லிருந்த புஷ்பத் தோட்டத்தின் இடையில் ஒரு மேடையின்மீது ஜானகி அமர்ந்திருந்தாள். அவள் கண்கள் யாரையோ எதிர் நோக்குவனபோன் றிருந்தன.

சில நிமிஷங்கள் கழிந்ததும் ஒரு வாலிபர் அப்புஷ்பத் தோட்டத்தை நோக்கி வந்துகொண் டிருப்பது ஜானகியின் கண்களில் தோன்றியது. அவள் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தாள். அவள் முகம் ஒரு புது ஒளியைப் பெற்றது. அவள் எதிர்பார்த்ததும் அந்த வாலிபரைத்தான். அந்த வாலிபரும் அருகே வந்து ஜானகியின் எதிரில் அமர்ந்தார். இருவரும் சிறிது நேரம் மௌனம் சாதித்தனர். பின்பு ஜானகி தன் உள்ளக் களிப்பை, நாணம் ஒருபுறம் உள்ளே வலிக்கவும் அதற்குச் சற்றும் இளைக்காது துணிந்து வாய்விட்டுக் கூறத் தொடங்கினாள்.

"பிராண காந்த! நாம் இப்பொழுதிருக்கும் இந்தச் சந்தோஷகரமான நிலைமை எனக்குக் கோடிக்கணக்கான பவுன்களைக் கொடுத்தாலும் ஏற்படாது. இந்த நிலை எப்பொழுதும் நீடித்து நிற்க இறைவன் அருள்புரிவான் என்றே நினைக்கிறேன்." என்றாள்.

ஸ்ரீதரன் (அதுதான் அந்த வாலிபர் பெயர்) பிரிய ஜானகி! ஆம்! என் மனம்கூட அவ்வளவு ஆனந்தத்தைத்தான் அடைகிறது. ஆனால், இச் சந்தோஷம் நீரில் தோன்றும் நீர்க்குமிழியைப்போல் விரைவில் உடைந்துவிடுமோ வென்றுதான் பயப்படவேண்டி யிருக்கிறது.

ஜானகி:—(திடுக்கிட்டு) என்ன! நமது சந்தோஷம் நீர்க்குமிழியைப்போல் உடைந்து விடுமென்று கூறுகிறீர்கள்! ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?

ஸ்ரீதரன்:—நீயோ செல்வத்திற் சிறந்த சீமாட்டியின் மகள். நானோ ஓர் ஏழை மாணவன். இன்னும் சிறிது நாளில் நீ ஒரு சீமானின் மனைவியாய்ப் போய்விடுவாய். நான் எப்பொழுதும் போன்றே விளங்குவேன். அப்போது நீயும் நானும் உரையாடுவதெங்ஙனம்? உவகைக் கடலில் மூழ்குவதெப்படி? எனவே, நமது சந்தோஷம் நீர்க்குமிழிக்கு ஒத்ததல்லவா?

ஜானகி :—பிரிய காதலரே! அவ்வாறு கூறாதீர். நான் எத்துயர் நேரிடினும் தங்களையே மணப்பேன். இது மட்டும் உறுதி.

ஸ்ரீதரன் :—ஆம்! நீ உறுதி கூறிவிட்டாய். ஆனால் உனது தந்தை என்ன கூறுவார் என்பதை யோசிக்க வேண்டாமா?

ஜானகி :—உம். எனது தந்தை என் விருப்பத்திற்கு மாறாக எப்பொழுதும் நடக்கமாட்டார். எனது தாயும் அப்படியே. மேலும் நான் தங்களைக் காதலிப்பதை அவர்கள் கேட்டால் அளவற்ற ஆனந்தமடைவார்கள். அவர்கள் ஒருக்கால் எனது வேண்டுகோளைப் புறக்கணித்துவிடுவார்களானால் இப்பாழ் உடம்பு இவ்வுலகத்தில் இராது.

ஸ்ரீதரன் :—சே, கடைசி வார்த்தை என் உயிரைத் துளைக்கிறது. உன் உறுதியான உள்ளத்தைக் கண்டு உன்னைப் பெற்றதாகவே மகிழ்கின்றேன்.

இவ்வாறு உரையாடிய பின் இருவரும் பிரிந்தனர்.

* * *

நாட்கள் பல பறந்து சென்றன. ஜானகிக்கு விவாகம் செய்ய வேண்டுமென்று அவனது தந்தை இராமசாமி முதலியாரும், அவரது மனைவி விசாலாக்ஷி அம்மையாரும் தீர்மானித்து அதற்கான முயற்சிகளைச் செய்து வந்தார்கள். கடைசியில் அடுத்த கிராமத்திலிருந்த கோடீஸ்வரரான குருசாமி முதலியாருக்கு ஜானகியை பாணிக்கிரஹணம் செய்து கொடுப்பதாய்த் தீர்மானமாயிற்று.

இச் செய்தி ஜானகிக்கு எட்டியது. அவள் மனம் துடித்தது. கண்கள் அனல் கக்கின. அவள் நேரே தாயிடம் சென்றாள்.

"அம்மா! என்னை இப்படியே கொன்றுவிடுங்கள். புண்ணியம்."

விசாலாக்ஷி அம்மாள் திடுக்கிட்டாள். எனினும் அதை மறைத்துக்கொண்டு ஜானகியின் கண்களைத் துடைத்து, அவளைச் சிறு குழந்தைபோல் தன் மடிமீது அமர்த்தி, முத்தமிட்டவாறே "ஏனம்மா! நீ ஏன் அப்படிக் கூறுகிறாய்?"

"ஆம்! நீங்கள் செய்திருக்கும் தீர்மானத்தைவிட இது பல மடங்கு மேலானது."

"தீர்மானமா! என்ன தீர்மானம்?"

"நீங்கள் என்னை குருசாமி முதலிக்கு விவாகம் செய்துகொடுக்க உத்தேசித்திருக்கிறீர்களல்லவா?"

"ஆம்! அதனால் உனக்கு லாபந்தானே! அவர் கோடீஸ்வரர், நல்ல அறிவாளி, நாலாம் கிளாஸ் வரையில் படித்திருக்கிறார்."

"அம்மா! நீங்கள் இன்னொருமுறை அப்படிக் கூறாதீர்கள், எனக்குக் கோபம் வருகிறது. அவன் சுத்த முட்டாள், முரடன், மொடாக்குடியன், கொலை பாவங்களுக்கு அஞ்சாத பாவி; உயிருடன் கோழிகளையும், ஆடுகளையும் விழுங்குபவன்; ஜீவகாருண்ய மற்ற



பாதகன்; புட்டி புட்டியாக சீமைச் சாராயம் குடிப்பவன். அவனை நினைக்கும் போதே உள்ளம் நடுங்குகிறது. அப்படிப்பட்டவனுக்கா என்னைக் கொடுக்கப் போகிறீர்கள்?"

"சே! அப்படிச் சொல்லாதே. அதெல்லாம் வெறும் கட்டுக்கதை. அவர் நல்ல தங்கமான மனுஷர்."

"அந்தத் தங்கமான மனுஷர் எனக்கு வேண்டாம்."

"பின்னே யாரைத்தானம்மா உனக்குப் பிடித்திருக்கிறது?"

"நமது வீட்டிற்குச் சிறிது தூரத்திற்கப்பாலிருக்கும் 'ஸ்ரீதரன் பி. ஏ.' அவர்களை எனது கணவராக்குங்கள். அவருடன் நான் சந்தோஷத்தோடு காலங்கழிப்பேன்."

"என்ன! ஸ்ரீதரனையா? அந்தக் கோவணாண்டியையா? ஏன் உன் புத்தி வர வரக் கெட்டுப் போகிறது? உனக்கு வெட்கமாயில்லை!"

"இதிலென்ன அம்மா வெட்கம்? பணம் இன்றைக்கிருக்கும், நாளைக்குப் போகும். ஆனால் குணமும் கல்வியும் எப்பொழுதும் போகாது."

"நீ என்ன சொன்னாலும் கண்டிப்பாய் முடியாது. இந்த விஷயத்தில் என் தீர்ப்பே முடிவானது. மேலும், நீ சிறு குழந்தை; உனக்கு உலக அநுபவம் தெரியாது."

"அம்மா! நீங்கள் கூறுவது சரி. ஆயினும் என் விருப்பத்திற்கு மாறாக நடந்தால் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள். இது திண்ணம்."

கடைசி வார்த்தையைக் கூறிவிட்டு ஜானகி விம்மி விம்மி அழலானாள்.

தனது ஒரே புத்திரியின் ஒரு நாளுமில்லாத துயரத்தைக் கண்டவுடன் விசாலாக்ஷியின் மனமும் இளகியது. "கண்ணே! உன் தந்தையிடம் உன் இஷ்டத்தைக் கூறி உன் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கிறேன்," என்று ஆறுதலளித்துவிட்டு அவள் சென்றாள்.

* * *

இரவு பனிரெண்டு மணி. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஜானகியின் வயிரமுள்ள நெஞ்சு எதற்கும் பயப்படவில்லை. நீண்ட கடிதம் ஒன்றை எழுதி மேஜைமீது வைத்தாள். பின்னர் தன் முன்னிலையில் இருந்த கண்ணாடி டம்ளரில் ஒரு பவுடரைக் கலந்தாள். கண்களை மூடிக்கொண்டு கடவுளை நமஸ்கரித்தபடியே டம்ளரை மேலே தூக்கினாள். அடுத்த நிமிஷம் கண்ணாடி டம்ளர் தூள் தூளாகப் பறந்தது. ஜானகி மருண்ட பார்வையுடன் விழித்து நோக்கினாள். அங்கே அவள் தந்தை துக்கத்தோடு நின்றுகொண்டிருந்தார்.

"கண்ணே! சில நாட்களுக்கு முன் நான் உன்னை குருசாமி முதலிக்கு விவாகம் செய்விக்க நிச்சயித்திருந்தேன். ஆழ்ந்து விசாரித்ததில் அவன் தாசிலோலனென்றும், கொலைப் பாதகனென்றும்; குடிகாரனென்றும் தெரிந்தது. மேலும், நீ ஸ்ரீதரனைக் காதலிப்பதை உன் அன்னையின் மூலம் அறிந்தேன். உன்னை ஸ்ரீதரனுக்கே விவாகம் செய்துவைக்கப் போகிறேன். அநியாயமாகக் கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்க விருந்தேன். நல்ல வேளையாக அதிலிருந்து தப்பினேன். அதோடு உன் தற்கொலையையும் தடுக்கும் பாக்கியம் பெற்றேன். கண்ணே! இனி நீ அஞ்சாதே. என் முட்டாள் தனத்தை நினைந்து வருந்துகிறேன்." என்று கனிவுடன் கூறலானார் ராமசாமி முதலியார்.

அடுத்த சில நாட்களில் ஜானகிக்கும், ஸ்ரீதரனுக்கும் விவாகம் வெகு சிறப்பாய் நடந்தது. அவர்கள் இல்வாழ்க்கையை வெகு இன்பகரமாய் நடத்தி வருகிறார்கள்.

தாய்மார்களே! நீங்கள் கிளியை வளர்த்துப் பூனையினிடம் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது அவர்களுக் குகந்த மணாளர்களிடம் அளிக்கப் போகிறீர்களா?

---

இனாம்! இனாம்

ஒரு வருட சந்தா இனாம்.

ஒரு வருட முன் பணத்துடன்

ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து

அனுப்புவோர்க்கு

ஒரு வருட செங்குந்த மித்திரன்

இனாமாக அனுப்பப்படும்

இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்

# கறைகளைப் போக்கும் வழி

(T. M. செங்கோட முதலியார், திருச்செங்கோடு)

(1) தேநீர், காப்பி முதலியவைகளின் கறைகளை நீக்க :—

அப்போதுதான் பட்ட புதிய கறையாய் இருந்தால், நன்கு காய்ச்சிய பசும் பாலில் கறைபட்ட இடங்களைத் தோய்த்து வைத்தால் கறை நீங்கிவிடும்.

பழைய கறையாயிருந்தால், ஒரு வாயகன்ற பாத்திரத்தை எடுத்து அதன் மேல் அத்துணியைப் போட்டு நன்றாய் இழுத்துப் பிடித்துக் கொண்டு, கறையின் மேல் 'போரக்ஸ்' (Borax) பொடியைத் தூவி நன்றாய்த் தேய்த்து, சிறிது கொதித்த நீரை ஊற்றினால் கறை நீங்கிவிடும்.

(2) மருந்துக் கறைகளைப் போக்க :—

கறைபட்ட இடங்களில் அம்மோனியாவையும், (Ammonia) டில்லர்ஸ் எர்த்தையும் (Tiller's Earth) எடுத்துப் பசையாக்கிப் பூசி, சிறிது நேரம் காய வைத்து எடுத்து, நன்றாகத் தண்ணீரில் அலசினால் கறை மறைந்துவிடும்.

(3) வியர்வைக் கறையை நீக்க :—

அம்மோனியாவெனும் திராவகத்தைக் கொஞ்சம் வெந்நீருடன் கலந்து ஒரு மணி நேரம் அதில் கறை பட்ட இடத்தை ஊற வைத்து, அதன் பின், எலுமிச்சஞ் சாற்றை அதன் மேல் தடவி வெந்நீரில் அலசி எடுத்துவிடவும்.

(4) பட்டு வஸ்திரங்களில் எண்ணெய் சிக்கெடுக்க :—

அப்ளாகாரம், அஸ்கா, எலுமிச்சஞ் சாறு ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து, கொஞ்சம் ஜலத்தில் கரைத்து, அதில் எண்ணெய் சிக்குள்ள பட்டு வஸ்திரத்தைத் துவைத்து, ஒருநா ளிரவு ஊற வைத்து, மறுநாள் தோய்த்து உலர்த்தினால் கறை இருக்காது. இம்முறையில் பட்டு வஸ்திரங்களைத் தோய்த்தால் பளபளப்பாக இருக்கும்.

(5) சரிகையின் அழுக்கைப் போக்க :—

யழைய கோதுமை ரொட்டித் துண்டுகள் சிலவற்றை ஒரு கோப்பையிலிட்டு, அதில் சிறிதளவு நீல பவுடரைச் சேர்த்துத் தண்ணீர் விட்டு இரண்டையும் பிசைந்து, அதை அழுக்கு சரிகையின் மேல் தடவி, காய வைத்து உலர்த்திய பின் ஒரு பிரஷ்ஷை (Brush) எடுத்து அழுத்தித் தேய்க்க வேண்டும். பிறகு, ஒரு வெல்வெட் துண்டினால் நன்றாக அப்பசைகளைப் போகும்படி துடைத்துவிட்டால் புதிய சரிகைபோல் பளபளவென மின்னும். பார்வைக்கு வெகு அழகாய் இருக்கும்.

# எங்கே எனது நாடு?

(சுதந்திரச் சங்கிலிருந்து எடுக்கப்பட்டது)

("யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை; ஆனால் எனது நாட்டைப் பாதுகாக்க வேண்டும். இதுதான் எனது விருப்பம்." என்றார் அமெரிக்க ஐக்கிய சமஸ்தானத்து ராணுவத் தலைவர். "படையை நாம் திரட்டித் தயாராய், யுத்தத்துக்கு முஸ்தீப்பாய் இருக்கவேண்டும்" என்று அமெரிக்கருக்கு அவர் ஓர் உபதேசம் செய்திருக்கிறார். அந்த உபதேசத்துக்கு நடுவேதான் மேற்கூறியவாறு தமது நாட்டைப் பாதுகாக்க வேண்டியதே தமது விருப்பம் என்று அவர் சொன்னார். இந்த அபத்தத் தேசபக்தியைக்கண்டு ஆத்திர மடைந்த ஹொர்மான் எப். ரீசத் என்பவர் 'நாளைய உலகம்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் பின் வரும் விஷயத்தை எழுதி யிருக்கிறார்.)

"எனது நாட்டை"க் காப்பாற்ற வேண்டுமாம்! ஆனால், எங்கே யிருக்கிறது 'எனது நாடு'? அட்லாண்டிக் சாகரம், பசுபிக் சமுத்திரம், கானடா, மெக்ஸிகோ என்ற இவற்றால் எல்லை கட்டப்பட்ட பூகோள விஸ்தீரணம் மாத்திரந்தான் எனது நாடா யிருக்க வேண்டுமென்று யார் தீர்ப்பு சொன்னது? 1492-ம் வருஷத்துக்கும் இன்று தினத்துக்கும் இடைப்பட்ட காலத்திலே வாழ்ந்த மனிதர்களையும், வளர்ந்த ஸ்தாபனங்களையும், நிகழ்ந்த சம்பவங்களையும் மட்டிலுமே தழுவி நிற்கவேண்டும் எனது நாடு என்று யார் தீர்ப்பு சொன்னது? எனது நாட்டுக்கு இவ்வாறு எல்லை கட்டி அர்த்தம் சொல்ல யாருக்கு உரிமையுண்டு?

மனிதருக்கு நீதி வழங்க வேண்டுமென்று தீர்க்கதரிசி ஏசாயா எங்கே வாய்திறந்து மொழிந்தாரோ அங்கே இருக்கிறது எனது நாடு. ஆத்ம பரிசுத்தமான வாழ்வே உண்மை

(முன்பக்கத் தொடர்ச்சி)

(6) பட்டாடைகளில் படும் கறைகளை நீக்க :—

எஸ்ஸென்ஸ் ஆப் லெமன் (Essence of Lemon) ஒரு பங்கும், டர்பென்டைன் (Turpentine) ஒரு பங்கும் சேர்த்து ஒரு புட்டியில் வைத்துக்கொள்ளவும். பட்டு வஸ்திரங்களில் கறை படும்போது, மேற்கண்ட தைலத்தை ஒரு சிறிய பிரஷ்ஷினால் இரண்டு, மூன்று துளிகள் விட்டு கறை பட்ட இடங்களை நன்கு தேய்த்தால் கறை மறைந்துவிடும்.



208448

யானது என்று பிளேட்டோ எங்கே பிரகடனம் செய்தாரோ அங்கே யிருக்கிறது எனது நாடு. ஏசுபெருமான் எங்கே மனித குலத்தின் விடுதலைக்காகத் தம் ஆவியையே அர்ப்பணம் செய்தாரோ அங்கே யிருக்கிறது எனது நாடு. பிரான்ஸிஸ் மகான் எங்கே ஜீவகாருண்ய வாழ்க்கை நடத்தினரோ அங்கிருக்கிறது எனது நாடு. ஆன்ம விடுதலைக்காக லூதர் எங்குப் பாடுபட்டாரோ அங்கே உளது என் நாடு. மனித வாழ்க்கைக் காட்சிகளைத் தமது நாடகங்களிலே ஷேக்ஸ்பியர் பெருக்கிக் குவித்தது எங்கேயோ அங்குளது என் நாடு. எங்கே சிருஷ்டி கர்த்தாவின் விந்தை வழியை டார்வின் கண்டுபிடித்தாரோ அங்கிருக்கிறது எனது நாடு. சுதந்திரராஜ சாசனமான 'மாக்னகார்ட்டா' எங்கு எழுதப்பட்டதோ அங்கு யிருக்கிறது எனது நாடு. மில்டன் பாடினதெங்கேயோ, ரெம்பிராண்ட்டின் ஓவியம் பிறந்தது எங்கேயோ, கதேயின் கற்பனை தோன்றியது எங்கேயோ—அங்கெல்லாம்தான் எனது நாடு.

காலமும் வெளியும் செய்த சூழ்ச்சியிற் பிறந்த இயற்கை நிகழ்ச்சிகளுக்கே அடங்கி ஒடுங்கி நான் பக்தி செலுத்தும்படியாக இந்தக் குள்ளக்கோடுகளை எல்லையாய்க் கிழிப்பவர் யார்?

வாள் துணையின்றி காந்தி எங்கே சுதந்திரப்போர் ஒன்றை நடத்துகின்றாரோ அங்கிருக்கிறது எனது நாடு. சுவீட்ஜர் என்ற வைத்தியர் கறுப்பு மனிதரின் உடல் நோய்க்கு மருந்தளித்து எங்குப் பணிவிடை புரிகிறாரோ அங்குத்தான் எனது நாடு. உரிமை யற்றவருக்கு கர்கவா என்பவர் உரிமைதேட எங்கே கிளர்ச்சி செய்கிறாரோ அங்கு உளது என்நாடு. ஹிட்லரின் காட்டுமிராண்டித்தனத்தை உறுதியாய் நின்று எதிர்க்கும் வீரர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கிருக்கிறது எனது நாடு.

ஆம், எனது நாட்டைக் காப்பாற்றுவேன். எனது நாட்டுக்காக சகல எதிரிகளையும் எதிர்த்து நான் போராடுவேன். ஆனால், எங்கே யிருக்கிறது எனது நாடு? யார் அதன் எதிரிகள்?

தர்ம ஸ்தாபனத்திற்காக, கலா சௌந்தரியத்துக்காக, சுதந்திர வாழ்வுக்காக, சத்தியத்துக்காக, சமாதானத்துக்காக, சகோதரத்துவத்திற்காக ஆண்களும், பெண்களும் கொடியை உயர்த்தி யிருப்பது எங்கேயோ அங்குத்தான் இருக்கிறது எனது நாடு. மனிதர்களின் உடம்பைச் சுய லாபத்துக்காகவும், மனத்தை அதிகாரத்துக்காகவும் எவர்கள் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்களோ, பிறர் உரிமைகளைக் காலடியில் போட்டு மிதிப்பவர் எவரோ, ஏனையோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதற்கான கதவுகளைத் தாளிட்டு மூடிவைப்பவர் எவரோ, திடநம்பிக்கை, பொறுமை என்ற இருள் சூழ்ந்த பிசாசுகளைப் போற்றி வணங்கிச்

# கொஞ்சம் ஊன்றிப் பாருங்கள்

400 கோடி ரூபாய். எவ்வளவு பெருந்தொகை. இத்தொகையை நமது கண்மூடித்தனத்தால்,—அஜாக்கிரதையினால் ஆண்டுதோறும் அயல் தேசங்களுக்குக் கொட்டிக் கொடுத்து வருகின்றோம். இதனைக் கேட்டதும் அறிவு படைத்த ஒவ்வொரு இந்தியனது மூளையும் கிருகிருத்துச் சுழலுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வாறு வருடந்தோறும் கொடுக்கின்ற இப்பெருந் தொகையினால் அந்நிய தேசத்தவர்கள் கொழுத்து வருகிறார்கள். நமது சகோதரர்களோ பட்டினியால் வதைகின்றார்கள். நமது தேசம் நாளுக்கு நாள் நலமும் பொலிவுங் குன்றி, நலிவும் ஏழ்மையும் அடைகின்றது. உலகத்திலேயே தற்போது மிகவும் வறியனாய், தினசரி வருமானம் ஒரு அணா ஏழு பைசாவாய்த் திகைக்கும்படி இந்தியர்களைச் செய்திருக்கிறது. இந்த நிலை நீங்குவதற்கு—நமது வறுமை, பிணி, அறியாமை, அதனால் வந்த மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிவதற்கு, இந்தியாவில் பிறந்த—இந்திய இரத்தம் ஊறப்பெற்ற ஒவ்வொரு மனிதனும் உழைக்க வேண்டியது அவனது பிறப்புரிமை யல்லவா? நமது தேசத்தில் சுபிட்சம் நிலவ வேண்டுமாயின்—நாம் க்ஷேமமுற நாடினால்—ஒவ்வொரு இந்தியனும் வயிறார உண்டு, உடல் மூட உடுத்து, மனம் நிறையக்கற்று நல்வாழ்வு வாழ விரும்பினால் இவ்வாறு ஆண்டுதோறும் கொள்ளை போகும் நமது செல்வத்தைத் தடுத்து, தேசீய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

400 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டுதோறும் வெளி நாடுகளுக்குச் செல்லும் நமது ஓட்டை வழிகளைப் பாருங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | பருத்தி, பட்டு துணிகளுக்காக | 70 கோடி ரூபாய். |
| 2. | மதுபானங்கள், சாராய வகைகளுக்கு | 100 கோடி ,, |
| 3. | அயல் நாட்டு உப்பு வகைகளுக்கு | 20 கோடி ,, |
| 4. | அயல் நாட்டுச் சர்க்கரைக்கு | 20 கோடி ,, |

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பவர் எவரோ, சென்றதையே நினைத்து நினைவழிந்து நிற்பவர் எவரோ, தாம் விரும்பி நாடும் உரிமைகளைப் பிறருக்கு வழங்க மறுப்பவர் எவரோ—அவர்கள்தாம் எனது பகைவர், இத்தகைய சகல எதிரிகளிடமிருந்தும் எனது நாட்டை நான் காப்பாற்ற வேண்டும். அதற்குக் கடவுள் துணை புரிவாராக!



| | | |
|---|---|---|
| .5 | வாசனைத்திரவியம், ஸோப்பு, மாவுகளுக்கு | 8 கோடி ,, |
| 6. | ஆகார தினுசுகள் | 10 கோடி ,, |
| 7. | வீண் டாம்பீகச் சாமான்கள், காகிதம், பேனா, பென்ஸில்கள், மருந்துகள் | 8 கோடி ,, |
| 8. | கண்ணாடிச் சாமான்கள், பீங்கான்கள், வளையல்கள் | 10 கோடி ,, |
| 9. | ஹாட்ஸ், பூட்ஸ் (Hats and Boots) துருக்கி தொப்பிகள் முதலியன | 6 கோடி ,, |
| 19 | மோடார் என்ஜின் முதலியன | 50 கோடி ,, |
| 11. | பெட்ரோல், மோபில் ஆயில், கிரோஸின் மற்றும் பல சில்லரைச் சாமான்களில் | 100 கோடி ,, |

உங்களுக்கு உண்மையில் தேசாபிமானம் இருக்கிறதா? ஏனைய நாட்டினர்போல் நீங்களும் உன்னத நிலையில் வாழ விரும்புகிறீர்களா? பட்டினியால் வாடும் உமது சகோதரர்களை ஆதரிக்க ஆசைப்படுகிறீர்களா? இந்த எண்ணம், விருப்பம், ஆசை உங்களுக்கு இருக்குமானால் கூடியவரையில் அன்னியப் பொருள்களை அகற்றிவிடுங்கள். எந்தப் பொருளையும் வாங்குவதற்கு முன் அது இந்தியர் மூலதனத்தினால், இந்தியர் உழைப்பினால், இந்தியாவில் உற்பத்தி செய்யப் பெற்றதா? அதற்குத் தரும் பணத்தில் ஒரு செல்லாக் காசேனும் நமது நாட்டின் எல்லையைக் கடந்து செல்லாதிருக்குமா? என்று ஆய்ந்து பார்த்து வாங்குங்கள்.

ராஜீய விஷயங்களில் நமக்குள் எவ்வித அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும் நாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், பொதுவாக நம் நாட்டுத் தொழில், வியாபாரங்களை ஆதரித்து, அவை முன்னேற்றமுறச் செய்ய நமது பூரண ஆதரவைத் தரவேண்டியது நமது முதற்பெருங் கடமை யாகும். நமது ஏழைத் தொழிலாளிகள் இரண்டொரு ஆண்டுகளாகத் தொழிலற்று, வருவாய் காணாது உள்ளஞ் சோர்ந்து, உடலம் வாடி, குடல் காய்ந்து எலும்புந் தோலுமாய் கஷ்டப்படுவதைச் சகித்துக்கொண் டிருப்பது மனிதத் தன்மைக்கே முற்றிலும் மாறுபட்ட செய்கை யல்லவா? இக்கொடிய—சகிக்க முடியாத நிலையினை மாற்ற முயற்சிப்பதில் கட்சியினையும், ராஜீய விஷயத்தினையும் புகுத்துவது சிறிதேனும் பொருத்த முடையதாகுமா?

ஆதலின், சகோதரர்களே!

ஏழைகள் சுகமுற, இந்தியரின் வறுமையும் அறியாமையும் தொலைய, நமது பொருளாதாரக் கஷ்டம் நீங்க, பாரதி தேவியின் அடிமைத் தளை அழிய எக்காலத்தும், எவ்விதத்தும் நமது தேசியக் கைத்தொழில்களுக்கு—இந்தியாவில் உற்பத்தியாகும்

பொருள்களுக்கு உங்கள் ஆதரவையும், அநுகூலத்தையும் தருவதாக உறுதி செய்து கொள்ளுமாறு ஏழை இந்தியர்களின் பெயரால்—அவதிப்படும் அநேக கோடி சகோதரர்களின் பெயரால் உங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம். ஒவ்வொருவரும் இன்றே கீழ்க்கண்ட சத்தியம் செய்துகொள்ளுங்கள்.

"ஏழைகளின் விடுதலைக்காக, நமது நாட்டுக் கைத்தொழில் வியாபார முன்னேற்றத்திற்காக, சமூக தேசீய இலட்சியத்திற்காக என்னை நான் அர்ப்பணம் செய்து கொள்ளுகிறேன். இன்று தொட்டு—இவ்விநாடி முதல், நான் அன்னியப் பொருள்களை இயன்றவரை நீக்குவதாயும், பூரணமாய் உள்நாட்டுப் பொருள்களையே வாங்குவதாகவும் உறுதி செய்து கொள்ளுகின்றேன். இனி எந்தப் பொருளையும் வாங்குமுன் அது நமது நாட்டுப் பொருளா என்பதைக் கவனித்து வாங்குவேன். இதனை எனது அன்பர்களுக்கும் அறிவுறுத்துவேன். இந்த உறுதியினின்றும் எக்காலத்திலும் சிறிதும் பிசகமாட்டேன். என்மேல், என் அறிவின்மேல், என் அன்பின்மேல், என் தேசத்தின்மேல் ஆணை, ஆணை, ஆணை."

இந்த ஆணையில் பிசகாமல் உறுதியோடு நிற்பீர்களானால் தேசத்திற்காக, சமூகத்திற்காக வேறு தியாகம் நீங்கள் செய்ய வேண்டியதில்லை. அவ்வாறு ஆணையிட்டுக்கொண்டு இந்திய மாதாவின் மானத்தைக் காப்பாற்ற முன் வருவீர்களா?

---

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2 வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத் தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுத வேண்டியதில்லை. எழுதுபவரின் பெயரும் விலாசமு மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைகளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

# அதிசயம் அற்புதம் ஆச்சரியம்

### சூரிய பகவான் கோபம்

யூஜின் பெனட் என்னும் சிறுவன் உடம்பை மூடிக் கொள்ளாமல் வெய்யிலில் சென்றால் உடனே உடம்பு முழுதும் வெடிப்பு ஏற்பட்டு ரத்தம் பீரிட்டு ஓடுகிறதாம். எனவே இவன் வெளியிலேயே வருவதில்லை. டாக்டர்களாலும் இதனைக் குணப்படுத்த முடியவில்லை.

### மண் தின்னும் மனிதர்

தென் அமெரிக்காவில் ஒரினோகோ நதி பாயும் பிரதேசத்திலுள்ள சுதேசிகள் பெரும்பாகம் மண்ணைத் தின்றே ஜீவிக்கிறார்கள். ஒரினோகோ நதியில் வெள்ளம் வந்து வற்றியவுடன் படியும் வண்டலை உருண்டைகளாகக் கொண்டுவந்து குழம்பு முதலியவற்றோடு சாதம் போல் கலந்து சாப்பிடுகிறார்கள். 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா' என்று பழைய காலத்தில் பாடிய புலவரின் வாக்கியமும் பொய்த்துப் போகிறது.

### ஜலத்தில் சர்க்கரை

மரத்தூளி லிருந்தும், செடிகளிலிருந்தும் சர்க்கரை செய்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ரசாயன சாஸ்திரிகளுக்கோ ஜலத்திலும், சூரியன் ஒளியிலும், ஆகாயத்திலும் இயற்கையாய் சர்க்கரை இருக்கிறதென்பது முடிவான அபிப்பிராயம். இதைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வந்தன. அமெரிக்காவில் ஒருவர் சூரியன் ஒளியிலிருந்து சர்க்கரை செய்யவும், இங்கிலாந்தில் ஒருவர் ஜலத்தில் சர்க்கரை செய்யவும் தற்போது கண்டுபிடித்துள்ளார்கள்.

### மகனைப் பலியிட்ட முஸ்லீம்

பகல்பூரில், ஷேக் கனீப் என்பவன் தனது நான்கு வயது மகனை மசூதிக்கு அழைத்துப்போய் பிரார்த்தனைக்குப்பின் பலியிட்டுவிட்டு வெளியில் ஓடிவந்து 'நான் என் மகனை பலியிட்டு விட்டேன். அல்லாவின் பேராலும் முகம்மது நபியின் பேராலும், பலியிட்டதால் நான் துறவியாய் விட்டேன்' என்று கத்தினானாம். விசாரணையில் தான் பலி இட்டதைத் தவிர கொலை செய்யவில்லை என்றும், பூகம்பத்தின் பின், தான் கடவுளின் சக்தியை உணரத் தொடங்கிவிட்டதாகவும், எனவே தான் பக்கிரியாக விரும்பியதாகவும், தன் மகனை பலியிட்டால் கடவுள் தான் துறவியாவதற்குச் செய்துவரும் கோரிக்கையை அங்கீகரிப்பாரென்று தன் ஆத்மா கூறியதாலேயே அவ்வாறு செய்ததாகவும் கூறினானாம்.

### வேப்பமரம் நெருப்பு மழை பெய்தது

லாகூரைச் சேர்ந்த ரூபர் சமஸ்தானத்தில், ரூபர் நகரில் மார்க்கெட்டின் மத்தியிலுள்ள வேப்பமரத்தில் 10-6-34-ந் தேதி இரவு

11-மணிமுதல் 1½-மணி வரையில் நெருப்புப் பொறிகள் மழை போல் விழுந்துகொண் டிருந்தனவாம். மழை நின்றபின் சாம்பலோ அல்லது நெருப்புப் பொறி விழுந்த அடையாளங்களோ மரத்தின்கீழ் காணப் படவில்லையாம். சுமார் 43 வருஷங்களுக்குமுன் இதே மரம் நெருப்பு மழை பெய்திருக்கிறதாம்.

### 6½வயதில் பிரசவம்

டில்லியிலுள்ள விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியில் 6½ வயதுள்ள ஒரு சிறுமி பெண்குழந்தை பெற்றெடுத்தது வைத்திய நிபுணர்களுக்கெல்லாம் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது. பல டாக்டர்கள் அப்பெண்ணைப் பரிசோதித்து 'எக்ஸ்ரே' மூலம் புகைப் படம் எடுத்துள்ளனர். சென்னை டாக்டர்கள் இதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்போது, சென்னை ஆஸ்பத்திரியில் 12 வயதில் பிரசவமாகி இருக்கிறதென்றும், இதுவரை இவ்வளவு சிறுவயதில் எங்கும் பிரசவித்தது கிடையாதென்றும் தெரிவித்தனர்.

### தகப்பன் மீது நஷ்டஈடு

லங்காஷயரில் எட்வர்ட் லாயிட் மோட்டார் ஓட்டிச் செல்லும் போது அந்த மோட்டாரில் அவரது 10 வயதுள்ள மகனும் இருந்தான். மோட்டார் ஒரு லாரியில் மோதியதால் பையனுடைய கண்ணில் பெருத்த காயம்பட்டு கண் எடுக்கும்படி நேரிட்டது. தன்னுடைய தகப்பனார் அஜாக்கிரதையாகக் கார் ஓட்டியதனாலேயே தனது கண் போயிற்றென்றும், தனக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்றும் பையன் தகப்பன் மீது தாவா தொடர்ந்தான். 1000 பவுன் நஷ்டஈடு தகப்பன் தரவேண்டுமென தீர்ப்பு செய்யப்பட்டது.

### பூகம்பத்தை முன்னதாக அறிவிக்கும் மீன்

பூகம்பத்திற்கு முன் மின்னல்கள் ஏற்படுமென்றும் அதுதான் ஜனங்களுக்கு எச்சரிக்கை என்றும், பூகம்பம் ஏற்படப் போவதைக் காட்டும் கருவி வேறு இல்லை என்றும் இதுவரை கூறப்பட்டது. ஆனால் ஜப்பானில் ஒருவகை மீன்களைக் கொண்டு பூகம்பம் ஏற்படுவதை அறிந்து வருகிறார்களாம். அங்கு அடிக்கடி பூகம்பம் ஏற்படுவதால் இந்த மீன்கள் அவர்களுக்குப் பேருதவியா யுள்ளன. 'கேட் பிஸ்' என்ற ஒருவகை மீனை தண்ணீர்த்தொட்டியில் போட்டு மேஜை மீது வைத்துக்கொள்ளுகிறார்கள். அது பூகம்பம் ஏற்படுவதற்கு 6 மணி நேரத்திற்கு முன்பே தண்ணீரில் முழுகி முழுகி எழுந்து எச்சரிக்கை செய்கிறதாம். அப்படி எச்சரிக்கை செய்த சமயங்களில் ஒரு முறையாவது பூகம்பம் ஏற்படாமல் தவறியதே இல்லையாம்.

### 24 வயது பெண்ணுக்குப் பேத்தி

ஆஸ்திரேலியாவில் ஒரு பெண் 12 வயதில் கல்யாணஞ் செய்து கொண்டாள். அவளுக்குப் பிறந்த ஒரு பெண் கல்யாணமாகி இப்போது ஒரு பெண்குழந்தையைப் பெற்றிருக்கிறாள்.

## விகடத் துணுக்குகள்

நடிகர்:—விருந்துகள் நடைபெறும் சீனில் உண்மையாகவே பலகார பட்சணங்கள் வைத்தால் எவ்வளவு பொருத்தமாயிருக்கும்.

ஸ்டேஜ் மானேஜர்:—வாஸ்தவந்தான். இனி அப்படித்தான் செய்யவேண்டும். ஆனால், மரணசீனில் உண்மையாகவே பாஷாணம் வைக்கலா மல்லவா?

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

சீதை:—கமலா! உனக்குக் கூட்டப் பெருக்கத் தெரியுமா?

கமலா:—ஓ. தினந்தோறும் எழுந்ததும் தெருவைப் பெருக்குகிறேன். வீடு வாசல்களை யெல்லாம் ஒரு நாளைக்கு இரண்டு தடவை கூட்டுகிறேன்.

—தப்புசாமி முதலியார், செங்குந்தபுரம்.

வேணு:—நண்பா! வருடம் ஒன்றரை ரூபாயானால் தினம் எவ்வளவாகும்.

நண்பன்:—இது தெரியாதா! முக்காலே வீசங் காணி முந்திரை தம்பிடியாகும்.

வேணு:—இந்த அற்பத்திற்குத் தயங்கி குலச் செல்வனும் மித்திரனை பட்டினிபோடும் குலாபிமானிகளின் கருத்து என்னவாயிருக்கலாம்.

நண்பன்:—வேறென்ன இருக்கிறது. தினம் ஒரு தம்பிடிக்கும் குறைவான தர்மத்தை ஒரு பொருட்டாகச் செய்வதா என்பது தான்.

—ஏ. முனுசாமி, கலவை.

அண்டப்புளுகன்:—அட அண்ணே, ஆகாசம்! நான் தெற்கே போயிருந்தேன். அங்கே எவ்வளவு உயரம், என்ன சொல்லப் போகிறேன். தென்ன மரம் உயரம் இருந்துதுடா.

ஆகாசப் புளுகன்:—என்னடா அண்ணே, அது.

அ. புளுகன்:—ஒரு கீரத்தண்டு இன்றே.

ஆ. புளுகன்:—அது அவ்வளவு ஆச்சரியமில்லே, அண்ணே. நான் வடக்கே போயிருந்தே. அங்கே ஒண்ணு செய்தாங்க. அது எவ்வளவு பெரிசு தெரியுமா. ஒரு மைல் அகலம் இருந்து அண்ணே.

அ. புளுகன்:—அது என்னதுடா?

ஆ. புளுகன்:—ஒரே ஒரு சட்டி இன்றே. நீ சொன்ன அந்தக் கீரத்தண்டை வெட்டிப்போட்டு சமைக்க இன்றே.

—M. நாகேஸ்வரன், ஆரணி.

ஒரு ஞானி:—நாம் கொடுக்கும் ஒவ்வொன்றுக்கும் இரண்டு

கேட்டுக்கொண் டிருந்தவர்களில் ஒருவன்:—அது உண்மைதான். சென்ற வருஷம் என் மகளைக் கொடுத்தேன். இப்போது அவளும் புருஷனுமாக எனது சம்பாத்தியத்தில் ஜீவிக்க வந்து சேர்ந்து விட்டார்கள்.

—T. வேலுப்பிள்ளை, கொளும்பு.

*நியாயாதிபதி:—நீ இவரிடம் பணம் வாங்கியது உண்மையா?*

*பிரதிவாதி:—உண்மைதானுங்க.*

*நியாயாதிபதி:—அப்படியானால் அதை ஏன் கொடுக்கவில்லை.*

*பிரதிவாதி:—வாங்கியவர்களெல்லாம் கேட்டவுடன் கொடுத்து விட்டால் இந்தக் கஷ்டகாலத்தில் தங்களைப் போன்ற தர்ம துரைகளெல்லாம் வேலையற்றோர் சங்கத்தில் சேர்ந்து காலந்தள்ள நேருமே என்ற கவலையினால் தான்.*

—G. கதிர்வேலு, ஆரணி.

*ராமு:—தேங்கா எண்ணை என்ன விலை?*

*கடைக்காரன்:—பலம் அரை அணா.*

*ராமு:—காலணா தரமாட்டாயா?*

*கடை:—இது நல்ல எண்ணை ஆயிற்றே. கொடுக்க முடியுமா?*

*ராமு:—என்னடா, மடையனா யிருக்கிறாய். உன்னை நல்ல எண்ணை யார் கேட்டா? தேங்கா எண்ணைதானே கேட்டேன்.*

—கி. துரைசிங்கம், யாழ்ப்பாணம்.

*மாஜிஸ்டிரேட்:—நீ குற்றவாளி யென நினைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?*

*குற்றவாளி:—ஒரு வாய்தா கொடுங்கள். நான் குற்றவாளியா, அல்லவா என்பதைப்பற்றி என் வக்கீலிடம் கலந்து தெரிவிக்கிறேன்.*

—A. தர்மலிங்கம், சங்கரன்கோயில்.

*ஒரு பிரயாணி:—இது என்ன அநியாயம். மதில் சுவற்றில் இவ்வளவு கண்ணாடித் துண்டுகளைப் பதித்து வைத்திருக்கிறதே. இரவில் திருடர்கள் தெரியாமல் ஏறினால் எவ்வளவு ஆபத்து உண்டாகும்.*

*ஒரு டாக்டர்:—ஏன். ஆஸ்பத்திரிக்கு கேஸ் அதிகமாக வருகிறது.*

—N. கிஷ்ணசாமி, கடலாடி.

*உபாத்தியாயர்:—'அரிமா' என்றால் என்ன?*

*செவிட்டு மாணவன்:—பொரி வரிசி வறுத்து மாவு அறைப்பது, சார்.*

*உபாத்தியாயர்:—இல்லேடா, 'அரிமா'ன்னே.*

*செ. மாணவன்—எனக்குத் தெரிமான்னு கேக்கிறீங்களா. நன்றாத் தெரியும். நான்தா பொரிமாப் பிரியனாயிற்றே.*

—R. வீரபத்திரன், காஞ்சீபுரம்.



*தந்தை தனது மகனுடைய, க்வார்ட்டர்லி, ஹாப்அர்லி யரீட்சை பிராக்கிரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்து, "டேய் பயலே! ஏண்டா கால்வருடப் பரீக்ஷையை விட அரைவருடப் பரீட்சையில் மார்க்கு கம்மி?"*

*பையன்:—'கால்வருடப் பரீக்ஷையில் ஒரு கெட்டிக்காரப் பையன் பக்கத்தில் உட்கார்ந்து எழுதினேன். அரைவருடப் பரீக்ஷையில் ஒரு மக்குப் பையனிடந்தான் உட்கார்ந்து எழுதினேன்?*

—ஈ. வே. பழநிவேலு, ஈரோடு.

*ஜட்ஜி:—நீ திருடினாயா?*

*திருடன்:—ஆமாம்*

*ஜட்ஜி:—திருடினது குற்றந்தானே.*

*திருடன்:—திருடியது குற்றமல்ல. அகப்பட்டுக் கொண்டது தான் குற்றம்.*

—R. முருகேச முதலியார், சின்ன தச்சூர்.

*உபாத்தியாயர்:—பையா! ஏண்டா காப்பி கொண்டுவரவில்லை.*

*பையன்:—காப்பி எல்லாம் என் அக்கா குடிச்சுட்டா, சார்.*

—M. அரிபத்திர முதலியார், கடலாடி.

*ஜட்ஜ்:—நீ இத்தனை முறை கோர்ட்டுக்கு வருவது உனக்கு வெட்கமாக இல்லையா?*

*குற்றவாளி:—நான் ஏன் வெட்கப் படவேண்டும். தங்களைவிட அதிகமாகவா நான் கோர்ட்டுக்கு வந்திருக்கிறேன்.*

—N. R. கிருஷ்ணன், ஆரணி.

---

## சிறுகதைப் பரிசுகள்

**தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.**

# ஏழை அழுத கண்ணீர்

[ஜெ. த.]

பாப்பாரப்பட்டி; கடைத் தெரு. மாலை 5-30 மணி. நாற்சந்தியில் வேங்கடேசன் நின்றுகொண்டிருக்கிறான். எலும்பு தோல் போர்த்த உடல்; வியர்வை ஊற்றெடுக்கும் முகம்; ஒட்டிய கன்னங்கள்; பாதளத்தில் ஆழ்ந்த கண்கள்; எண்ணெயின் வாசனையை மறந்துபோன சடைக்கற்றை; முழங்காலுக்கு மேல் முரட்டுத் துண்டு; இரண்டு கைகளிலும் விரித்துப் பிடித்த ஒரு ஜதை புது வேஷ்டி.

“ஒரு ஜதை வேஷ்டி அரை ரூபா! ஓடி வா! எட்டணா! ஒரு ஜதை குண்டஞ்சி எட்டணா! எட்டணா ஒரு ஜதை குண்டஞ்சி வேஷ்டி! ஜதை எட்டணா! ரெண்டு வேஷ்டி எட்டணா! ஒரு ஜதை குண்டஞ்சி—நாப்பது—நாலு மொழம் எட்டணா! எட்டணா! எட்டே அணா!”

மணி ஐந்தே முக்கால்—ஆறு—ஆறே கால்—ஆறரை.

“சீ! இதென்ன ஊருயா இது! வெண்ணெ மொத்தைபோலெ, நாலு மொழக் குண்டஞ்சி, ஒரு ஜதைக்கி, எட்டணா குடுக்க ஆளில்லெ! சரி! இந்தாங்க! இன்னுங் கொறைச்சிட்டே; ஆறணா! ஆறணா! ஒன்று, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சி, ஆறே அணா! ஒரு ஜெதை குண்டஞ்சி, நாலு மொழ, ஆறணா! நாற்பது குண்டஞ்சி, நாலு மொழ ஜெதை ஆறணா!...........”

மணி ஆறே முக்கால்—ஏழு. எங்கே தன்னிடம் பேரம் பேசுவானோ என்று அஞ்சுவதுபோல் மெல்ல மெல்ல சந்திரன் எட்டிப் பார்த்தான்.

கால் ஓய்ந்துவிட்டது; தொண்டை வறண்டுவிட்டது; எல்லாவற்றிற்கும் மேலே மனம் கருகிவிட்டது. வெறுப்பும், ஆயாசமும், சீற்றமும் கலந்த பெரு மூச்சு சர்ப்பம்போல் சீறி எழுந்தது. வேங்கடேசன் முரண்டிக்கொண்ட குதிரையை ஓட்டுவதுபோல் வலிகட்டாயப்படுத்திக் காலை முன்னே எடுத்து வைத்தான். ‘சீ! மானக்கேடு! மறுபடியும் அங்கே போவதா?’ என்றது மனம். ‘ஐயோ! போகாவிட்டால் என் கதி?’ என்றது வயிறு. மீண்டும் ‘ஆமாம், நஞ்சானுங் குஞ்சானுங் காத்துக் கிடக்குமே’ என்றது மனம்.

* * *

மளிகைத் தெரு; மணி ஏழே கால். சுப்பராய முதலியார் மளிகையில் கடைசிப் பலகையில் சாய்ந்துகொண்டு குரட்டின் மேல் ஒண்டி நிற்கிறான் வேங்கடேசன். ‘மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே’ என்று இடிக்கிறது இதயம். ‘எல்லாம் பசி வந்திடப் பறந்துபோம்’ என்கிறது இடும்பைகூர் வயிறு. இந்தப் போராட்டத்தினால் வேங்கடேசன் உடம்பு முழுவதும் ஜ்வாலை வீசுகிறது. அவன் நிலையைக் கண்டு ஆற்றாத பூரண சந்திரன் தனது குளிர்ந்த கிரணங்களால் அவனைத் தழுவிக்கொண்டிருக்கிறான்.



“அண்ணா!”

பதிலில்லை.

“அண்ணா! உங்களெத்தா.”

சுப்பராயப் பிரபுவின் இடது கண் சிறிது திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் பழையபடியே திருப்பிக்கொள்கிறது.

“தயைபண்ணி என்னெ கொஞ்சஞ் சீக்கிர அனுப்பிடுங்களே!”

“யார்டா அது? என்ன சமாசாரம்?”

“ஒரு ஜதெ குண்..................”

“மடியா? மடியும் வாண்டா, கிடியும் வாண்டா. இருக்கிறது வித்தாப் போதும்.” சுப்பராயர் மீண்டும் நண்பரோடு பேசுவதில் ஈடுபடுகிறார்.

“அப்படி சொல்லிவிட்டா எப்படிண்ணா.”

“இதென்னடா எழவு! ஏண்டா, ஒனக்கென்ன கொறைச்சல்; நேத்துப் போனெயே பெரிய மொறப்போடெ. போயே. போய் வித்துக்கோ. உம்மடியெ வாங்கத்தானா ஆளில்லெ?”

“இதுக்கெல்லாம் கோவிச்சிக்கினா எப்படிண்ணா?”

“பின்னே இன்னாடா! இருக்கிற மடியெல்லாந் தூங்குது! என்னமோ ஆனெ வெலெ குதிரெ வெலெ சொல்றே; நியாயமா கொறைச்சிக் கேட்டா எடுத்துக்ணு புர்றானு ஓட்றெ. வாண்டா வாண்டாம். இப்ப ஒண்ணுஞ் செலவே இல்லெ.”

“என்னமோ, எல்லா வயித்துக் கொடுமேண்ணா.”

“இல்லிங்க. இந்தப் பசங்கள்ளா இப்படித்தாங் கெட்டுத் தொலையறானுங்க. ஏதோ இந்த மந்த காலத்திலே கொஞ்சம் பொழெப்பு குடுக்கலாண்ணு பாத்தா ஏறி ஒக்கார்றானுங்க.—என்னடா? திரும்பித் திரும்பி வாதாடாதே. ஆறே முக்காலணாதாங் குடுப்பே. அதுக் கிஷ்டமானா குடு; காலங் கெடக்ற கேடு அப்படி இருக்குது.”

“அண்ணா அண்ணா, நேத்துச் சொன்னதுக்குங் கொறைச்சுட்டிங்களே.”

“என்னா? நேத்து எழணா சொன்னே. ஆமா. நேத்து எடுத்துக்ணு ஓட்னெயே! விக்கிறதுதானே? அதுக்குத்தாங் காலணா கொறைச்சல். அப்பொவாவது புத்தி வருமா?”

“நீங்கள்ளா இப்படிச் சொன்னா ஏழெங்க என்ன பண்றதுண்ணா?”

"அதெல்லா இங்கே வாண்டா. சும்மா பேசாதே. கடை கட்ற நேரமாச்சி. இஷ்டமாந்தா குடு; இல்லாட்டா எடுத்துப் போய் மாராசனா வித்துக்கோ."

"சரி, அப்புற உங்க தயவு. நீங்க இஷ்டப்பட்டதெக் குடுங்க."

"சரி, அப்படி வச்சிட்டுப் போ. நாளைக்கி வா. இப்பொ எல்லாங் கணக்கு கட்ற நேரம்."

"ஐயையோ! என்னண்ணா நாளைக்கி வரச் சொல்றிங்களெ? ஊட்லெ கொழந்தெ குட்டி யெல்லாங் காத்துங் கெடக்குதே."

"இதென்னடா இப்படித் தொந்தரவு பண்ணே. வாண்டாண்ணாலும் போய்த் தொலைய மாட்டேண்ணே. சரி; இந்தாடா, தொலை. இந்த மாதிரி துட்டு கை மேலே எங்கேயாவது வருதா? என்னமோ முறுக்கிக்ணு போனையே, கலியாணப் பொண்ணாட்டமா?',

"என்னண்ணா சொன்னபடியே குடுத்துட்டீங்களே?"

"என்னா? அதெல்லா அந்த ஆறே முக்காலணாவுக்கு மேலெ தம்பிடி கெடையாது. வேணும், படவா!"

"அண்ணா, அண்ணா அந்தக் காலணாவெப் புடிக்காதெ குடுத்துடுங்கண்ணா. உங்க கால்லெ உழறே. காலணா போனா நாலு வேளெ கூழு போச்சே."

"உம், தெரியுதா இப்போ! ஊஹூம்; அதெல்லா ஒண்ணு இனிமேலெ போராது. கும்புட்டாலுமில்லெ, கூத்தாடினாலுமில்லெ.— இண்ணக்கி மட்டுமில்லெ, கவன வச்சிக்கோ: இனிமேல் எப்போ வந்தாலும் அந்த ஆறே முக்காலணாதா. அதுவும் அளவு கிளவெல்லா ஒரே மாதிரியா இருந்தாதா." உடனே சுப்பராயர் நண்பரோடு குடும்ப ஜம்பங்களைப் பற்றிப் பேசுவதில் ஆழ்ந்துவிடுகிறார். மறுபடியும் அவரிடம் ஒரு வார்த்தையும் எதிர்பார்க்க முடியாதென்று முடிவு கட்டிய வேங்கடேசன், இடி விழுந்த மனத்தோடு மெல்ல வீட்டை நோக்கி அடியெடுத்து வைக்கிறான்.

* * *

சின்ன நெய்யக்காரத் தெரு; கடைசி வீடு. கணக்கிட முடியாத வயதான குடிசை. தள்ளாடும் தட்டிக் கதவு. செல்லரித்த வாசற்படி. உளுத்துப்போய் உதிர்ந்துகொண்டிருக்கும் களிமண் சுவர்கள். ஆடிக் காற்றுக்கு அடையாளமாகப் பல்லிளித்துக்கொண்டிருக்கும் ஓலைக் கூரை. அதிலிருந்த ஓட்டை வழியாக எட்டிப் பார்க்கும் கிரணங்களைக் கண்டு நாணி, இருந்த இடந் தெரியாமல் ஊசலாடிக் கொண்டிருக்கும் சிறு புகை விளக்கு. வாசற்படியண்டை ஐந்து ஜீவன்கள் முடங்கிக் கிடக்கின்றன. காரைக்காலம்மையோடு போட்டி போடும் செல்லம்மாள் குரட்டின் மேல் உட்கார்ந்துகொண்டு முழங்காலில் மோவாயை ஊன்றியவண்ணம் புருஷனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் மடியில் தலை வைத்து ஒரு சிறுவன் சாய்ந்து கிடக்கிறான். மூன்று பெண்கள் பக்கத்துக்கொன்றாக



உருண்டு கிடக்கின்றன. ஒரு வயது குழந்தை யொன்று வெளியே தரையி லுட்கார்ந்துகொண்டு 'பூவா! பூவா! ஐயெ, அம்மா! பூவா!' என்று கெஞ்சிக்கொண் டிருக்கிறது. எங்கும் சந்திர ஒளி சோபித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஐந்து ஆன்மாக்களின் உள்ளத்திலுள்ள இருளுக்கு அது தோற்று நிற்கிறது.

காலடி சப்தம். 'அம்மா, பூவா' என்று அழுதுகொண் டிருந்த குழந்தை திரும்பிப் பார்க்கிறது. செல்லம்மாள் ஆவலுடன் எழுந்து எட்டிப் பார்க்கிறாள். உடனே அவள் உள்ளத்திலும் கவலை மேகத்தை விலக்கித் தள்ளிக்கொண்டு ஆனந்த சந்திரன் உதயமாகிறது. குழந்தைகளை யெல்லாம் தட்டி யெழுப்புகிறாள். காலடி சப்தம் நெருங்கி விட்டது. பெரிய எஞ்சினைப்போல் உஸ்ஸென்று பெருமூச்செறிந்து கொண்டு உட்காருகிறான் வேங்கடேசன். செல்லம்மாள் உள்ளத்தில் மீண்டும் மேகம் ஆதிக்கம் பெற்றுவிட்டது. புருஷனைத் தேற்றுவதற்கு வாயெடுக்க முடியவில்லை. அவள் தடுமாற்றத்தைக் கண்டு வேங்கடேசன் கதையையெல்லாம் சொல்லி முடிக்கிறான். இரண்டு உள்ளங்களும் புகைகின்றன, பொசுங்குகின்றன. கடைசியில், "சரி, ஏதோ ஒன்னு. கொண்டுவந்ததைக் காட்டுங்க. காச்சி இந்தக் கொழந்திங்களுக்கு வாப்போம்" என்று வேங்கடேசன் கொண்டுவந்த மூட்டைகளை எடுத்துச் செல்கிறாள் செல்லம்மாள்.

சமைய லாயிற்று. வேங்கடேசன் குடிசை குசேல முனிவர் ஆச்சிரமமாகக் காட்சி தந்தது. குழந்தைக ளெல்லாம் சாய்ந்துவிட்டன. மணி பதினொன்று. இரண்டு ஆன்மாக்கள் விழித்துக்கொண் டிருக்கின்றன. "இப்படியும் ஒரு கடவுள் படைப்பானா?" என்றான் வேங்கடேசன்.

"ஐயோ! ஒரு ஜதை ஆறே முக்காலணாவா! நூலிழைத்த கஷ்டத்துக்குக்கூடக் கட்டாதே. அந்தக் காலணா இருந்தாலும் காத்தாலைக்கு ஒதவுமே. அட தெய்வமே! இப்படிக்கூடக் கூத்து பார்ப்பையா?"

"என்னமோ, போரான் மாராசன்! யாரெ நொந்து என்ன? இன்னைய ராத்திரி பொழுதாவது போச்சி. நாளைக்கிச் சொல்லு. ஐயோ என்னதான் பண்றதுண்ணு தெரியலையே. ஒண்ணா? ரெண்டா? ஆறு ஜீவன் எப்படித்தான் பொழைக்கப்போவுதோ?"

"என்னத்தை பொழைக்கிறது இந்த ஒலகத்திலே? என்னமோ இன்னைக்கிப் பெரியவனா இருக்கோண்ணு நெனைக்கறாங்க. கடவுளும் அவுங்களுக்குத்தாங் குடுக்கறான். என்னமோ பொழைக்கட்டும் யாராவது. நம்மை யேன் இப்படி வேடிக்கை பார்க்கணும்ணுதான் எனக்குத் தோணலே."

"என்ன பண்றது? பேசாதெ இந்தக் குடிசெ இடிஞ்சி விழுந்து எல்லாரையும் அப்படியே மாய்ச்சிட்டாலும் உத்தமமா யிருக்கும். ஒரு வழியுங் காணோமே."

போதும்; இனிமேல் உங்கள் காது கேட்கச் சகிக்காது. ஆமாம் பேனாவும் துடிக்கிறது.

*   *   *

பொழுது விடிந்தது. மணி பத்தாயிற்று. பாப்பாரப்பட்டியே அல்லோல கல்லோலப்படுகிறது. எங்கும் ஒரே பேச்சு. மளிகை சுப்பராய முதலியார் சமாசாரமே எங்கும் அடிபடுகிறது. நாலு லக்ஷ ரூபாய் அனாமத்தாகப் போய்விட்டதாகச் சிலர் பேசிக்கொண்டனர். 'எப்படிப் போச்சின்னே தெரியலையே' என்று கேட்டனர் சிலர். 'எப்படிப் போனா இன்னையா? ஏழையெ வயித்திலடிச்சிப் பிடுங்கின பணம் இப்படித்தான் போவும்' என்று திருப்தி கொண்டனர் சிலர். கடைசியில், முன்னாள் இரவு தம்மிடமிருந்த பணத்தை யெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு காலையில் முதலியார் பட்டணத்துக்குப் புறப்பட்டதாகவும், வழியில் ஆற்றைக் கடக்கையில் திடீரென்று சறுக்கி விழுந்து கஷ்டப்பட்டு நல்ல வேளையாக உயிர் தப்பியதாகவும், கையிலிருந்த மூட்டை வேகமாக ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் அடித்துக்கொண்டு இடந் தெரியாது போய்விட்டதாகவும் ஊரெங்கும் செய்தி பரவிவிட்டது. உடனே வியாபார தோரணையில் முதலியாருக்குக் கடன் கொடுத்திருந்தவர்களெல்லாம் அவர் வீட்டை முற்றுகையிட்டுக்கொண்டனர். முதலியார் பக்கத்து ஊர் ஆஸ்பத்திரியில் "அதோ, அதோ, அந்தக் கரையிலெதாம் பொதைச்சி வைச்சிருக்கேன்; எடுத்து வாடா அந்த நாலு லக்ஷத்தையும்" என்று பிதற்றிக்கொண்டு கிடந்தார்.

*   *   *

நாலு மாதங்கள் எப்படியோ பறந்தன.

அதே பாப்பாரப்பட்டி. அதே மளிகைத் தெரு. நாராயண முதலியார் மளிகை ஓரத்தில் ஒருருவம் நாணத்துடன் ஒண்டி நிற்கிறது. பல்லெல்லாம் தெரியக் குலுங்கச் சிரிக்கும் பூரண சந்திரனது ஒளி எங்கும் பரவிப் பாய்ந்து கிடக்கிறது.

"அண்ணா தயெசெய்து என்னெ அனுப்பிடுங்களே."

"ஏண்டா சுப்பராயா, ஒனக்குக்கூடவா அவசரம்? எவ்வளவு ஜோலி யிருக்குமுண்ணு அனுபவத்தில் நீ கண்டவனாச்சே? எத்தனை பேர் உன்னிடம் காத்துங் கெடந்தாங்க. இந்த நாலு மாசத்தில் எல்லா மறந்துபோச்சோ?

---

## பிழை திருத்தம்

சென்ற வைகாசி மாத மித்திரனில், அட்டைத் தாள் கடைசி பக்கத்தில், தென் ஆப்பிரிக்கா சந்தா வசூலில் V. V. ராமசாமி முதலியார் என்றிருப்பதை V. V. ராமசாமி நாயுடு எனத் திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு வாசகர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

# சின்னஞ் சிறு பாப்பாவுக்கு

## வெள்ளைப் பாம்பு

(ஈ. வே. வேலு)

ஒரு நாட்டை ஒரு அரசர் ஆண்டு வந்தார். அவர் நிறைந்த புத்திசாலி; அதற்காக அவருடைய குடிகள் அவரைப் போற்றினர். எவ்விடத்து என்ன ரகஸ்யம் நடந்ததாயினும் அவருக்குத் தெரியாமல் இருந்தது கிடையாது.

அவர் எப்பொழுதும் தனியாகவே போஜனம் எடுத்துக் கொள்வார்; அந்தரங்க வேலையாள் ஒருவன், ஒரு மூடிய பாத்திரத்தைக் கொண்டுவந்து அரசர் முன்பு வைத்துவிட்டுப் போய்விடுவான். பின்பு, கதவுகளை நன்றாக மூடித் தாழ்ப்பாளிட்டுவிட்டுச் சாப்பிடுவார். இப்படி வெகு நாட்கள் நடந்து வந்தது. அப்பாத்திரத்துள் என்ன இருக்கிறது என்று ஒருவருக்கும் தெரியாது.

உண்மை வேலைக்காரனுக்கு அப்பாத்திரத்துள் யாதுளது என்றறிய ஆவலா யிருந்தது. ஒரு நாள் அரசன் சாப்பிட்டவுடன் அப்பாத்திரத்தைத் தனது அறைக்குக் கொண்டுசென்று கதவுகளையும் சாளரங்களையும் நன்றாக அடைத்துவிட்டு அம் மூடியைத் திறந்தான்! உடனே திகைத்து நின்றான். பாத்திரத்தில் ஒரு வெள்ளைப்பாம்பு இருந்தது. அப்பாம்பைக் கண்டதும் அதை உண்ண வேண்டுமென அவன் மனத்தில் ஒரு ஆவல் எழுந்தது. சிறிதும் தாமதியாமல் அதைச் சிறு துண்டுகளாக நறுக்கி முழுதையும் தின்று விட்டான். அவ்வளவே! சாளரத்தில் உட்கார்ந்திருந்த இரு குருவிகள் பேசுவது நன்கு விளங்கியது. அந்த வெள்ளைச் சர்ப்பத்தை உண்டதால் பக்ஷி, மிருக ஜாதிகளின் பாஷை அர்த்தமாகும் சக்தி அவனுக்கு உண்டாயிற்று.

இதன் பின் பல நாட்கள் கழிந்தன. ஒரு நாள், அரசியின் மோதிரம் ஒன்று காணாது போய் விட்டது. அந்தரங்க வேலையாள் மீதுதான் யாவரும் சந்தேகப்பட்டனர். அரசனும் மோதிரம் கொண்டுவராவிடில் அவனைத் தூக்கிலிட்டுவிடுவதாகச் சொல்லிவிட்டான். தான் நிரபராதி என்று எவ்வளவோ மன்றாடியும் பயனில்லாமற் போயிற்று.

ஆழ்ந்த துயரத்தோடு அரண்மனைப் பூங்காவின் குளக்கரையண்டை வந்து உட்கார்ந்தான். இரண்டு வாத்துக்கள் உல்லாசமாய் வார்த்தை யாடிக்கொண்டு நீராடின. அவைகளில் ஒன்று 'என்ன, இன்று எனது வயிற்றில் கனமா யிருக்கிறதே! அரசியின் மாடியின் கீழ் தானியம் உண்ணுகையில் ஒரு மோதிரத்தையும் விழுங்கி விட்டேன்', என்றது.

இதைச் செவியுற்ற வேலைக்காரனுடைய முகம் பொலிவுற்றது. அந்த வாத்தைப் பிடித்துச் சென்று அரசனெதிரில் அறுக்கும்படிச் சொன்னான்.

அறுக்கவே அதன் வயிற்றில் மோதிரம் இருக்கக் கண்டனர். அரசன் இந்த உண்மை ஊழியனின் சத்திய வாக்கை மெச்சி 'உனக்கு எது வேண்டுமென்றாலும் கேள்; நான் தருகிறேன்' என்றான்.

அந்த ஊழியன் 'மாய்கைகளும், வஞ்சனையும், சாதிக்கட்டுப்பாடுகளும், வேற்றுமைகளும் நிறைந்த இந்த உலகம் முழுவதையும் சுற்றிப் பார்க்கவேண்டுமென்ற அவா எனக்கு நெடுநாளாக உண்டு. வசதி இல்லாததனால் அந்த எண்ணம் நிறைவேறாமல் இருக்கிறது. ஆகையால், வேண்டிய பொருளும் ஒரு பரியும் கொடுக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்' எனக் கூறினான். அரசனும் மனமுவந்து அவன் வேண்டிக்கொண்டவாறே உதவி புரிந்தான்.

மறுநாளே ஊழியன் தனது பிரயாணத்தைத் துவக்கினான். பிரயாணப்பட்டுப் போகையில், ஒரு ஆற்றின் கரையில், நாணற்றட்டில், மூன்று மீன்கள் சிக்கி பிராணாவஸ்தையில் இருப்பது கண்டு அவைகளை மீட்டான். அவைகளும், 'ஒரு நாளைக்கு நாங்கள் பிரதியுபகாரம் செய்வோம்' என்று சொல்லி நீரில் துள்ளியோடின.

ஓரிடத்துக்கு வரும்போது யாரோ நிலத்திலிருந்து பேசுவதுபோ லிருந்தது. கீழே குனிந்து நோக்க ஓர் எறும்பு அரசன், 'ஏ மானிடனே! உனது குதிரையை ஏன் வீணாக என் குடிகள்மீது விட்டு தும்சம் செய்கிறாய். இரக்க முள்ளவனாயின் வேறு வழி சென்று எங்களை ரட்சி. நாங்கள் ஒரு சமயம் உனக்கு உதவுவோம்', என்றது. ஈர நெஞ்சுள்ளவனா யிருந்தமையின் வேறு வழியில் தனது குதிரையைத் திருப்பிவிட்டான்

பின்னர் அவன் ஒரு வனாந்திர வழி செல்ல நேரிட்டது. அங்கு ஒரு மைனா, தனது மிக இளைய குஞ்சுகளைக் கூட்டைவிட்டுத்துரத்தி, 'இனி நான் உங்களுக்காகக் கஷ்டப்படேன் வேறு எங்காவது சென்று விடுங்கள்,' என்றது. இன்னும்



இறகுகள் கூட முளையாத இரு பூங்குஞ்சுகள் அதைக்கேட்டு நடுநடுங்கி மனங் கலங்கிக்கொண் டிருந்தன. அதைக் கண்ட இவன், தனது உணவை அவைகளுக்குக் கொடுத்து, பக்கத்துக் கிராமத்திற்கு அவைகளைக் கொண்டுபோய் ஒருவனிடம் கொடுத்து, 'இவைகளை, இறகு முளைத்து பறக்கும் வரை உணவிட்டு பாதுகாத்துவா; நான் வரும்போது இரட்டிப்புப் பணம் கொடுக்கிறேன்' என்று சொல்லிப் பணமும் கொடுத்துத் தனது வழியே சென்றான்.

அவன் ஒரு பட்டணத்தை அடைந்தான். அந்நாட்டின் அழகிய இளவரசிக்குத் தக்க மணாளன் ஒருவன் வேண்டும் என்று முரசறைவிப்பது கேட்டு அவளை மணக்க அவன் விரும்பினான். சிறிதும் அஞ்சாது நேரே அரசனிடம் சென்று தனது விருப்பத்தைத் தயங்காது வெளியிட்டான். அரசன் இவனை நோக்கி, 'நீ நம் மகளிடும் ஏவலைச் செய்ய வல்லையோ?', எனலும் 'ஆ! அதை இனிது முடித்து மணஞ் செய்துகொள்ளவே யான் ஈண்டு வந்துளேன்' என்றான்.

உடனே இளவரசி அங்கே வரவழைக்கப் பட்டாள். அவள் தனது கைவிரல் மோதிரத்தைக் கடலில் எறிந்து, 'இன்று பாஸ்கரன் படுக்கைக்குச் செல்லுமுன்பு அம்மோதிரத்தை எடுத்து என்னிடம் கொடுக்கவேண்டும்' என்று கூறினாள்.

எப்படி அக்கணையாழியை எடுப்பது என்ற கவலையோடு நமது ஊழியன் கடற்கரையி லமர்ந்தான். என்ன செய்வது என்று அவனுக்கு விளங்கவில்லை. சமுத்திரமோ கரை புரண்டு உலகின்மேல் பொங்கிக்கொண் டிருக்கிறது. கதிரவன் திரைகள் ஒளி குன்றத் தொடங்கின. பொழுது சாய்ந்ததை உன்னி மனங்கவன்று வருந்தினான். அச்சமயம் மூன்று மீன்கள் இவனை நோக்கி நீந்தி வந்தன. ஒன்றின் வாயில் இளவரசியின் மோதிர மிருந்தது. அவை கரைக்கு வந்து மோதிரத்தை அவனெதிரில் வைத்துச் சென்றுவிட்டன. அம்மீன்களே இவன் காப்பாற்றியவை.

மோகினி (இதுவே இளவரசியின் பெயர்) பெரிய அகம் பாவக்காரி. மற்றுமொருமுறை பரீட்சிக்க விரும்பி, தனது பூஞ்சோலை பூராவும் தானியங்களை இறைத்துவிட்டு, அவற்றை மறு நாட்காலைக்குள் மூட்டையாகக் கட்டிவிடவேண்டு மென்றாள்.

என்ன செய்வான் பாவம்! வருத்தத்துடன் உட்கார்ந்தான். இரவு மாய்விட்டது. தூக்கமும் வந்தது. விலக்க முடியாது நித்திராதேவி வசப்பட்டான். அடுத்த நாள் சூரியக் கிரணங்கள் முகத்தில் 'சுள்' என்றடிக்கவே பயத்துடன் குதித்தெழுந்

தான். என்ன ஆச்சரியம்! தான்ய முழுதும் தன்னெதிரில் ஒரே குவியலாகக் கிடந்தது. அன்று இரவு இவனுடைய பரிதாபகரமான நிலையைக் கண்ட எறும்பரசன் கோடிக் கணக்கான தனது பிரஜைகளுடன் வந்து இப்படித் தான்யங்களைச் சேகரித்து இருந்தான். எறும்பரசனின் நன்றியறிதலை நினைந்து மனமுவகை எய்தினன். அவற்றை மூட்டைகளாகக் கட்டி மோகினிக்குக் காண்பித்தான்.

இது கண்ட இளவரசி தனது செருக்கு அடங்காது, 'தங்க மாம்பழம் கொண்டுவந்தால்தான் நான் உன்னை மணப்பேன்', என்றாள்.

வழிச் செலவுக்கு வேண்டிய பணத்துடன் புறப்பட்டான். காடு காடாக, நாடு நாடாக, கிராமம் கிராமமாக அலைந்து ஒரு வனாந்தரத்தை அடைந்தான். அதி சோர்வினால் ஒரு மரத்தடியில் படுத்து உறக்கம் கொண்டான். அவனது மடியில் ஏதோ தொப்பென்று விழுந்தது. எழுந்து நோக்கினான். "தங்கமாம்பழம்". மேலேநோக்கவே இரண்டு மைனாக்குருவிகள் இருந்தன. அவைகள் இவன் மடியில் வந்து உட்கார்ந்து, 'நாங்கள் உனது விஷயத்தைக் கேள்விப்பட்டோம். மனிதருக்கு எட்டாத தூரத்தில், சிரமத்தையும் பாராட்டாது சென்று இந்த சஞ்சீவியைக் கொண்டு வந்தோம்', என்றன.

மன மகிழ்வுடனும், உள்ளப் பூரிப்புடனும் பழத்தைக் கொண்டு மோகினியிடம் கொடுத்தான். அவள் இவன் சாமர்த்தியத்தை மெச்சி இவனை மணம் செய்து கொண்டாள். பழத்தை இருவரும் பங்கிட்டுக் கொண்டனர். அதனால் அவர்களுக்குச் சாவே கிடையாதாம்.

குழந்தைகளே! அவன் எந்த ஊர் அரசனாக இருக்கிறான் என அறிந்து கொள்ள ஆசைப்படாதீர்கள். அவனைப் போல் சகல உயிர்களுக்கும் நீங்கள் உதவி புரிந்து வந்தால் ஒருக்கால் நீங்களும் உயர்பதவி அடையக்கூடும்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

* * *

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லன்னன்றி
என்று தருங்கொல் எனவேண்டாம்.

---

**போட்டிப் பரிசு! அடுத்த இதழை எதிர்பாருங்கள்!**

# ஒற்றுமை—முன்னேறும் வழி

(ஈ. வே. சோமசுந்தரம், கோவை)

*(கடந்த மார்ச்சு மாத மித்திரன் தபால் பெட்டியில் காணப்பெறும் ஒற்றுமைத் திருமணங்கள் என்னும் விஷயத்தின்மேல் எழும் பிரச்னை.)*

தேச நலமும் குல நலமும் கோரும் பெரியீர்,

இது காலை இந்திய தேசம் அடிமைக் குழியில் வீழ்ந்து கிடப்பதும், அந்நியர் ஆதிக்கத்தில் அடங்கி நிற்பதும், பல சமூகத்தவர் பிற்போக்கான வகுப்பினர் எனக் கூறப்படுவதும் இந்தியரிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் இன்றி, விரிந்ததும் அறிவாராய்ச்சிக்கு ஏற்றதுமான மனோபாவமும், நடையுடை பழக்க வழக்கங்களும் இல்லாமையால்தான் என்பது வெள்ளிடை மலை.

நமது நாட்டில் பல ஜாதி, பல சமயப் பூசல்கள் மல்கிய பேதாபேதங்களும், மன வேற்றுமைகளும் மக்கள் பிறந்தது முதல் வேரூன்றி நிற்றலாலே, எம்முயற்சி—கிளர்ச்சியிலும் ஒன்றிய செய்கை காணப்படுவதில்லை. இப்பலஹீனத்திற்கு அடிப்படையான காரணம், குறைபாடு, பலதிறத்தவரான நம் தேச வாசிகள், ஏகமாக ஒரே குடும்பத்தவர் என்னும் உணர்ச்சியுடனும், சகோதர நேயத்துடனும் ஒன்றுபடாமையே ஆகும். ஒன்று படுதற்குத் தடையாதெனின் நம்மிடையில் பலபல ஜாதி, சமய, வர்க்க வேற்றுமைகள் இறந்துபடாமல் இன்றுவரை இருப்பதே யாம்.

தேச முழுவதையுமே எடுத்துக்கொண்டு இக்குறையைத் தவிர்ப்பது பெருங் கடினமான காரியமாகும். எனவே, தேசமக்களின் சிறு சிறு சமூக பாகங்களை தனித்தனி ஒன்று படுத்தி, முடிவில் அகில தேசத்தையும் ஒன்று செய்தல் வேண்டும். பூரண இலட்சியமோ மனித வர்க்கத்தையே ஒரு குடும்பத்தவர்களாக்கவேண்டியதாகும். அது படிப்படியாகத்தான் வரும். எனினும் நமது முயற்சியின் வேகத்தால் அதை விரைவில் நடைமுறையில் அடைய ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நேருக்கு நேர் பேசக்கூடிய, பார்க்கக்கூடிய டெலிபோன், ரேடியோ, டெலிவிஷன் முதலிய சகலவித போக்குவரவு வசதிகளும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் அகில உலகமும் ஒன்றுபடுவது அசாத்தியமான காரியமல்ல. உலகமுன்னேற்ற வேகம், காலச்சக்கரத்தின் ஓட்டம் இயல்பாகவே அந்நிலைமையைக் கொண்டுவந்து விடும்.

உலக நிலைமையே இங்ஙனமிருக்க, செங்குந்தர் என்னும் ஒரு சிறு கூட்டத்தினர், அல்லது ஜாதியினராகிய 7 இலக்ஷம் பேரேயுள்ள

**நங்குலத்தவர், பலபல நாட்டார், பலபல பிரிவினர், பலவகைக் கூட்டத்தார் என, எண்ணித் தொலேயாத உட்பிரிவுகளாலே பிரிந்து பிரிந்து நிற்றல் பைத்தியக்காரத் தனமும் அவமானகரமும் ஆகும்.** நம்மவர் பலமிழந்து, கட்டுப்பாடற்று, ஒற்றுமையின்றி, மற்ற சமூகத்தவரால் அடக்கப்பட்டு, அவர்கள் எள்ளி நகையாடும் நிலேமையிலுள்ளதற்கு நம்மிடையேயுள்ள இப்பாழும் பிரிவுகளே காரணமாகும். இங்ஙனம் பிரிந்து நிற்பது அறிவிற்கும், அநுபவத்திற்கும் தேகதத்துவ ஆராய்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், பின் சந்ததியார்களுடைய நலத்திற்கும் ஒவ்வாததாகும்.

இந்நிலே மாறி, பிற்போக்கான ஜாதி என்னும் இழிந்த நிலேயையும் பெயரையும் நம்மவர் துடைத்து முன்னேற வேண்டுமானல், உண்மைச் செங்குந்தர் அனேவரும் ஒரு குடும்பத்தவரென, ஒரு ஏகோபித்த மனமுடைய பந்துக்கள்—சுற்றத்தாரென ஆகிவிடல் வேண்டும். சிறுசிறு கிராமங்களிலும் பல பகுதியினரெனப் பிரிந்து நிற்கும் மூடத்தனத்தை ஒழித்து, ஒரு கூட்டமாகிவிடல் அவசியமாகும். நான்கு ஐந்து குடும்பங்களேயுள்ள கிராமத்திலும் பல நாட்டார், பல சாரார் என நவக்கிரகம்போல் வெவ்வேறு பக்கமாகத் திரும்பி ஒற்றுமையும் இணக்கமும் இன்றி இருத்தலாகாது.

அவ்விதம் அனேவரிடமும் அந்யோந்ய பாவமும், உரிமை கலந்த ஒற்றுமையும் இலங்க வேண்டுமானல், இரத்தக் கலப்புள்ள சம்பந்தங்களால்தான் முடியும். **நேர்மையான, தூய்மையான, அறிவுக்கோத்த முறையில் சமூக ஒற்றுமையும், பந்தத்துவமும் ஏற்பட வேண்டுமானல் நம்மவர்களிடையே ஒற்றுமைத் திருமணங்கள், கலப்பு மணங்கள் மிகச் சர்தாரணமாக நடைபெறல் வேண்டும்.** நமது மாகாணத்தின் ஒரு பக்கத்தில், ஒரு கோடியில் உள்ளார் மற்ற பாகங்களில், மற்ருெரு கோடியில் உள்ள குடும்பத்தவரோடு சம்பந்தம் செய்தல் மிக அவசியமாகும். இது சமூகவளர்ச்சி, கட்டுப்பாடு, ஒற்றுமைகளுக்கு வழியாவது மட்டுமன்றி, தேக தத்துவ ஆராய்ச்சிப்படி பின் சந்ததியார் தேக மனே சக்திகள் நிறைந்த உரம் படைத்தோராதற்கும் ஏற்ற முறையாகும். மற்றும், வியாபார விஷயாதிகளுக்கும், கல்வி அநுபவ ஆராய்ச்சி யாதிகளுக்கும் இத்தகைய சம்பந்தங்களும் கலப்பு அல்லது ஒற்றுமை மணங்கள் அடிகோலுவனவாகும். அதனுடன் நம்மவர்களுக்கு அத்தகைய மணங்களின் மூலமாக அவசியமாக ஏற்படும் பிரயாணம், பல ஊர்க்காட்சி முதலியன விரிந்த அறிவையும், பரந்த நோக்கங்களேயும், உடல் நலத்தையும் நல்கும்.

**தேசமே இங்ஙனம் கலப்பு மணத்தால் ஒற்றுமைப்பட்டு, உரம் பெற்று முன்னேறி, அடிமைத் தளேயைத் தறித்தெறிதல் வேண்டுமென அறிவுடையா ரனேவரும் ஒரு முகமாகக் கூறி வருகின்றனர். ஆனல், அது** இயற்கைப்படி, பல்வேறு உட்பிரிவுகளுடைய சமூகங்கள் தத்தம் உட்பிரிவுகளேக் களேந்தெறிந்து ஏகோபித்த சமூகமாகிய பின்பே சாத்தியப்படும். **ஒரு ஆற்று வெள்ளம் வரும்போது முதலில் வழியிலுள்ள சிறுசிறு குழிகள் நிரம்பி வழிந்து, ஏகமாக ஆகிப் பின்னர் மேலும் மேலும் வழிந்து, பெரிய கிளேகளாக ஓடும் ஜலபாகங்களே ஒன்றயக்கூட்டி, முடிவில் ஒரே ஆறாக—பெரிய நீர்ப்பரப்பாக ஓடுதல் போன்று,** நம் தேசத்திலே சிறுசிறு சாரார்களாகப் பிரிந்துள்ள ஜாதிகளுள்ளும் உட்பிரிவான குடும்பங்கள், நேர்மையான கலப்பு, ஒற்றுமை மணங்களால் உட்பிரிவற்ற ஒரே ஜாதியாகி, தம் போன்ற உட்பிரிவற்ற பெரிய ஜாதிகளுடன் மீண்டும் கலந்து, முடிவில் ஏகமாக இந்தியர், பாரத மக்கள் என்று ஒரு தேசீய சமுதாயமாக உலக வாழ்க்கையில் முன்னேற்ற மடைதல்வேண்டும்.



இதற்கெல்லாம் அடிப்படையாக நமது குலத்தவரிடையே நாம் செய்துகொள்ள வேண்டிய அவசரமான, அவசியமான சீர்திருத்தம், பல்வேறு உட்பிரிவுகளேயும் ஒன்ருகத் திரட்டுதலே யாகும். அங்ஙனம் செய்தற்கு நேரிய முறை, **நமது மாகாண மகாநாடுகளில் திரும்பத் திரும்ப நிறைவேற்றி வரும் ஒற்றுமைத் திருமணத் தீர்மானத்தை அமுலில்—செய்கையில் காட்டுவதுவே ஆகும்.**

இதற்கு அறிவும் தீரமும் உள்ள இளேஞர்கள் முன்வர வேண்டும். தமது பெற்ருேர் உற்ருர்களே அன்புடன் கலந்து, மரியாதையாகத் தம் வசம் திருப்பி, கலப்பு மணம் முடித்துக்கொள்ளல் வாலிபர்களது கடமையாகும். சில சந்தர்ப்பங்களில் தமது கொள்கை முற்றிலும் சரியெனத் தோன்றிய போதிலும், உற்ருரின் உத்தரவைப் பெறக் கூடவில்லேயானல், எதிர்ப்புகள் தோன்றி இடைஞ்சல்கள் நேரக் கூடும். ஆனல் அந்த எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல், சமூக சேவையின், குலநலத்தின், தேசீய லட்சியத்தின் பொருட்டு தியாகங்களுக்குத் தயாராய் இளேஞர்கள் முன் வரவேண்டும். அத்தகையோர்களின் தூய்மையான தியாகத்தின், சகிப்புத் தன்மையின் பேரில்தான் சமூக முன்னேற்றத்தின் அஸ்திவாரம் நாட்டப்பெறல் கூடும்.

நமது அநுபவசாலிகளான பெரியோர்களும், முதியார்களும் இற்றைய உலகம் போகும் வேகத்தையும் தீவிர மாறுதல்களேயும் அநுசரித்து, குலநலத்திற்கென ஒற்றுமை, கலப்புத் திருமணங்கள் செய்ய முன்வரும் வாலிப வீரர்களேப் பயங்காட்டி, மிரட்டி அடக்கிவிடாமல் ஒத்தாசையும் ஊக்கமும் காட்டி உதவுதல் அவர்கள் பின் சந்ததியார்களுக்குச் செய்யவேண்டிய அவசியமான கடமையாகும்.

நமது பெரியார்களில் சிலர், ‘உள்ளூரில் விலேயாகாத மாடு பிரயோஜன மில்லே’ என்ற ஒரு வாக்கியத்தைச் சொல்வார்கள். ஆனல் இவ்வாக்கியம் எழுந்த காலம் யாது? அக்காலத்தில் உள்ளூர் என்பது எது? இப்போதைய காலமும், ஊர், நாடுகளின் இருப்பும் என்ன? என்பதை அவர்கள் ஆழ்ந்து கவனிப்பதில்லே.

எக்காலத்திலோ, போக்கு வரவு சாதனங்களும் சௌகரியங்களும் அற்ற காலத்தில், ஒவ்வொரு குடும்பத்தவரும் கிராமத்தவரும் தங்கள் தங்கள் அவசியங்களேத் தாங்களே தங்கள் காலடியில் செய்து பெற்றுக்கொண்ட காலத்தில் எழுந்த வாக்கியம் அது. ஆனல் தற்போதோ, ரயில் மோட்டார், கப்பல், ஆகாயவிமானம், தந்தி, டெலி

போன், டெலிவிஷன், ரேடியோ, தந்தியற்ற மின்சார யந்திரங்கள், சக்திகள் ஆகியவை மனித சமூகத்தின் தொண்டிற்கென ஏற்பட்டு இப்பூவுலகம் முழுவதும் ஒரே குக்கிராமம் என்னும்படி பேசவும், போகவும், வரவும், சுற்றவும் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் அந்தப் பழைய வாக்கியத்தை எடுத்து உபயோகிப்பது சிறிதும் பொருத்த மற்றதாகும்.

ஆதலின், எவ்வகையாலும் மறுத்துக் கூற முடியாததும், தேச சமூக நலன்களுக்கும், பின் சந்ததியார்களுக்கும், முன்னேற்றத்திற்கும், மற்றும் அறிஞர்கள் அறிவிற்கும் ஏற்றதுமான ஒற்றுமை மணங்களையும், கலப்பு மணங்களையும் தீவிரமாகச் செய்து ஒற்றுமைப்பட்டு முன்னேற்ற மடைவோமாக.

குறிப்பு:—இதற்கு நமது மித்திரன் மிக முக்கியமான தொண்டாற்றல் வேண்டும். மற்ற தேசங்களைப் போலன்றி நமது நாடு பரந்து விரிந்து கிடக்கும் கண்டமாகலின், ஒரு பாகத்திலிருக்கும் நம்மவர்கள் மற்ற பாகங்களி லுள்ளவர்களைப்பற்றி யறிய முடியாமலே இருந்து வருகிறார்கள். அக்குறையை நீக்கி, நம்மவரை ஒன்று கூட்டுவிக்கும் மித்திரனை நம்மவ ரனைவரும் தமது கடிதக் கட்டெனவோ, கைப்புத்தகமெனவோ செய்துகொள்ள வேண்டும். அவ்வளவு பெருக்கம் பெறும்படி அனைவரும் சந்தாதாரர்களாய்ச் சேரல் மட்டுமன்றி, அதற்கு வேண்டிய பொருள் உதவியும் புரிதல் வேண்டும்.

மற்றும் மித்திரன் (ஆசிரியர் முதலானோர்) கடமை யாதாகுமெனில், நம்மவரில் முன்னணியில் உள்ள வாலிபர்களுக்கும், மற்றோருக்கும் ஒற்றுமைத் திருமணங்களைப்பற்றி விளம்பரப்படுத்தி, சாதனைக்கு வேண்டிய சமாச்சாரப் போக்கு வரவுக்கு ஒத்தாசை புரிவதே யாகும்.

இது ஒரு வியாபார விஷயமல்ல என்றும், சமூக நலத்திற்கு நாம் துணிவாகச் செய்யும் சேவையென்றும் வாலிபரும் மற்றோரும் கொண்டு திருமணங்கள் நடைபெற வேண்டிய குடும்பங்களி லுள்ளாரோ மற்றையோரோ விபரமாக மித்திரனில் வெளியிட்டு ஒற்றுமை மணங்கள் பல நடத்தி முடிக்கவேண்டும். பெயர் முதலிய விபரங்களை வெளியிடல் சங்கோஜமும், பிற்பாடு தொந்தரவுகளும் தருவன ஆதலால், குறிப்பாகக் காட்டி மித்திரன் ஆசிரியர் மேல்பார்வைக்கு விலாசமிட்டு உண்மை விலாசத்தை ஆசிரியருக்கு எழுதியனுப்பினால் அவர்கள் இப்பெரும் சமூகப்பொருப்பை அதிக சிரத்தையோடும், சமூக சேவையில் ஆர்வத்தோடும், யுக்தானுசாரம், விஷயங்களை மறை பெயருடனோ, குறிப்பாகவோ வெளியிட்டு, அதற்கு அவர் பெறும் பதில், கேள்வி, வியரங்களைப்பற்றி மிகவும் அந்தரங்கமாக அதில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொண்டு நேர்மையான, தூய்மையான, நியாயமும் நாணயமும் பொருப்பும் வாய்ந்த முறையில் காரியங்களை நடத்திக்கொடுக்கத் துணைபுரிவார். இவ் வாலோசனையை ஏற்றுக்கொண்டு, இவ்வேற்பாடு செய்யப்படுமாயின் அதிக சீக்கிரத்திலே நம்மவர்களை ஒற்றுமைப்படுத்தல் இயலும் என்று பெரிதும் நம்புகிறேன்.

இது சமூக நலத்தின் ஆர்வத்தால், ஒன்றுபடல் வேண்டும் என்னும் வேட்கையால், நம்மவர் பிற்போக்காளர் என்னும் இழிந்த பெயர் ஒழிக்கப்படல் வேண்டும் என்னும் ஆத்திரத்தால் வரையப்பட்டதாகும். பெரியோர் குற்றங்களைப் பொறுத்து குணங்களைக் கொண்டு ஒற்றுமைத் திருமணங்களை ஒல்லும் வகை முடித்து நலம் விளைக்க வேண்டுமென வேண்டுகிறேன்.

# கபிலாசலக் குமரேசர் பிள்ளைத்தமிழ்

[போ. முருக முதலியார், மோகனூர்]

(சென்ற இதழ் 413-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகைப் பருவத்தில் உள்ள ஒரு செய்யுள் வருமாறு:

அட்ட தருந்தா திளமையினெள்
ளளவு பசியுந் தரியாமல்
அகடுள் ளொட்டிக் குழைந்துபவ
ளத்தி னதரங் குவித்தழுது
முட்டித் துடித்துப் புரண்டு துள்ளி
முகத்தி லுகிர்வைத் துழுதுகதிர்
முத்தம் பதிபைம் பொன்னூசன்
முரண வுதைந்து பெருவிரலை
இட்டங் கொண்டு சுவைத்தமுத
மிழியக் கடைவாய் வழி மெள்ள
எழுந்து தவழ்ந்து விழுதேய்த்தே
யேங்கி மடிவீற் றினியமதி
வட்ட முகம்பார்த் துமைதனப்பால்
வாரி யுண்டோன் வருகவே
வடமே ருவெனுங் கபிலைமலை
வடிவேற் குமரன் வருகவே.

இச்செய்யுளுள் நம் புலவர் தமது சொல்லோவியத்தின் வழி முருகனது இளமைத் திருவிளையாட்டை யமைத்துக் காட்டல் பன்முறையும் அறிந்து மகிழ்தற் குரியதே யன்றோ? அட்டதை அருந்தாத பிள்ளைப் பிடிவாதமும், எள்ளளவு பசியுந் தரியாமல் அதரத்தைக் குவித்து அழும் செயலும், துடித்துத் துள்ளித் தன் முகத்திற் சிறு சினத்தால் நகங்கொண்டு கீறிக்கொள்ளும்

'கள்ளத்தனங்களும்', அவ்வாறெழுந்த சினம் ஊசலிற் கிடத்திய பொழுது அவ்வூசலை உதைப்பதிலும் விழி தேய்ப்பதிலும் முடிவதும், பின்பு சினமாறி ஏங்கி மடிவீற்று உமை தனப்பாலை வாரி யுண்ணும் பெருஞ்சாந்தம் அமைவதுமாகிய காட்சிகள் இச்செய்யுளின் சொல்வழியே அகக்கண்ணிற் புலனாதல் காண்க. இந்தச் செவ்வியை இயற்கையிலே கண்ட முதலியார், உரையி னுரைக்கும் எழில், உள்ளத்தைக் கொள்ளை கொள்வது ஒரு வியப்பேயோ! இன்னும் இத்தகைய இனிய செய்யுட்களை எடுத்துக்காட்ட 'மித்திரன்' இடங்கொடாதென்னும் அச்சம் உந்தச் சில செய்யுட் பகுதிகளை மட்டும் இங்கே கூறுகின்றேன்.

கலைமகள், பிரமன் திருநாவில் உறைவதற்குக் காரணம் கற்பிக்கையில், அந் நா, மறைமொழியை இடையறாது நவிலுவதாதலின் இனியதென உறைகின்றன ளென்கின்றனர்;

“ கலைகட லிடையொரு பணிமுது கலைமிகு
கவினொடு மறிதுயில் மேவினோன்
கனிசுத னதுமறை மொழியினி தேனவளர்
களியொடு முறைதரு நாவினாள் ”

* * *

“வித்துரு மச்செவ ரத்தமு ருக்கென
மிக்குயர் சேயிதழாள்
விற்பிறை யைப்பொரு மத்தக மைக்குழல்
வெற்பிறை யோன்மகளாம்
உத்தமி சத்தியு மைக்கொரு புத்திர
வுத்தம னாகுகா ”

என்ற அடிகள் சந்தந் திகழ்ந்து இன்னோசை யூட்டுதல் காண்க.

* * *

“கஞ்ச மலைய முகங்குவளைக் கனிகட் செவிலித் தாயர்நிதங்
கருதிப் புதுப்பன் னீராட்டிக் கண்ணிற் கணியஞ் சனந்தீட்டிக்
குஞ்சி முடித்து மலர்சூட்டிக் குன்றா வமுதஞ் சங்கிட்டுக்
கொவ்வைக் கனிவாய் வைத்தூட்டக் குழைந்து முமிழ்ந்துங்
[கொட்டுண்டு
மிஞ்சி யமுதம் வேண்டுமென விம்மிச் சிறிய குறும்புசெயும்
விகடஞ் சிறந்த வருண்மழவே விலகாச் சுகந்த விழுப்பொருளே
அஞ்சங் கரனுக் கிளையாய்நின் னடியேஞ் சிற்றி லழியேலே
அருளார் கபிலை வரையின்முரு கையா சிற்றி லழியேலே ”

என்ற சிற்றிற் பருவத்துச் செய்யுள் முருகவேளின் குறும்பு செய்யும் விகடத்தைத் தெரிப்பது காண்க.

“வையம் பரவும் பொன்னியலை வாரிக் குவித்த மணிமுத்தை
வன்னச் சிறுமின் னார்முற்றில் வாரிக்கொணர்ந்து கைம்மலராற்

# பொன் மொழிகள்

உறுதியான உள்ளத்துடன் தொண்டாற்ற வேண்டியதின் அவசியத்தைப்பற்றி சுவாமி விவேகாநந்தரின் உபதேசம் மிக உருசி உடையதாக இருப்பதால் அதனைக் கீழே தருகிறோம்.

“திடபுத்தியுடனும், தூய்மையான இலட்சியத்துடனும் பயமின்றி நின்றால், உன்னை எவரும் உன் பாதையினின்றும் அகற்ற முடியாது. சில மனிதர் அதைக் கெடுதலெனக் கூறுவதாலும், நமக்கு விரோதமாக இருப்பதாலும் நமது தூய்மையான இலட்சியத்தினின்றும் ஏன் நழுவவேண்டும்? கூடாது! அங்ஙனம் செய்யவே கூடாது. உலக மனைத்தும் நமக்கு விரோதமாக இருந்தாலும், நாம் அசையாது நின்று நம் இலட்சியத்திற்கு உழைக்கவேண்டும். இதற்குப் பலமும், தீர்மான புத்தியும் நம்மிடம் வேண்டும். யாவும் கரடு முரடின்றி ஒழுங்காகச் செல்லும் சமயத்தில் எவரும் தீர புருஷனாக இருக்கலாம். ஆனால் உலக முழுவதும் தனக்கு விரோதமாகச் செல்லும் காலத்திலும் தன் நிலையில் உறுதியுடன் நிற்பவனே உண்மையான தீர புருஷன். இது வாழ்க்கையின் சோதனையாகும்.”

* * *

வார்தாவுக்கடுத்த டாலக்கான் நகரில், உயர்தர நீதிமன்ற நியாயவாதி திரு. என். ஜி. டியோ தலைமையில் “பால்பிஹிம் வியாயம் ஷலா”வின் ஆண்டு விழா நடைபெற்றது. அப்பொழுது தலைவர் தமது சொற்பெருக்கில் கூறிய அரிய உபதேசம் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

“நாகரீகமா யிருங்கள்! முன்னே நோக்குங்கள்! முன்னுக்குச் செல்லுங்கள். அமிழ்ந்து கிடக்கும் பழைய செய்கைகளுக்கு வருந்

---

செய்யுஞ் சிறிய குடின்முழுதுந் தேவர் நாகர் பூவுலகோர்
திருமா முடியிற் புனைநினது திருத்தாள் கன்ற வழித்திடல்யாம்
உய்யும் வகையின் றிறமுண்டோ வுலக முழுதும் படைத்தல்வல
ஒருநான் முகனைச் சிறைவைத்த வுயர்வே புவன முழுதீன்ற
ஐயை யளித்த வெமதையா வடியேஞ் சிற்றி லழியேலே
அருளார் கபிலை வரையின்முரு கையா சிற்றி லழியேலே”

என்பதில் சிறுமியர் சிற்றி லமைக்க ஆக்கும் முயற்சித் திறமும், அதனை அழிக்கப் புகுந்த முருகன் திருத்தாள் மூவுலகினர் முடியிற் புனையப்படுவதாதலின் இச்சிற்றிற் சிதைக்கும் சிறுதொழிற்கமைந்த தன்றெனக் கிளத்தலும் பிறவும் தமிழ்ச்சுவையை வெளியிட்டு விளங்குதல் காண்க.

துங்கள்! எதிர்கால அழைப்புக்குச் செவி சாயுங்கள். அது மிகவும் பெரிது. வயது முதிர்ந்தவர்களோடு போராடுவது கடினமானதே! அவர்களின் கண்கள் பழமையிலேயே பதிந்திருக்கின்றன. அவர்களுடைய கால்கள் முன்னேற்ற வழிக்கு வர மறுக்கின்றன. அவர்கள் இறந்தவர்களால் ஆளப்படுகின்றார்கள். குறைந்த மதப்பற்றும் அதிக விஞ்ஞானமும் இந்தியாவுக்கு நன்மையைச் செய்யாது.

இன்றுள்ள மாணவனே நாளை தேசத்தின் போர்வீரன்—சுயராஜ்யத்தின் போர் வீரன். ஆனால் யாருடைய சுயராஜ்யம்? முகமன் பேசித்திரியும் வக்கீல்களின் சுயராஜ்யமல்ல! வக்கீலை ஒரு பொழுதும் நம்பாதீர்கள்! நான் ஒரு வக்கீலா யிருந்தபோதிலும் இதனைக் கூறுகின்றேன். வக்கீல்களின் ஆதிக்கத்தைவிட பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தையே நான் விரும்புகின்றேன். நமது முக்கிய பிரச்னைகள் இரண்டுதான். இந்துக்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்குவது, இந்து-முஸ்லிம் வேற்றுமையைப் போக்குவது. எனது இந்தியா ஒரு ஐக்கிய இந்தியா. எனது தேசம் நாகரீகமானது, முன்னேற்ற மடைந்தது, ஐக்கியமுள்ளது. இதுவே எனது கனவு. நல்லது; இதனை நீங்கள் உண்மை யாக்குங்கள்!"

*  *  *

**சென்னை மாணவர்கள், புலாபாய் தேசாய்க்கு சமீபத்தில் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரத்திற்கு அவர் பதிலளித்த போது கூறியதாவது:—**

"மாணவர்கள் பொது விஷயங்களில் தலையிடுவதுபற்றிப் பலர் பல அபிப்பிராயங்களைச் சொல்லுவது வழக்கம். நீங்கள் கல்லூரிகளில் மற்ற தேசங்கள் எவ்வாறு அபிவிருத்தி அடைந்து வருகின்றன என்பதைப் படித்தால் மட்டும் போதாது. மற்ற நாடுகள் எவ்விதம் சுதந்திரம் பெற்றன என்பதை நன்கு படித்தால் மட்டும் பிரயோஜனமில்லை. உங்கள் கல்வியின் பயனாக சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்து நம் நாட்டிற்கு இப்பெருமையை அளிக்கவே நீங்கள் முயல வேண்டும்.

மாணவர்களுக்கு முக்கியமாக மூன்று விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எப்பொழுதும் கதரையே உடுத்த வேண்டும். கதர் கட்ட முடியாது போனால் சுதேசியை ஆதரிக்கவேண்டும். எப்பொழுதும் உண்மையையே பேசுவதுடன் அஹிம்சா தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். முடிவில் நீங்கள் கோழைத்தனமாக இருத்த லாகாது. அஞ்சா நெஞ்சம் படைத்து தைரியத்துடன் விளங்க வேண்டும். உங்கள் மனதில் பயம் குடிகொள்ளுமாயின் நீங்கள் என்றும் அடிமைப் பாசத்தை ஒழிக்க முடியாது. சுதந்திரத்தை விலை கொடுத்து வாங்க முடியாதென்பதை நீங்கள் உணரவில்லையேல் நமது போராட்டமெல்லாம் பயனற்றதாகும்.

*  *  *

**திருச்சியில் நடைபெற்ற திருச்சி ஜில்லா வியாபாரிகள் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவில் தலைமை வகித்த திருச்சி முனிசிபல்**



**சேர்மனாக யிருந்த திரு. பி. ரெத்தினவேலு தேவர் வர்த்தகர்களுக்குப் பல அரிய பொன் மொழிகளைக் கூறி யிருக்கின்றார். நம்மவர்களில் பெரும்பாலோர் வர்த்தகர்க ளாகையால் அதன் முக்கிய பாகத்தைக் கீழே தருகிறோம். அவர் கூறுவதாவது:—**

"முக்கியமாக நமது வாலிபர்கள் சர்வ கலாசாலைப் பட்டங்களையே பெரிதெனக் கருதி அல்லும் பகலும் புஸ்தகங்களைக் கரைத்துக் குடித்து, பெற்றோர்களுக்கு வீண் பணச் செலவு வைத்து, பட்டத்தைப் பெற்று, ஏட்டுச் சுரைக்காயாக வீட்டில் உட்கார்ந்து கொண் டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமையானது தங்களுக்கும் பயன்படுவதில்லை. தேசத்திற்கும் பயன்படுவதில்லை. முறுக்கான வாலிபப் பருவத்தை வீணாக்கி, மனம் தளர்ந்து சோகமுற்றிருந்தால் நாடும், நகரமும், வீடும் என்னாகும்? எல்லோருங்கூடி இந்த நிலைமையை மாற்ற தீவிர முயற்சி செய்யவேண்டியது இன்றி யமையாத காரியமாகும். பெரிய பட்டப் பரீக்ஷைகளில் தேர்தல் பெறுவதே மனித லக்ஷியமாக இருக்கக்கூடாது. பட்டம் பெற்றவர் ஒவ்வொருவரும் உத்தியோக வேட்டையிலேயே இருந்தால் தேசம் முன்னுக்கு வருவது மிகவும் கஷ்டம். பகுத்தறிவை உபயோகப்படுத்தவும், உலக ஞானத்தை அறியவும், உள்நாடு, வெளிநாடு விஷயங்களைத் தெரியவும் அனுகூலமாயுள்ள அளவான கல்வி இன்றி யமையாதது. வியாபாரிகள் தங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் தக்க கவனம் செலுத்த வேண்டும்.

அன்றியும் வெளி நாடுகளில் படித்தவர்கள் எல்லாம் வியாபாரத் துறையிலிறங்கி தீவிரமாக உழைத்து வருகின்றார்கள். நம் நாட்டிலோ வியாபாரம் என்பது படிக்காதவர்களுக்குத் தான் என்றும், படித்தவர்கள் உத்தியோகத்திற்குத் தான் போகவேண்டும் என்றும் ஒரு மனப் பான்மை யிருக்கிறது. இதை உடனே மாற்றவேண்டும்."

**இனி விளம்பரத்தைப்பற்றி அவர் கூறுவது கவனிக்கத்தக்கது. விளம்பரம் செய்வதினால் வீண் செலவு என்பது நமது வர்த்தகர்களில் ஒரு சிலரின் கருத்து. அது முற்றிலும் தவறாகும். விளம்பரம் வர்த்தகத்திற்கு உற்ற தோழனாகும். விளம்பரத்தினால் மேனாட்டார் கோடிக் கணக்கான திரவியத்தை சம்பாதித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக திரு. தேவர்**

"எந்த வியாபாரத்திற்கும், தக்க விளம்பரம் வேண்டும். ஆரம்பத்தில் இந்த செலவு கைப்பொருப்பாகத் தோன்றினும், கடைசியில் நல்ல விளம்பரமே தக்க ஊதியத்தை (லாபத்தை)க் கொடுக்கும். மேல் நாட்டார் வியாபாரத்தின் கொள்முதலுக்குச் சமமான தொகையை விளம்பரத்தில் செலவிடுவதை நாம் கண்கூடாகக் கவனிக்கின்றோம்" என்று எடுத்துக் காட்டி யிருக்கின்றார்.

---

# THE SENGUNTHAR EDUCATION FUND, MADRAS

(*Registered under the Societies Registration act XXI of 1860*)

## MEMORANDUM

I. Name :—

The Name of the Society shall be the "Sengunthar Education Fund."

II Office :—

The Office of the Sengunthar Education fund will be located in Madras.

III. Objects :—

The objects of the fund are ;—

(1) To take necessary steps for the encouragement and uplift of all kinds of Education—Culturral, Technical, etc., among the members of the Sengunthar *alias* Kaikolar Community.

(2) To spread commercial, economic, technical, and scientific knowledge among the Members of the community.

(3) To create and encourage friendly feelings and unity among the Members of the community.

(4) To make representations to local, Provincial and Imperial Authorities, or other public bodies on any matter affecting the educational interests of the community.

(5) To co-operate with other communal or other bodies or Associations, whose objects are

# செங்குந்தர் கல்வி நிதி, சென்னை

(1860-ம் வருட 21-ம் நெம்பர் சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.)

## ஏற்பாடுகள்

I. **பெயர்:**—இது செங்குந்தர் கல்விநிதி எனப் பெயர் பெறும்.

II. **காரியாலயம்:**— இந்நிதியின் காரியாலயம் சென்னையில் இருக்கும்.

III. **நோக்கங்கள் :**—நிதியின் நோக்கங்களாவன:—

(1) செங்குந்தர் அல்லது கைக்கோளர் சமூகத்தைச் சார்ந்தவர்களின் சாஸ்திரீய ஞானம், தொழிலபிவிருத்தியாகிய சகலவித முன்னேற்றங்களுக்கும் அவசியமான முயற்சிகளைச் செய்தல்.

(2) இக் குலத்தவர்களுக்குள் வர்த்தகம், பொருளாதாரம், தொழில், விஞ்ஞானமாகிய சாஸ்திர ஞானங்களைப் பரவச் செய்தல்.

(3) இச் சமூகத்தவர்களுக்குள் சிநேக பாவமும் ஒற்றுமையும் ஏற்படுத்தல்.

(4) செங்குந்தர்களின் கல்வியபிவிருத்திக்குத் தடையாயிருக்கக் கூடிய விஷயங்களுக்காக லோகல் போர்டுகள், முனிசிபாலிடிகள், மாகாண, இந்திய சபைகள், மற்றும் இதர பொது ஸ்தாபனங்களில் பிரதிநிதிகளை ஏற்படுத்தல்.

(5) முழுதுமோ அல்லது சிறிதோ இந்நிதியின் நோக்



wholly or partly identical with or similar to those of this fund in matters concerning the transactions and object of this fund.

(6) To accept any bequest, gift, donation, or subscriptions, to accumulate and provide Fund or Endowment and to invest the same, and apply the income arising therefrom for any of the objects of the Fund.

(7) To aid and to receive aid from any other society, Association, or person, with a view to obtain any advantage, or benefit for the purpose of the fund and to subscribe to any fund or society, as may be considered deserving from time to time.

(8) To utilise the funds of the Association only towards the furtherance of the objects of the Association and not distribution among the members as profits.

(9) To do all such other things as may be incidental or condusive to the development and attainment of the above objects, or any of them.

IV. Governing Body:—

The following are the Members of the Governing Body of the Trust Fund elected on the 9th of Nov. 1930.

*President:*—
A. V. Muthiah Mudaliar B.A., B.L.,
(Pondicherry.)

*Vice-President:*—
S. Kolandaivelu Mudaliar,
(Mylapore.)

கங்களுக்கு ஒத்ததாகவும், இதைப் போன்றதாகவும் உள்ள வேறு சங்கங்களுடன் ஒத்துழைத்தல்

(6) நிதியை விருத்தி செய்வதற்காக அளிக்கப்படும் பொருள், தானம், நன்கொடை, சந்தா ஆகியவைகளைப் பெற்று, மூலதனத்துடன் சேர்த்து வைப்பதும், அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தை நிதியின் நோக்கங்களுக்காக செலவு செய்வதும்

(7) நிதியின் நடவடிக்கைகளுக்கு ஒத்தாசையாயிருக்கும் பொருட்டு இதர நிதிகள், சங்கங்கள், அல்லது மனிதர்களுக்கு உதவி புரிவதும், உதவி பெற்றுக் கொள்வதும், அவ்வப்போது தகுதியானதென நினைக்கும் நிதிகளுக்கோ கழகங்களுக்கோ சந்தா செலுத்துவதும்

(8) நிதியின் பொருளை அங்கத்தினர்களுக்குள் லாபமாகப் பங்கிடாமல் நிதியின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கே செலவழித்தல்.

(9) மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுதற்கும், அபிவிருத்தி செய்தற்கும் அநுகூலமாயுள்ள இதுபோன்ற எல்லா வேலைகளும் செய்தல்

IV. **காப்பாளர் சபை**

1930-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 9-ம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்குறிக்கப் பெற்றவர்கள் காப்பாளர் சபையின் அங்கத்தினர்களாவர்.

தலைவர்:— ஆ. வே. முத்தைய முதலியார், B.A.B.L., புதுவை.

துணைத்தலைவர் :— சு. குழந்தைவேலு முதலியார், திருமயிலை.

*Secretary* :—
S. T. Natesa Mudaliar, Saidapet.

*Treasurer* :—
V. Rathna Mudaliar, B.A., B.L., Mylapore.

*Members* :—
T. P. K. Arumuga Mudaliar, Tenkasi.
T. V. Arunachala Mudaliar, Saidapet.
M. V. Bhimaraja Mudaliar, Gudiyattam.
M. A. Kanagasabai Mudaliar, Kodambakam.
M. B. Kandaswamy Mudaliar, B.A., B.E., Dindigul.
S. Lakshmana Mudaliar, Iyyengarkulam,
R. Manicka Mudaliar, Unniyur,
K. Marimathu Mudaliar, Salem.
V. M. Mottaya Mudaliar, Erode.
M. Ramalinga Mudaliar, Triplicane.
K. V. Ramaswamy Mudaliar, Velayudampalayam Puthur.
T. N. S. Sabapathy Mudaliar, Tiruvarur.
A. Saravana Mudaliar, B.A., Madras.
M. Saravana Mudaliar, Mylapore.
A. K. S. Sivasubramania Mudaliar, Aruppukkottai.

*அமைச்சர்*:—S. T. நடேச முதலியார், சைதாபேட்டை.

பொருட்காப்பாளர்:—V. ரத்தின முதலியார் பி.ஏ., பி.எல். திருமயிலை.

இதர அங்கத்தினர்கள்

T. P. K. ஆறுமுக முதலியார், தென்காசி.
T. V. அருணசல முதலியார், சைதாப்பேட்டை.
M. V. பீமராஜ முதலியார், குடியேற்றம்.
M. A. கனகசபை முதலியார், கோடம்பாக்கம்.
M. B. கந்தசாமி முதலியார், பி.ஏ. பி.இ., திண்டுக்கல்.
S. இலக்குமண முதலியார், ஐயங்கார்குளம்
R. மாணிக்க முதலியார், உன்னியூர்.
K. மாரிமுத்து முதலியார், சேலம்.
V. M. மொட்டயப்ப முதலியார், ஈரோடு.
M. ராமலிங்க முதலியார், திருவல்லிக்கேணி
K. V. ராமசாமி முதலியார், வேலாயுதம் பாளையம், புதூர்.
T. N. சபாபதி முதலியார், திருவாரூர்.
A. சரவண முதலியார், பி.ஏ., சென்னை.
M. சரவண முதலியார், திருமயிலை.
A. K. S. சிவசுப்பிரமணிய முதலியார், அருப்புக்கோட்டை.

## Rules and Regulations

**I. Name :—**

(1) The word "Fund" wherever it appears in this rule shall mean the 'Sengunthar Education Fund.'

## சட்ட திட்டங்கள்

**I. பெயர்**

(1) இந்த சட்ட திட்டத்தில் 'நிதி' என்று எங்கே காணப்படினும் அது, 'செங்குந்தர் கல்விநிதி' யையே குறிக்கும்.



II. Office :—

(2) The office of the fund will be located in Madras within the premises of the South Indian Senguntha Mahajana Sangam and all the account books and other records belonging to the fund shall be kept in the office itself. The office may be removed to any other place at Madras, as may be deemed necessary from time to time.

III. Board of trustees and members of the governing body:—

(3) The Fund shall be administered by a board of Trustees, consisting of 19 respectable members of the Sengunthar community, which shall be entitled "The Board of Trustees of the Sengunthar Education Fund, Madras."

(4) Among the nineteen members, one shall be the president, one the Vice-President, one the Secretary, and one the Treasurer, all of whom shall be elected by the Board of Trustees from among themselves once in five years.

(5) The Trustees of the Fund shall hold office for life.

(6) Vacancies arising in the Board of Trustees on account of resignation, or death of any Member shall be filled up by the remaining Trustees.

IV. Meetings :—

(7) The Board of Trustees shall ordinarily meet once in every quarter on the 1st Sunday of the

**II. காரியாலயம்**

(2) நிதியின் காரியாலயம் சென்னையில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க கட்டடத்தில் அமைக்கப்படும். கணக்கு புத்தகங்களும், இதர ரிகார்டுகளும் காரியாலயத்தில் இருக்க வேண்டும். அவசியமெனத் தோன்றும் சமயங்களில் சென்னையில் வேறு ஒரு இடத்துக்கும் காரியாலயம் மாற்றப்படலாம்.

**III. காப்பாளர் சபையும், அதன் அங்கத்தினர்களும்**

(3) செங்குந்தர்களுள் கண்ணியமான 19 அங்கத்தினர்களடங்கிய ஒரு காப்பாளர் சபையினரால் நிதி பராமரிக்கப்படும். இச்சபை, 'சென்னை, செங்குந்தர் கல்விநிதியின் காப்பாளர் சபை' என அழைக்கப்பெறும்.

(4) இப் பத்தொன்பதின்மரில் ஒருவர் தலைவராகவும், ஒருவர் துணைத் தலைவராகவும், ஒருவர் அமைச்சராகவும், ஒருவர் பொருட்காப்பாளராகவும் இருக்க வேண்டும். இவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை காப்பாளர் சபையினரால் தங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(5) காப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் தமது ஆயுள்பரியந்தம் அங்கம் வகிப்பார்கள்.

(6) ராஜீனமா செய்வதனாலோ, அல்லது இறந்து விடுவதனாலோ காப்பாளர் சபையில் ஏற்படும் அங்கத்தினர்களின் காலி ஸ்தானங்கள் மிகுதியுள்ள அங்கத்தினர்களால் பூர்த்தி செய்யப்படும்.

**IV. கூட்டங்கள்**

(7) காப்பாளர் சபையானது நிதியின் காரியாலயத்தில் மூன்று மாதங்களுக்கொருமுறை அதா

months of February, May, August and November and extraordinarily whenever necessary at the office of the Fund.

(8) The Secretary, in his absence the president or Vice-President shall have power to convene meetings of the Board of Trustees both ordinary and extraordinary.

(9) Quorum :—The Quorum for a meeting shall be five. A meeting adjourned for want of quorum shall meet on next Sunday, when no quorum shall be required to make the proceedings valid.

(10) The president shall preside over the meetings of the Board, and in his absence, the Vice-president, and in the absence of both, any member of the Board elected for the time being shall preside over the deliberations. The Secretary shall maintain a record of the proceedings and conduct all correspondence in connection with the administration of the Trust.

**(11)** Any Member who absents himself from attending the meeting of the committee continuously for one year shall be deemed to have vacated his seat.

**OR Any Member who conducts himself against the interest of the Trust Fund in the opinion of the**

வது பிப்ரவரி, மே, ஆகஸ்டு, நவம்பர் மாதங்களின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் சாதாரணமாய்க் கூடுவதன்றி, அவசிய மேற்பட்டால் விசேஷ கூட்டமும் கூடும்.

(8) காப்பாளர் சபையின் சாதாரண, விசேஷ கூட்டங்களைக் கூட்டுவதற்கு அமைச்சரும், அவரில்லாத சமயங்களில் தலைவர், துணைத் தலைவர்களும் அதிகாரம் பெற்றவர்களாவர்.

(9) ஒரு கூட்டம் நடைபெறுதற்குக் குறைந்தது ஐந்து அங்கத்தினர்களாவது வந்திருத்தல் வேண்டும். அவ்வாறு வராமையால் ஒத்தி வைக்கப்பெறும் கூட்டம் அதற்கடுத்த ஞாயிற்றுக்கிழமை கூட வேண்டும். அப்போது கூட்ட நடவடிக்கைகள் செல்லுபடியாவதற்கு இந்தக் குறைந்த அளவு அங்கத்தினர்கள் வந்திருக்க வேண்டுமென்பதில்லை.

(10) சபையின் கூட்டங்களுக்கு சபைத்தலைவரும், அவர் இல்லாத சமயத்தில் துணைத் தலைவரும் தலைமை வகிப்பர். இருவரும் வராதிருந்தால் சபையினரால் அப்பொழுது தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் அன்றைய கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அமைச்சர் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்து வைத்தலும், நிதி சம்பந்தமான கடிதப் போக்கு வரத்துக்கள் செய்தலும் வேண்டும்.

(11) சபையின் கூட்டங்களுக்கு ஒரு அங்கத்தினர் ஒரு வருடம் வரையில் தொடர்ச்சியாக வராதிருந்தால் அவர் தனது ஸ்தானத்தை இழந்தவராகக் கருதப்படுவார்.

**அல்லது ஒரு அங்கத்தினர் நிதியின் அபிவிருத்திக்கு பாதகமாய் நடந்துகொள்வதாக சபையினரால்**



Trust Board shall also be deemed to have vacated his seat.

(12) The Members thus disqualified are entitled to be restored to membership by a resolution of the committee.

V. Duties of the Board of trustees,

(13) The Board of Trustees shall take steps to increase and safeguard the monies and properties and award scholarships from and out of the interest or income accruing on the Trust monies and properties to deserving Senguntha students year after year, and publish the accounts of the Trusts once in every year about the month of may after verification by an Auditor.

(14) The Board of Trustees shall have power to frame or amend such Bye-Laws and Regulations from time to time as it may deem necessary for the proper discharge of their duties and for carrying out the objects of the Fund.

(15) The Board shall submit their accounts annually to the Executive committee of the South Indian Senguntha Mahajana Sangam on or before the 30th of April of every year.

VI. FUNDS :—

(16) The monies of the Trust shall be invested in the name of the Fund in fixed deposits in banks, Government Securities or Bonds, or on mortgage of immoveable properties situated in the city of Madras, or any other safe

கருதப்படினும் அவரும் தனது ஸ்தானத்தை இழந்தவராக எண்ணப்படுவார்.

(12) அவ்வாறு ஸ்தானங்களை இழந்தவர்கள் சபையின் தீர்மானத்தின்மீது மீண்டும் அங்கத்தினராக நியமிக்கப்பெறுதற்கு உரியவராவர்.

V. காப்பாளர் சபையின் கடமை

(13) நிதியின் பணத்தையும், சொத்துக்களையும் காப்பாற்றவும், விருத்தி செய்யவும் காப்பாளர் சபையினர் முயற்சித்து, அதிலிருந்து வரும் வட்டி அல்லது வருவாயைக்கொண்டு ஒவ்வொரு ஆண்டிலும் தகுதி வாய்ந்த செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவர். நிதியின் கணக்குகள் பரிசோதகரால் சோதிக்கப்பட்டபின் ஆண்டுதோறும் மே மாதத்தில் வெளியிடப்படும்.

(14) நிதியின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கும், தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்தற்கும் அவ்வப்போது அவசியமாய்த் தோன்றுவதற்கேற்ப உபசட்டங்களை உண்டுபண்ணவும், திருத்தஞ் செய்யவும் காப்பாளர் சபையினருக்கு அதிகாரம் உண்டு.

(15) ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் 30-ந் தேதிக்குள், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு இச்சபையினர் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

VI. நிதி

(16) நிதியின் பணத்தை அவ்வப்போது காப்பாளர் சபையினர் தீர்மானிக்கின்றபடி நிதியின் பெயரால் காலாந்தர வருமானம் வரக்கூடிய பாங்கி பிக்ஸட் டிபாஸிட்டுகளிலோ, அரசாங்க பாண்டு, பத்திரங்களின் பேரிலோ, சென்னை நகரத்திற்குள் உள்ள ஸ்தாவர சொத்

investment, or by purchase of house or other immoveable properties within the city of Madras, which will fetch periodical income as the Board of Trustees may determine from time to time.

(17) All monies belonging to the Fund shall be invested in the joint names of the Secretary and Treasurer. They shall also have the power to withdraw under their joint signatures as officers of the fund, the monies with the previous sanction of the Board.

(18) The Treasurer shall be in charge of all the accounts of the Fund and shall maintain the same.

(19) The working expenses of the Trust shall be met out of the yearly interest or income accruing from the investments which shall be considered the normal income of the Trust.

VI. Dissolution:—

(20) On the dissolution of the **Trust** the accumulated Funds **shall** be transferred to the University of Madras for the benefit of Members of the Sengunthar Community under such conditions and rules as may be determined upon at the time of the dissolution.

*துக்களின் அடமானத்தின் பேரிலோ கொடுத்து வைத்தல், வேறு பத்திரமான வழிகளில் சேமித்து வைத்தல், சென்னை நகருக்குள் வீடுகளோ அல்லது இதர ஸ்தாவர சொத்துக்களோ வாங்குதல் ஆகியவை செய்யலாம்.*

(17) *நிதிக்குரிய எல்லாப் பணத்தையும் அமைச்சர் பொருட்காப்பாளர் கூட்டுப் பெயரில் சேமித்தல் வேண்டும். அவர்கள், காப்பாளர் சபையின் உத்தரவின்மீது, நிதியின் உத்தியோகஸ்தர் என்ற முறையில் தங்கள் கூட்டுக் கையெழுத்துக்களுடன் பணத்தைத் திருப்பி வாங்குதற்கும் அதிகாரம் பெற்றவர்களாவர்.*

(18) *பொருட்காப்பாளர் நிதியின் எல்லா கணக்குகளுக்கும் பொருப்பாவதோடு கணக்குகளைப் பதிவு செய்தும் வைக்க வேண்டும்.*

(19) *நிதியின் சாதாரண வருமானமாகக் கருதப்படும் மூலதனத்தின் வருஷாந்திர வட்டி அல்லது வருவாயிலிருந்து நிதியின் நிர்வாகச் செலவு தாங்கப் பெறும்.*

VI. கலைத்தல்

(20) *நிதி கலைக்கப்படுமானால் செங்குந்தர்களின் நன்மையின் பொருட்டு அச்சமயம் தீர்மானிக்கப் பெறும் சட்ட திட்ட ஏற்பாடுகளின்படி பெருகியுள்ள மூலதனத் தொகை, சென்னை சர்வகலாசாலையாரிடம் ஒப்படைக்கப்படும்.*

# வர்த்தமானம்

## தமிழ் நாட்டு நடப்பு

### வரப்போகும் தேர்தலில் தமிழ் நாட்டின் அபேட்சகர்கள்:

*இந்திய சட்ட சபைக்கு தமிழ் நாடு ஏழு பிரதிநிதிகளை அனுப்ப உரிமை பெற்றுள்ளது. இந்த ஏழு பதவிகளுக்கும் பல கக்ஷிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் போட்டி போடுகின்றனர்.*

**சென்னை நகரம்**

*காங்கிரஸ்:* திரு. எஸ். சத்தியமூர்த்தி.
*ஜஸ்டிஸ்:* திவான் பஹதூர், ஏ. இராமசாமி முதலியாா.

**செங்கற்பட்டு, தென்னாற்காடு**

*காங்கிரஸ்:* திரு. சி. என். முத்துரங்க முதலியார்.
*சுயேச்சை:* திவான் பஹதூர், எம். கே. ரெட்டி.
*ஜஸ்டிஸ்:* திரு. டி. எம். ஜம்புலிங்க முதலியார்.

**சேலம், வடாற்காடு, கோயமுத்தூர்**

*காங்கிரஸ்:* திரு. டி. எஸ். அவனாசிலிங்கம் செட்டியார்.
*சுயேச்சை:* திருமதி, ராதாபாய் சுப்பராயன்.
*கட்சியில்லாதவர்:* டாக்டர், பி. வரதராஜுலு நாயுடு.
(ஜஸ்டிஸ் கட்சியினர் இத்தொகுதியில் போட்டி போடவில்லை.)

**தஞ்சை, திருச்சி**

*காங்கிரஸ்:* டாக்டர், டி. எஸ். எஸ். ராஜன்.
*சுயேச்சை:* திரு. ஏ. பி. கே. வி. நாடிமுத்துப் பிள்ளை.
*சனாதனி:* திரு. இராஜா பஹதூர், கிருஷ்ணமாச்சாரியார்.

**மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி**

*காங்கிரஸ்:* திரு. குமாரசாமி ராஜா (ராஜபாளையம்).
*ஜஸ்டிஸ்:* திரு. பி. எஸ். ராஜப்பா (பாப்பநாடு இளைய ஜமீன்தார்).

**முகம்மதியர் தொகுதி**

*தேசியவாதி:* மௌல்வி ஸையத் மூர்துஸா ஸாஹேப் (போட்டியில்லை).

**தென்னிந்திய வர்த்தக சபை**

*காங்கிரஸ்:* சாமி வெங்கடாசலம் செட்டியார்.
*கட்சியில்லாதவர்:* ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார்.

### திருச்செங்கோடு இரதோற்சவம்:

*தொள்ளாயிரம் அடிக்கு மேல் உயர்ந்து, வண்மையும், வனப்பும் பெற்று, காண்போர் கண்களை விரைவில் கவரும் தன்மை வாய்ந்து, பார்வைக்கு மிகுந்த உற்சாகமும், வியப்பும் விளைவிக்கக்கூடிய அழகிய கோட்டின் மேல் வைகாசிமீ 6உ ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரப் பெருமாநக் கொடியேற்றம் நடந்தது.*

மறுநாளும், அதற்கடுத்த நாளும் மலையின் மேல் அபிஷேக, அலங்காரங்களுடன் உற்சவம் நடைபெற்றது. 9ௗ செவ்வாய்க் கிழமை வெள்ளி சப்பர உற்சவம் கீழே சிறப்பாக நடைபெற்றது. இரவு விமானக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. தரிசனத்திற்கு இருபதாயிரம் ஜனங்களுக்கு மேல் வந்திருந்தனர். ரிஷப வாகன உற்சவம், யானை வாகன உற்சவம், குதிரை வாகன உற்சவங்களும் சிறப்பாகவே நடைபெற்றன. 9-ம் நாள் இரதோற்சவம் பல்லாயிரக் கணக்கான மக்களின் குதூகலத்தினிடையே வெகு விமரிசையாய் நடந்தேறியது.

---

வந்தவாசி தாலுக்கா, குண்ணகம்பூண்டி புதூர் கிராமத்தில், பவஞு ஆடிமீ 5ௗ சுக்ரவாரம் சுந்தரமூர்த்தி சுவாமி திருநட்சத்திரத்தன்று வழக்கம் போல் மகா குருபூஜை நடந்து சுமார் 200 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. அன்றிரவு ஷை கிராமத்தில் குமரகுரு மலையின் மீது எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு, சங்காபிஷேகத்திற்கு சங்கு ஸ்தாபன கலச ஸ்தாபனம் செய்யப்பெற்று மறு தினம் செய்ய வேண்டிய சடங்குகளுடன் செவ்வனே அபிஷேகம் செய்து நண் பகலோடு தீபாராதன தரிசன காக்ஷி நடந்தேறியது.

பிற்பகல் 3 மணி முதல் விழுப்புரம் தாலுக்கா கல்லாலம்பூண்டி மடாதிபர், திருவாளர், திருஞான சிவயோக முருகானந்த ஸ்வாமிகள் தலைமையின் கீழ் மகா-ள-ள-ஸ்ரீ, நடேச முதலியார் (ஆசிரியர்) அவர்களால் பக்தி, கடவுள் வணக்கம் என்பதைப்பற்றியும், மகா-ள-ள-ஸ்ரீ, M. பொன்னுசாமி ஆசிரியரால், விபூதி, ருத்ராக்க மகிமை என்பதைப் பற்றியும் வெகு தெளிவாய் பல்லோர் வியக்குமாறு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. தலைவர் ஜீவகாருண்யம் என்பதைப்பற்றி கேழ்ப்போர் மனம் உருகுமாறு திருவாய் மலர்ந்தருளினார். பின் மணி 7-க்கு தலைவருக்கு வந்தனோபசாரம் கூறி கூட்டம் இனிது கலைவுற்றது.

அன்றிரவு தீப தரிசனத்தின்பின் தேவார பாராயணங்களுடன் குகப்பெருமான் வள்ளி தெய்வானையோடு மயில் வாகனரூடராய் எழுந்தருளி சுமார் 1,500 பக்தர்களுக்குக் காக்ஷி தந்தருளினார் என ஒரு அன்பர் எழுதுகிறார்.

---

சென்னையை அடுத்த சைதாப்பேட்டையில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ காரணீஸ்வரப்பெருமானுக்கு நிகழும் ஆவணிமீ 9ௗ (24-8-'34) சுக்கிரவாரம் மாலை 5 மணிக்கு இலட்ச தீபப் பெருங் காட்சியும், இரவு 9 மணிக்கு அறுபான் மும்மை நாயன்மார்களோடு உமாமகேஸ்வரர் ரிஷப வாகன மகோற்சவ தரிசனமும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தர்களாகிய திருக்காரணி செங்குந்த சபையார் அறிவிக்கிறார்கள்.

---

வீர சைவ சித்தாந்த சிகாமணியாகிய துறைமங்கலம், சிவப்பிரகாச சுவாமிகளுக்கு, பவஞு புரட்டாசிமீ 6ௗ சனிவாரம் பௌர்ணமி புண்ணிய சுப தினத்தன்று, தென் ஆற்காடு ஜில்லா, புதுவை மார்க்கம், சின்னபாபுசமுத்திரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு தென்



கிழக்கில் 3 மைல் தூரத்தில் உள்ள நல்லாற்றூரில் ஷை ஸ்வாமிகள் மஹா சந்நிதானத்தில், குருபூசை மஹாபிஷேக அலங்கார ஆராதனமும், பிற்பகல் 3 மணிக்கு பல வித்வ சிரோன்மணிகளால் உபந்நியாசமும் நடைபெறும் என்று அவ்வூர் பக்தகோஷ்டியாரால் அறிவிக்கப் படுகிறது.

* * *

திருவாங்கூர் சமஸ்தானத்தில் கோட்டய மென்னும் க்ஷேத்திரத்திலுள்ள புராதன சிவாலயமொன்றிலுள்ள கருங்கல் நந்திகேஸ்வரரின்மீது வீக்கங் கண்டு 17-7-'34 முதல் இரத்தம் ஒழுகியதாம். அந்த நந்தியிலிருந்து இரத்தம் ஒழுகுவது இது ஐந்தாவது முறையாகும். இதனை ஜூனியர் மகாராணியும், இளவரசி கார்த்திகைத் திருநாளும், அவரது கணவர் கோதவர்மாவும் நேரில் சென்று கண்டார்கள்.

* * *

காவேரி மேட்டூர் திட்டத்தின் காரணமாக வேலை அதிகரித்து விட்டதால் தஞ்சை ஜில்லாவில் ஒரத்தநாடு ரெவின்யூ ஸப்-தாலூக்கா ஒன்றை ஸர்க்கார் சிருட்டித்துள்ளார்கள்.

* * *

தென்னிந்திய ரெயில்வே ஏஜண்டு ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு விடுத்துள்ள கடிதத்தில் தற்காலத்தில் ரெயிலுக்கும், பஸ்களுக்கும் போட்டி ஏற்பட்டிருப்பதால் ஜனங்கள் ரெயில் பிரயாணத்தை விரும்பும்படி உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு அதிக மரியாதை காட்ட வேண்டுமென்றும், இல்லையேல் ரெயில்வேய்க்குநஷ்டம் ஏற்படுமென்றும், பிரயாணிகள் தங்கும் அறையையும், கக்கூஸ்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்றும், விளக்குகளை ஒழுங்காய் ஏற்ற வேண்டுமென்றும், வண்டிகளில் அதிக பிரயாணிகள் ஏறுவதைத் தடுக்க வேண்டுமென்றும், இப்படி நடந்தால் ஜனங்கள் ரெயில் பிரயாணத்தை விரும்புவார்களென்றும் தெரிவித்துள்ளார்.

* * *

சேர்மாதேவி குருகுலத்துக்குச் சொந்தமான நிலங்களை ஸ்ரீ மகாதேவ அய்யர் மகாத்மா பெயருக்கு பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்ததோடு ரூ. 2,750-ம் ரொக்கமாய்க் கொடுத்துள்ளார்.

* * *

ஒரு போலீஸ்காரரை அடித்ததற்காக 6 மாத சிறை தண்டனை அடைந்த காதர் பாஷா என்ற கைதி, சென்னை சிறையில் ஏணியின்மீதேறி வேலை செய்தபோது தவறி விழுந்து இறந்துவிட்டதால் அவனது மனைவி சென்னை ஸர்க்கார் பிரதம மந்திரிக்கு ரூ. 10,000 நஷ்டஈடு தருமாறு நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறாள்.

* * *

வட ஆற்காடு ஜில்லாவை வேலூர், திருப்பத்தூர் ஜில்லாக்களாகப் பிரித்து வேலூர் ஜில்லா போர்ட் தேர்தலும் பூர்த்தியாகிவிட்டது. தலைவர் பதவிக்கு ஸ்ரீமான்கள், வி. எல். இராமசாமி முதலியார், கே. பி. சிதம்பர முதலியார், சி. வெங்கடரத்னம் நாயுடு, சுகானந்த முதலியார் இவர்களுக்குள் பலமான போட்டி இருந்து வருகிறது.

திருச்சியினின்றும் வெளியாகும் வர்த்தக ஊழியனின் இரண்டாம் ஆண்டு விழா 22-7-'34-ந் தேதி கோவை பிரபல மில் வர்த்தகரும், சாரதா மில்ஸ் மானேஜிங் ஏஜண்டுமான ஸ்ரீ செங்கோட்டைய முதலியார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

* * *

தற்போது முனிஸிபாலிடிகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும் 3 வருடத்திற் கொருமுறை ஒரே சமயத்தில் தேர்தல் நடப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுவதைக் கருதி, இம்மாகாணத்திலுள்ள ஜில்லாக்களை 3 பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவின் தேர்தலை ஒவ்வொரு வருடத்திலும் தொடர்ந்து நடத்த சென்னை ஸர்க்கார் யோசித் துள்ளார்கள். இதன்படி செங்கற்பட்டு, வட ஆற்காடு, மதுரை, திருச்சிறுப்பள்ளி, நீலகிரி, தென் கன்னடம், பல்லாரி, விசாகப்பட்டணம் ஜில்லாக்களுக்கு 1934-35-ம் வருடத்திலும், தென் ஆற்காடு, திருநெல்வேலி, சித்தூர், கடப்பை, கர்நூல், அநந்தபூர், மேற்குக் கோதாவரி, குண்டூர் ஜில்லாக்களுக்கு 1935-36-ம் வருடத்திலும், சேலம், கோயமுத்தூர், தஞ்சை, இராமநாதபுரம், மலையாளம், நெல்லூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி ஜில்லாக்களுக்கு 1936-37-ம் வருடத்திலும் தேர்தல் நடைபெறும்.

இதுவன்றி உத்தியோகஸ்தர்களின் சம்மதமின்றி ஒரு முனிஸிபாலிடியிலுள்ள உத்தியோகஸ்தர்களை மற்றொரு முனிஸிபாலிடிக்கு மாற்ற விதிகள் ஏற்படுத்தவும் சென்னை ஸர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

* * *

பஸ் போட்டியின் பலனாக செங்கற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ள திறப்பான இடத்தை ரெயில்வே அதிகாரிகள் மூடிவிட்டனர். அதனால் பஸ் போக்குவரத்துக்கு மிகக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி முனிஸிபல் சேர்மன் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரெனத் தெரிகிறது.

* * *

சென்னை சட்ட சபையில் லேவாதேவிக்காரர் மசோதா இரண்டாம் முறையாக நிறைவேறியுள்ளது.

* * *

பொதுவுடைமைக் கட்சி சட்ட விரோதமானதென்று இந்திய ஸர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளதை அநுசரித்து தமிழ் நாட்டிலுள்ள 'சுயமரியாதைக் கட்சி' என்ற ஸ்தாபனத்தையும் சட்ட விரோதமானதென்று சென்னை ஸர்க்கார் உத்தரவு பிறப்பிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

* * *

சென்னை ஸர்க்கார் உள் நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள ராவ் பஹதூர், A. T. பன்னீர்செல்வம் 16-8.'34-ந் தேதி பதவியை ஏற்றுக்கொள்ளுகிறார்.



## இந்தியச் செய்திகள்

காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்ட் தலைவரான ஸ்ரீ பண்டித மாளவியா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டதால் ஸ்ரீ மௌலானா அப்துல் கலாம் அஸாத் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்.

* * *

படக் காட்சியில் இந்தியப் பாம்பாட்டிகளின் திறமையைக் கண்டு களித்த ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி, அவர்கள் திறமையை நேரில் பார்க்க விரும்பியதால், பர்மா கவர்னர் ஊப்போமீன் என்னும் பாம்பாட்டியே சிறந்தவனெனத் தேர்ந்தெடுத்துள்ளார். அந்த பாம்பாட்டி, மேள தாளம் வாசிப்பவர்களோடு சேர்ந்து மொத்தத்தில் 16 பெயர்களடங்கிய கோஷ்டியாக பர்மாவி லிருந்து சமீபத்தில் இங்கிலாந்துக்குப் பயணப்படுவாராம்.

* ○ *

பிரிட்டன் தங்கச் செலாவணியைக் கைவிட்டதி லிருந்து 31-7-'34-ந் தேதி வரை 194,19,47,378 ரூபாய் மதிப்புள்ள தங்கம் இந்தியாவி லிருந்து ஏற்றுமதியாகி இருக்கிறது.

* * *

ஆலயப் பிரவேச மசோதாவுக்கு ஜூன் 30-ந் தேதி வரை 363 அபிப்பிராயங்கள் பாதகமாகவும், 40 அபிப்பிராயங்கள் சாதகமாகவும் வந்திருக்கிறதாம்.

* * *

அமராவதியைச் சேர்ந்த வால்கன் என்னுமிடத்தில் புதையல் உள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக 8 பேர்களை பலியிட்டனராம்.

* * *

பம்பாயில் நடைபெற இருக்கும் அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டின் வரவேற்புத் தலைவராக திரு. கே. பி. நாரிமன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

* * *

லட்சுமணபுரியைச் சேர்ந்த நாக்பூனா என்னுமிடத்தில் 47 வயதான ஒருவர் 4 வயது குழந்தையை மணஞ் செய்துகொண்டாராம்.

* * *

இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளி லிருந்து 20 பெண்கள், உலகத்திலுள்ள சர்வகலாசாலைகளைப் பார்வையிடப் புறப்பட்டு இப்போது ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள்.

* * *

அமிர்தசரஸ், கண்ட்ராக்டர் ஸயின் ஸாராதீன் பவர் என்பார் தனது வக்கீல் மூலம் இந்தியா மந்திரிக்கு 1 லட்ச ரூபாய் தனக்குத் தரும்படி நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறார். அதில் அவர், காங்கிரஸ் 1928ல் வலுப்பெற் றிருந்தபோது அதனை எதிர்த்து பிரசாரம் செய்யவும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கவும் தன்னை அரசாங்கத்தார் கேட்டுக்கொண்டதாகவும், அதற்குரிய செலவைப் பின்பு தருவதோடு பரிசு

களும் தருவதாகப் பலபெரிய ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எழுதிக் கொடுத்திருப்பதாகவும், அதனை நம்பி காங்கிரஸை எதிர்த்துத் தான் வேலை செய்ததாகவும், அதனால் ஜனங்கள் தன்னை வெறுத்துக் கஷ்டப்படுத்தியதாகவும், இவ்வளவு ஆரம் ஸர்க்காருக்கு உதவி செய்தும் இது வரை செலவு தொகையோ, வெகுமதியோ தரவில்லை என்றும், செலவு மட்டும் 70,000 ரூபாய் ஆகியதென்றும், பரிசுத் தொகை 30,000 சேர்த்து தனக்கு 1 லட்ச ரூபாய் 2 மாதத்திற்குள் கொடுக்க வேண்டுமென்றும், இல்லையேல் வழக்குத் தொடரப்படு மென்றும் குறிப்பிட்டுள்ளார்.

* * *

ஜோதிபுரியில் இரு ஜெயின குருக்களுக்குள் ஏற்பட்டுள்ள விரோதத்தை சமரஸமாகத் தீர்த்துவைப்பதற்காக ஓர் ஜெயின குரு 160 தினங்களாக உண்ணு விரதம் இருந்து வருகிறார். எனினும் இன்னும் சமரஸம் ஏற்படவில்லை.

* * *

16-8-'34-ந் தேதி லார்ட் வில்லிங்டன் கராச்சியில் விமான மூலம் வந்து அன்றே வைஸராய் பதவியை ஏற்றுக்கொள்ளுவார்.

* * *

பீகார் கஷ்ட நிவாரண சம்பந்தமான வைஸராய் நிதிக்கு 31-7-'34-ந் தேதி வரை 56,49,000 ரூபாயும் 140 பவுனும் வசூலாகியுள்ளது.

* * *

யமுனு, கபிலி நதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினல் காமபுரி பிரதேசத்தில் 7 கிராமங்கள் வெள்ளத்தில் முழுகிவிட்டன.

* * *

ஐக்கிய மண்டல கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர். ஹாரி ஹெயிக் 6-12-'34-ல் பதவி ஏற்பார்.

* * *

சமூகத் தீர்ப்பையொட்டி காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்திருந்த தீர்மானத்தை ரத்து செய்யவில்லையாதலின் ஸ்ரீ பண்டிட் மாளவியாவும், ஆனேயும் தேர்தல் போர்டிலிருந்து ராஜிஞமா செய்துவிட்டார்கள். இவர்கள் அடுத்த தேர்தலில் சமூகத் தீர்ப்பையும், வெள்ளை அறிக்கையையும் எதிர்த்துப் போராடுவதற்காக தேசீயக் கட்சி ஒன்றை ஏற்படுத்தி யுள்ளார்கள்.

* * *

பறிமுதல் செய்த காங்கிரஸ் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாதென ஹாரி ஹெயிக் இந்தியா சட்ட சபையில் கூறியுள்ளார்.

## உலகப் போக்கு

நியூயார்க் மிருகக் காட்சிச்சாலையைச் சேர்ந்த ஸ்ரீ பிஞ்னயர் என்பவர் பிரம்மாண்டமான திமிங்கிலம் ஒன்றை உயிருடன் பிடித்துக் கொடுக்கும் அமெரிக்கருக்கு 25,000 பவுன் வெகுமதி கொடுப்பதாக வெளியிட்டுள்ளார்.

# நன்கொடைகள்

தென்னுற்காடு ஜில்லா, செஞ்சி தாலூகா ஆனங்கூர் சு. அப்பாசாமி முதலியார் குமாரரும், செஞ்சிபோர்டு ஹிந்து ஹயர் எலிமெண்டரி பாடசாலை போதகாசிரியரும் ஆன. உயர்திரு. அம்பலவாண முதலியாருக்கும், கடலூர் தாலூகா சென்னப்ப நாய்க்கன் பாளையம் கொ. அ. வைத்திலிங்க முதலியார் குமாரத்தி திருமிகு சிவபாக்யத் தம்மையார்க்கும் புதுவையைச் சார்ந்த கதிர்காமம் அமரி. வேலாயுத முதலி[illegible] திருமனையில் 15-7-34 ஆதிவாரம் நடந்த திருமண சுப முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு மனமுவந்து அளிக்கப்பட்ட நன்கொடை ரூ. 0 8 0

தென்னுற்காடு ஜில்லா கடலூர் தாலூகா சென்னப்ப நாய்க்கன் பாளையம் கோ. அ. வைத்திலிங்க முதலியார் குமாரன் திருவளர் செல்வன் பழனியாண்டி முதலியாருக்கும் புதுவையைச் சேர்ந்த கதிர்காமம் மு. வே. இரத்தினசபாபதி முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி வள்ளியம்மைக்கும் ஷை மணமகன் கிரகத்தில் 15-7-34 ஆதிவாரம் நடந்த திருமண சுப முகூர்த்தத்தில், ச. நா. குமரகுரு முதலியார் அவர்களால் நமது தலைச் சங்கத்திற்கு மனமுவந்து அளிக்கப்பட்ட நன்கொடை ரூ. 0 8 0

சரவணப்பாக்கம் மிராஸ்தாரரும், திருவாமாத்தூர் கௌமார மடாலயம் பக்த வர்க்கத்தினருள் ஒருவருமான மணியம், உயர்திரு. மு. கதிர்வேல் முதலியார் அவர்கள் நமது சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0 4 0

மதுரை டவுன், தல்லாகுளம் செங்குந்த இளைஞர் சங்கத் தலைவரும், ஜவுளி வர்த்தகருமாகிய திரு. நா. ப. பழநிக்குமாரு முதலியார் புத்திரி மகமாயி அம்மாளுக்கும், ஷையூர் சிவ. பண்டார முதலியார் திருமகன் மாயாண்டிக்கும் ஆனிமீ 11உ நடைபெற்ற திருமணத்தில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 5 0 0

**(ஆம்பூர் செங்குந்த வாலிபர் சங்கத்தார் வசூலித்து அனுப்பியது)**

ஆம்பூர் கஸ்பா, செங்குந்தர் வீதியில் திரு. தி. மு. பழநிச்சாமி முதலியார் இல்லத்தில் அவரது தமையனார், திரு. கங்காதர முதலியாருக்கும், ஷை வீதியிலிருக்கும் க. ரா. முருகப்ப முதலியார் குமாரத்தி வள்ளியம்மாளுக்கும் பவ ஆனிமீ 24உ நடந்த திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 1 0 0

ஷை திரு. தி. மு. பழநிச்சாமி முதலியாரது சிறிய தகப்பனார் குமாரன் கதிர்வேல் முதலியாருக்கும், குடியாத்தம், காமாட்சியம்மன் பேட்டை, ஆதியூர் முருகப்ப முதலியார் குமாரத்தி பட்டம்மாளுக்கும் நடந்த திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 1 0 0

எடப்பாடி, ஷராப் வியாபாரம், ரு. க. கு. மாரிமுத்து முதலியார் அவர்கள் நூதனமாய்க் கட்டி முடித்த தமது புதிய இல்லத்தில் குடி புக்கஞான்று நமது சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0 4 0

## கிளர்ச்சி

### மண்டலமாணிக்கம், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

14-7-'34உ காலை 7 மணிக்கு ஆப்பநாடு மறவர் குலப் பெரியவரும், ஆப்பநாடு மறவர் மகாநாடு உபசரணை கமிட்டி தலைவரும், பொதுஜன ஊழியருமான ஸ்ரீமான், முத்துராமலிங்கத் தேவரவர்களின் தலைமையின் கீழ் கூட்டம் கூடியது. வெ. மு. கிருஷ்ண முதலியாரால் கடவுள் வணக்கம் பாடப்பட்ட பின் காரியதரிசியால் முன் கூட்ட நடவடிக்கைகள் படிக்கப்பட்டன. பிறகு ஸ்ரீமான், கதிர், வாழவந்த பண்டாரம், தலைவரை கல்வி என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொண்ட பின் தலைவரவர்கள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் அநேக மேற்கோள்களை எடுத்துக் காட்டி பசுமரத் தாணிபோல் நன்கு பதியச் செய்தார்கள். பிறகு தலைவரவர்களை எழுந்த புனாவில் சநாதனிகள் மகாத்மா காந்தியடிகளின்மேல் வெடிகுண்டு வீசியதைக் கண்டிப்பதாகவும், அன்னார் ஷை வெடி குண்டிலிருந்து தெய்வாதீனமாய் உயிர் தப்பினதற்காக கடவுளைப் பிரார்த்திப்பதாகவும் ஒரு தீர்மானம் பிரேரேபிக்க சபையோர் நிறைவேற்றினர். அதன்பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரங் கூறப்பட்டு 11-30 மணிக்கு கூட்டம் கலைவுற்றது.

சு. வே. குருசாமி முதலியார்,
செக்ரட்டரி.

### செங்குந்தத் தொழிலாளர் அபிவிருத்தி சங்கம், தல்லாகுளம்

நம் கழகத்தின் 8-வது ஸ்பெஷல் பொதுக் கூட்டம் உப-தலைவர் T. M. திருச்சிற்றம்பல முதலியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. 1-6-'34-ல் ஆரம்பித்த அங்குராம் வாசகசாலைக்கு திரு. S. V. வீரப்பன், M. இரத்தினசாமி அவர்களை முறையே மானேஜராகவும், லைப்ரேரியனாகவும் நியமிக்கப்பட்டது.

ஷை வாசகசாலைக்கு தமிழ்ப் பெருமாட்டி முதலிய மாதப் பத்திரிகைகளும், தினசரி பதிப்புகளும் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

7-6-'34-தேதி தல்லாகுளம் செ. பி. சோலை முதலியார் குமாரர் மாயாண்டி முதலியாருக்கு நடந்த சாந்தி முகூர்த்தத்தில் நம் கழகத்திற்கு நன்கொடையாக ரூ. 0-8-0 மனமுவந்தளித்தமைக்கு நன்றி செலுத்துவதுடன் வதூவரர்கள் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் சுரக்கப் பிரார்த்திக்கிறது.

S. V. வீரப்பன், S. M. T. ராஜன்,
காரியதரிசிகள்.

கேதாரிநாதரை அருச்சித்து, வஸ்திராபரண முதலியவற்றால் அலங்கரித்துத் தினம்வில்வம், சந்தனம், மஞ்சள், பாக்கு, வெல்லவுருண்டை அதிரசமிவற்றை ஒவ்வொன்றாக வைத்து நிவேதித்து, முறைப்படி தூபதீபங் காட்டி, இழைத்த இருபத்தோரிழையால் முறுக்கிய கயிற்றைத் தினமொரு முடியாக முடிந்து இடதுகையி லணிந்து, உபவாசமிருந்து, சூரியாஸ்தமனமான பிறகு நிவேதித்த பலகாரங்களை யுண்டு, இரவில் தருப்பையின் மேல் சயனித்து இடைவிடாது கேதாரிநாதரைத் தியானித்து விரதங் காத்துவந்தால், சிவபெருமான் இடபாரூடராய் எளிதில் தரிசனம் தந்து வேண்டிய வரங்களைத் தந்தருளுவர். அநுஷ்டிப்போர் ஆடவராயின் கயிற்றை வலது கையில் அணியக் கடவர். இஃதுயர்ந்தோர் செய்யுமுறையாம்.

"சாமானிய மனிதர், அமாவாசையன்று மேற்கூறியவாறு பூர்ணகும்பம் அமைத்து, இருபத்தொரு நாட்களிற் செய்ய வேண்டுவனவற்றையெல்லாம் அன்றே செய்து விரதங்காப்பது சாலும். இதைச் சதுர்த்தசியன்று நோற்றலுமுண்டு" எனக் கௌதம முனிவர் கூறினார். அவ்வாறே பிராட்டியார் அநுஷ்டிக்கச் சிவபெருமான் சிவகணங்கள் சூழ வந்து தரிசனந் தந்தருளினார். அம்மையார் பசுபதியைத் தரிசித்துப் பலவாறு புகழ்ந்து நின்றனர். ஆலகாலவிடத்தை அமுதெனக் கொண்டருளிய எம்பெருமான், உலகமாதாவைப் பார்த்து, 'உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்' என்ன, தேவியார் பெருமானை நோக்கித் 'தேவரீரை யான் என்றும் பிரியாதவாறு வாமபாகத்திற் கலக்க விரும்புகிறேன். அன்றியும் இந்நோன்பைப் பக்தியுடன் நோற்போர் புத்திரப் பேற்றையும் மற்றெல்லா உலக இன்பங்களையும் அடைந்து வாழ்ந்து தேவரீர் திருவடிக் கமலத்தை அடையுமாறு அருளல் வேண்டு'மெனப் பிரார்த்திக்க, இறைவனும் அவ்வாறே அநுக்கிரகித்து உமதேவியாருடன் கைலாயமடைந்தருளினர்.

இந்நோன்பை நந்திதேவர் கைலாயத்தில் சித்திராங்கன் என்னும் கந்தருவனுக்கு உபதேசிக்க, அவன் பூமியின்கண் உச்சினி நகரையடைந்து ஆங்கிருந்த வச்சிரதேயனென்னும் அரசனுக்கு உபதேசிக்க, அவ்வரசன் அதை நோற்றுப் புத்திரப் பேற்றையடைந்து உலகமுழுதையும் தன் குடை நிழற் கீழாக்கி ஆண்டுவந்தான். பிரமன் இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் இக்கேதாரி விரதத்தை அனுஷ்டித்து மேன்மை பெற்றனர். தேவகன்னியர் சிலர் பூலோகத்திற்கு வந்து ஓராலமரத்தடியிலிருந்து இவ்விரத மனுஷ்டிப்பதைக் கண்ட புண்ணியவதி பாக்கியவதி யென்னும் இரண்டு மானிடப் பெண்கள், அத்தேவகன்னியரால் அவ்விரதத்தின் மேன்மையை யுணர்ந்து தாங்க

# கேதாரி கௌரி விரதம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனப் பெரியோர் கூறியருளியபடி, மனோவாக்காதிகளுக்கு எட்டாத துரியாதீத நிலையிலுள்ள பரம்பொருள், ஆத்மாக்களிடத்து வைத்த பெருங் கருணையால், உமாதேவி சமேதராய் வீற்றிருந்தருளும் திருக் கைலாயத்திற்குத் தரிசனார்த்தமாய்ப் போந்த பிருங்கிமகாரிஷி யானவர், மற்றைத் தேவாதியரைப் போலல்லாமல் உமாதேவி யாரை நீக்கிப் பரமசிவத்தைமாத்திரம் தொழுது வணங்கினர். அது கண்ட அம்மையார் பெருமானை நோக்கி, இம்முனிவர் இவ் வாறு செய்ததற்குக் காரணம் என்னையென வினவ, சிவபெரு மான் 'மௌனநிலை வகித்த மாதவர் காரணப்பொருள் ஒன்றே எனக் கருதுவரேயன்றி வேறொன்றிருப்பதாகக் கருதார்' என விடை தந்தருளினர். இதைக் கேட்ட அம்மையார் கோபங் கொண்டு முனிவரிடமிருந்து தமக்குரித்தாய உடல் வலிமையை வாங்கிக்கொண்டனர். முனிவர் இரத்தமாதியற்று எலும்புரு வாய் நின்று சந்திரசேகரன் அருளிய கோலூன்றிச் சென்றனர். சிவபெருமான், முனிவர் தமக்குண்டாகிய அவமதிப்பைக் கண் டும், கோலொன்று அருளினரே எனக் கோபங்கொண்டு உமை பெருமானைப் பிரிந்து மண்ணுலகையடைந்து கௌதமமுனிவர் வசிக்கும் பூஞ்சோலையை யடைந்தனர்.

அடைதலும் அவ்வனம் முன்னிலும் பன்படங்கு தழைத் துப் பூத்து விளங்கியது. இது கண்ட முனிவர் வியந்து காரணம் யாதோவென ஆராயுங் காலத்து, ஆங்கெழுந்தருளியுள்ள உலக மாதாவைத் தரிசித்து அம்மையாரைப் பலவாறு துதித்து வணங்கி, அவ்வாறு அங்கெழுந்தருளிய காரணம் யாதோவென விண்ணப்பித்து நின்றனர். தேவியார் திருக்கைலாயத்தில் நடந் தன யாவையும் முனிவருக் குணர்த்தி அவராதாச்சிரமத்தை யடைந்திருந்தனர்.

பின்னர் பிராட்டியார் முனிவரைப் பார்த்து, 'முனிபுங்க வரே! கைலாயத்தில் பிருங்கிமுனிவர் செய்ததுபோல் இனி எவருஞ் செய்யாதவாறு யாம் சிவபெருமானது வாமபாகத்திற் கலக்க விரும்பினோம். அதை நோக்கி இங்கு யாமியற்றச் சிறந்த தொரு விரதம் தெரிவித்தல் வேண்டுமெனக் கேட்க, முனிவர் வணங்கி, 'விரதங்களிற் சிறந்தது கேதாரிநாதர் விரதமாகும்' எனக் கூறி, அதனை யனுஷ்டிக்கும் விதத்தையும் மகிழ்ந்து சொல் லுவார்: 'அம்மே! புரட்டாசி மாதம் சுக்கிலபக்ஷம் தசமி முதல் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷம் அமாவாசை வரையில் இருபத் தொரு தினங்களும் நீராடிச் சிவாலயமடைந்து, ஒரு மரக்கால் நெல்லைப்பரப்பிப் பிரணவமெழுதிப் பூர்ணகும்பமமைத்து, அதிற



அவ்வாறு சம்மரிக்கப்பட்டு உயிர்நீங்கும் தருவாயிலிருக்கும் நரகாசுரன், தான் இதுகாறும கெர்வத்தினால் பல்வகை உயிர்களுக் கும் இழைத்து வந்த தீங்கை நினைத்து மனம்வருந்தி, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப் பார்த்து, "என்னைப் போன்ற கொடியவர்களை நினைத்த மாத்திரத்திலேயே நீறுக்க வல்ல நிமல மூர்த்தி! பிற உயிர்களுக்குத் தீங்கிழைப்போர் அடையுங்கதி இதுவே என யாவர்க்கும் கண் கூடாக [illegible]க்குமாற்றான் என்னை இவ்வாறு தண் டித்தாட்கொண்ட தயாபரமூர்த்தி! பெரும்பாதகனாகிய தேவரீர் தரிசனத்தால் நல்லுணர்வு பெற்றுப் புனிதனானேன். மூவுலகத் தவரும் துன்பநீங்கி இன்பமெய்தினர். ஆகையால், இத்தகைய நாளை இதுமுதல் ஒரு பெருநாளாகக் கருதி, தீபங்களால் வீடுகளை விளக்கி, எண்ணெயிட்டுச் சுத்த நீராடித் தேவரீருக்கு நிவேதித்த நல்லுணவருந்திப் புதிய ஆடையாபரணங்கள் அணிந்து, பல தானங்கள் வழங்குவதன்றிப், பிறவுயிர்களுக்கு மறந்தும்என்போல் கார்ருண்யமின்றித் தீங்கிழைத்து மதிமயங்காது தெளிந்த அறி வோடு விளங்குவோர் இம்மை மறுமைகளிற் பெருவாழ்வை அடை யுமாறு அனுக்கிரகித்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தான் பெருமானும் அதற்கிசைந்து அவனுக்குப் பரமபதமருளி அவன் காவலில் வைத்திருந்த பன்னீராயிரம கன்னிகைகளையும் சிறை நீக்கி யருளினர்.

ஆதலின், தீபாவளியை மேற் கூறியவாறு கொண்டாடி, எவ் வுயிர்க்கும் தீங்கு செய்யாது கொல்லாவிரதம் பூண்டு புலாலுண்ணா தவர் இம்மையில் எல்லாச் செல்வங்களையு மெய்தி,

> "கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
> செல்லாது உயிர் உண்ணும் கூற்று"

என்ற நமது நாயனார் திருவாக்கின்படி, நீண்ட ஆயுளை உடையவர்க ளாயிருந்து முத்தியடைவர்.

உயிர்களைக் கொன்று தின்னாதார் நீண்ட ஆயுளை அடைதல் எவ்வாறெனின், மேற்காட்டியுள்ள திருக்குறள் கருத்தின் விளக் கத்தால் விளங்கும். அஃதாவது, மிகப்பெரிய அறஞ்செய்தாரும், மிகப்பெரிய பாவஞ் செய்தாரும், ஊழ்மூலமாய் மறுபிறப்பிலன்றி இப்பிறப்பிலேயே அவ்வறம் பாவங்களின், பயனை அனுபவிப்பர் என்பது அறநூல்களின் துணிபாகையால், கொல்லாமையாகிய பேரறஞ் செய்தவனும் எமனால் கொல்லப்படான். ஆகவே, பிரமனால் இவனுக்குக் குறிக்கப்பட்டுள்ள ஆயுள் குறைவுபடாது என்னும் கருத்தோடு நாயனார், "வாழ்நாள் மேல் கூற்றுச் செல் லாது"; ஆயுள் குறைபாதாகவே காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுதலும் கூடும்.

## விரதப் பகுதி.

### தீபாவளி *

துவாபரயுகத்தில் நரகாசுரன் என்னும் ஓர் அசுரன் பிரமதேவனை நோக்கி அரிய தவமியற்றினான். பிரமதேவன் அவனுக்குப் பிரசந்நமாய் "யாது விரும்பித் தவமியற்றினை?" என வினவ, நரகாசுரன், "ஐயனே! உலகமுழுவதும் எனதாக்கினையி லடங்குமாறும், தேவர்கள் எனக்குப் பணிசெய்யுமாறும், என்னை எதிர்த்தோர் போரில் தோற்றோடுமாறும் வரம்பெற விரும்பினேன். இவையேயன்றி, மலைக்கொழுந்தாகிய சிவபெருமானும், ஆயர்தங்கொழுந்தாகிய திருமாலும் ஒருருவெடுத்து என்னைக் கொல்லவேண்டுமேயன்றி, எதிர்த்த மற்றெவரும் தோல்வியடையவேண்டும்" என வேண்டி நிற்க, பிரமனும் அவ்வாறே வரந்தந் தேகினன்.

உடனே நரகாசுரன், கெர்வித்துச் சிறிதும் இரக்கமின்றி, உலகமுழுதும் பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல் தவித்து வருந்துமாறு, பல கொடுஞ் செயல்க ளியற்றினன். இந்திராதி தேவர்களும் அவன் கட்டளையைச் சிரமேற்றாங்கி நடப்பாராயினர். ஆக, அவனியற்றிய துன்பத்திற் களவேயில்லை.

கொடுமை சகிக்கமாட்டாத தேவர்கள், தேவகி தேவியின் புத்திரனான கண்ணபிரானை யணுகித் தம்மைக் காத்தருளவேண்டுமென இரந்து நிற்க, மனமிரங்கிய கண்ணபிரான் அவ்வசுரன்பால் இருபத்தொரு முறை போர் செய்யச் சென்று தோல்வியெய்திக் கடைசியாகத் தன்னைத் தேடித் திரியலுற்ற நரகாசுரனுக்குப் பயந்து துவாரகாபுரியில் மறைந்து வசித்திருந்தனர். ஆண்டும் மறைந்து வசித்தல் அரிதெனக் கருதி மைநாகபர்வதத்தை யடைந்து சிவபெருமானை அருச்சித்து வந்தனர். எமையாளுடைய பெருமானும் பிரத்தியக்ஷமாய், "யாது வேண்டியெமை யருச்சித்தனை?" என வினவ, கண்ணபிரான், "எனதாண்டவனே! நரகாசுரனென்பா னொருவன் பிரமனிடம் வரம்பெற்று, மூவுலகத்தவர்க்குந் தீங்கிழைத்து வருகின்றான். அவன் பெற்றுள்ள வரத்தின்படி நாமிருவரும் ஒருருக்கொண்டே அவனை அழித்தல்வேண்டுமாகையால் தேவரீர் அடியேனுடன் சேர்ந்திருத்தல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, கருணைக்கடலாகிய கண்ணுதல்பெருமானும் அதற்கிசைந்தருளினார். அப்போதே கண்ணபிரான் நரகாசுரனைத் தேடிச் சந்தித்துப் பெரும்போர் விளைத்துத் தமது தீப்பொறி சுழலும் வெற்றிதங்கிய சக்கராயுதத்தால் சம்மரித்தனர்.

---

* தீபங்களின் வரிசை.



வன் ஒருவனை நியமித்துக் கொண்டு, அத்தலைவனுக்குத் துணையாக 18 வகை ஆயுதங்களை உடைய 18 திறத்தினரை ஏற்படுத்தினர். அவர்களுள் ஒன்பது வகையினர் தலைவனது வலது புறத்திலும், ஒன்பது வகையினர் இடது புறத்திலும் தத்தமது ஆயுதங்களைத் தாங்கி வீற்றிருந்தனர். அன்னோர் யாவரும் சமத்துவ நிலையினராகவே இருந்துவந்தனர். ஆயினும், பிற் காலத்தில் இப்பதினெண் வகையினர் தரித்த ஆயுதங்களின் பெயர், செய்யுந் தொழில் முதலிய வற்றிற்கேற்ப வெவ்வேறு பெயரால் அழைக்கப்பட்டதுமன்றி, நாளடைவில் ஒருவருக்கொருவர் மாறு பட்டு, முடிவில் அரசனுக்கு வலதுபுற மிருந்தோர் வலங்கை இனத்தவர் என்றும், இடதுபுறமிருந்த ஒன்பதின்மர் இடங்கை இனத்தவர் என்றும் இரண்டாகப் பிரிவு பட்டு நெடுங்காலம் தமக்குள் மாறுகொண்டு மறைந்து வந்தனர். அம்மாறுபாடு இன்றளவும் ஒருவாறு காணப்படுகிறது.

மேற் காட்டிய பதினெண்வகைப்பட்ட ஆயுதங்களைத் தாங்கியவர்களுக்கே யன்றி, அவர் மரபினருக்கும் அவ்வவ்வாயுதங்கட்குரிய பெயர்களாலும் அவர்கள் மேற் கொண்ட தொழில்களாலும் சாதிப் பெயர்கள் வழங்கிவரலாயின.

மேற் கூறியதற் கிணங்க, கைக்கோல் (கைவேல்) தாங்கிய காரணத்தினாலும், மன்னர்களாயிருந்து கையில் செங்கோலைத் தாங்கிப் பல நாடுகளை ஆண்டுவந்த காரணத்தினாலும், தற்காலத்தும் பெரும்பான்மையோர் செய்து வரும் நெசவுத் தொழிலுக்குரியவேல் போன்ற அலகென்னும் கோலைத் தாங்கிய காரணத்தினாலும், நம்மவர் கைக்கோலர் எனச் சொல்லப்படுகின்றனர். இம்மரபினர் இடங்கையைச் சார்ந்த ஒன்பது வகையினருள் முதன்மையானவர் ஆகையால், முதலியார் என்னும் பட்டப் பெயர் வகித்து வரலாயினர்.

மற்றும் 18 வகை ஆயுதங்களைத் தாங்கியவரின் சாதிப் பெயர்கள் முதலியவற்றைக் குறித்து மறு வியாசத்தில் விவரித்து உரைக்கப்படும்.

பண்டிதர் கா. உ. பொன்னுசாமி முதலியார்.

உத்திரன்மேரூர்

---

சென்று நடந்தவற்றைச்சொல்லி,'நமது அரசாட்சியில் இத்தகைய கொள்ளைக்காரர்களைத் தக்கபடி தண்டிக்காது விடுவது நீதியா' வென்று முறையிட, உடனே அரசன் மந்திரியை அழைத்து இக்கொள்ளைக்காரர்களைக் கூடிய சீக்கிரம் தேடிப் பிடித்துக் கொணர்வாயாக' வென ஆஞ்ஞாபித்தான். புண்ணியவதி தன் தங்கை மகனைத் தேற்றித் தன்னிடமே நிறுத்திக்கொண்டாள். அச்சமயம் கேதாரிநோன்பு குறுகியது கண்டு, அவனை நோக்கிக் 'குழந்தாய்! உன் தாயார் இந்நோன்பை நோற்று வருகிறாளா' எனக் கேட்கச், 'சிறுவன், இல்லை மறந்துவிட்டாள்' என்று சொன்னான். அதைக் கேட்ட புண்ணியவதி மிகவும் வருந்தி 'இக்கதி உங்களுக்கு வந்ததற்குக் காரணம் இதுவேயாகும்' என்று சொல்லித், தான் தன் தங்கைக்கும் நோன்பு நோற்றுக் கயிற்றைப் பிள்ளையினிடம் கொடுத்து, 'இந்நோன்பை மறவாமல் வருடந் தோறும் நோற்கும்படிச் சொல்' என்று மறுபடியும் பொருள் கொடுத்து அனுப்பினாள்.

அதை எடுத்துக்கொண்டு போகும் வழியில் தேடவிடுத்த காவலாளிகள் திருடர்களைப் பொருளுடன் பிடித்துக்கொண்டு எதிரே வந்துகொண்டிருந்தனர். சிறுவனைக் கண்ட சேவகர்கள் திருடர்களிடமிருந்து கொண்ட பொருள் முழுதையும் அவனிடம் கொடுத்துக் காவலுடன் அனுப்பினர். இவன் வீடு போய்ச் சேருமுன், பகையரசர்கள் சமாதானமாய் இவன் தந்தைக்குரிய நாட்டைக் கொடுத்துவிட்டனர். சிறுவனும் தன் தாயாரிடம் சென்று நேர்ந்தவற்றைச் சொல்லி நோன்பைத் தவறாது நோற்கும்படிச் சொன்னான். அவளும் திடுக்கிட்டுணர்ந்து கேதாரிநாதர் விரதத்தைத் தவறாது அனுஷ்டித்து வந்தாள். பின்னர் சகல செல்வங்களும் குவிந்தன. ஆகையால், இவ்விரதத்தை விடாது நோற்போர் இம்மையில் எல்லாப் போகங்களையும் எய்தி, மறுமைப் பயனாகிய சிவாநந்தப் பெருவாழ்வை அடைவர்.

மா. அ. கனகசபை முதலியார்.

---



## ஆராய்ச்சிப் பகுதி

### வலங்கையும் இடங்கையும்

நில உலகத்தின் மத்தியபாகமா யிருந்து ஒரு காலத்தில் கடல் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தின் மலை நாட்டில் முதல் முதல் மனிதர்கள் தோன்றினர் எனவும், அவ்வாறு தோன்றிய மனிதர்கள் வெகு காலம் வரையில் தம்முள்ளக் கருத்தைச் சைகைகளினாலேயே வெளிப் படுத்தி வந்தனர் எனவும், பின்னர்ச் சொற்கள் சூரிய வெப்பத்தினாலே உண்டாயின வெனவும், நெடுங் காலம் கழிந்த பிறகே மொழிகள் உண்டாயின எனவும், எண்ணிக்கையில் அதிகரிக்க அவர்களுள் பலர் முல்லை நிலத்தில் குடி ஏறி, அங்கும் பெருகியபோது மருதம் முதலிய நிலங்களில் பரவினர் எனவும், அவ்வாறு பரவித் தாங்கள் வசித்து வந்த இடங்களுக்கு ஏற்றவாறு நாகரீகம் முதலியவற்றில் மாறுபட்டனர் எனவும் சரித்திர ஆராய்ச்சிவல்லுநர் பலர் கூறுகின்றனர்.

முதலில் தோன்றிய மனிதவருக்கம் பெருகிப் பலவேறு இடங்களுக்குச் சென்றதின் காரணம் அடுத்த வியாசத்தில் சொல்லப்படும். மனிதர் பெருகிய காலத்திலும் ஜாதிபேதம் உண்டானதாகச் சொல்லத் தகுந்த ஆதாரம் இல்லை. பிரம்ம சிருஷ்டியிலேயும் பேதம் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. நமது நாட்டில் நால்வகைச் சாதி பேதம் கற்பிக்கப்பட்டது சமீப காலத்திலேயாம்.

இந் நாட்டில், அதாவது நம் தமிழ் நாட்டில், நெடுங் காலமாக வழங்கி வருவன பதினெண்வகைச் சாதிகளே ஒழிய நால்வகைச் சாதிகளல்ல. இந் நால்வகைச் சாதிகள் தமிழ் மக்களை இழிவுபடுத்தத் தோன்றின வென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னும் பாமர மக்களும் 'பள்ளு 18 சாதி' எனக் கூறுவது யாவரும் உணர்ந்ததே.

இப்பதினெண் சாதிப் பாகுபாடு ஏற்பட்ட காரணம் கீழ்க் கண்டபடியாகும்:— அஃதாவது, மனிதர்கள் பெருகிய முதற் காலத்தில் தமக்குள் ஒழுங்கு கெடாதவாறு தம்மை நடத்தத் தலை

வன் ஒருவனை நியமித்துக் கொண்டு, அத்தலைவனுக்குத் துணையாக 18 வகை ஆயுதங்களை உடைய 18 திறத்தினரை ஏற்படுத்தினர். அவர்களுள் ஒன்பது வகையினர் தலைவனது வலது புறத்திலும், ஒன்பது வகையினர் இடது புறத்திலும் தத்தமது ஆயுதங்களைத் தாங்கி வீற்றிருந்தனர். அன்னோர் யாவரும் சமத்துவ நிலையினராகவே இருந்துவந்தனர். ஆயினும், பிற் காலத்தில் இப்பதினெண் வகையினர் தரித்த ஆயுதங்களின் பெயர், செய்யுந் தொழில் முதலிய வற்றிற்கேற்ப வெவ்வேறு பெயரால் அழைக்கப்பட்டது மன்றி, நாளடைவில் ஒருவருக்கொருவர் மாறு பட்டு, முடிவில் அரசனுக்கு வலதுபுற மிருந்தோர் வலங்கை இனத்தவர் என்றும், இடதுபுறமிருந்த ஒன்பதின்மர் இடங்கை இனத்தவர் என்றும் இரண்டாகப் பிரிவு பட்டு நெடுங்காலம் தமக்குள் மாறுகொண்டு மறைந்து வந்தனர். அம்மாறுபாடு இன்றளவும் ஒருவாறு காணப் படுகிறது.

மேற் காட்டிய பதினெண்வகைப்பட்ட ஆயுதங்களைத் தாங்கிய வர்களுக்கே யன்றி, அவர் மரபினருக்கும் அவ்வவ்வாயுதங்கட் குரிய பெயர்களாலும் அவர்கள் மேற் கொண்ட தொழில்களாலும் சாதிப் பெயர்கள் வழங்கிவரலாயின.

மேற் கூறியதற் கிணங்க, கைக்கோல் (கைவேல்) தாங்கிய காரணத்தினாலும், மன்னர்களாயிருந்து கையில் செங்கோலைத் தாங்கிப் பல நாடுகளை ஆண்டுவந்த காரணத்தினாலும், தற்காலத்தும் பெரும் பான்மையோர் செய்து வரும் நெசவுத் தொழிலுக்குரியவேல் போன்ற அலகென்னும் கோலைத் தாங்கிய காரணத்தினாலும், நம்மவர் கைக்கோலர் எனச் சொல்லப்படுகின்றனர். இம்மரபினர் இடங்கையைச் சார்ந்த ஒன்பது வகையினருள் முதன்மையானவர் ஆகையால், முதலியார் என்னும் பட்டப் பெயர் வகித்து வரலாயினர்.

மற்றும் 18 வகை ஆயுதங்களைத் தாங்கியவரின் சாதிப் பெயர்கள் முதலியவற்றைக் குறித்து மறு வியாசத்தில் விவரித்து உரைக்கப்படும்.

பண்டிதர் கா. உ. பொன்னுசாமி முதலியார்.
உத்திரமேரூர்

---



# பொது விஷயங்கள்

## பெண் கல்வி.

கல்வி யென்னும் பொருள்பற்றிப் பல கட்டுரைகள் வெளிவந்தும், இன்னும் நம்மவர்களிற் பலர் இதைப்பற்றிச் சிறிதேனும் கவனிக்கவில்லை. ஆண்மக்களுக்கே கல்வி புகட்ட எண்ணாதிருக்கும்போது, பெண் கல்வியைப்பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை. ஆயினும், அதைப்பற்றி ஒரு சிறிது எழுத அவாக்கொண்டேன்.

ஆண் கல்வியைவிடப் பெண்கல்விதான் இன்றியமையாதது என்பது தெற்றென விளங்கும். பெண்களது படிப்பே அவர்கள் மக்களினது படிப்புக்கு ஒரு சிறந்த தூண்டுகோலாகும். சில தந்தைமார் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வரும்போது, பிள்ளைகள் உபாத்தியாயர்களாற் றண்டிக்கப்படுவதை யுணர்ந்த தாய்மார், தங்கள் பிள்ளைகள் படித்தது போதும் என்றெண்ணி, பள்ளிக்கு அனுப்ப மறுத்துச் செல்வமாக வளர்த்து ஒன்றுக்குமுதவாம லாக்குகின்றார்கள். இக்காரணமே இக்கட்டுரை எழுதுவதற்கு ஒரு தூண்டுகோலாம். கற்றுணர்ந்த பெரியோர்கள் அவர் அவர்கள் ஊரில் ஒரு பெண் பள்ளிக்கூடம் ஏற்படுத்தித் தகுந்தபடி தமிழ்ப்பாடங்கள் கற்றுக்கொடுக்க முயற்சி செய்வார்களாக!

"கடலுலகில் வாழுமுயிர் எழுபிறப்பினுண் மிக்க காட்சி பெறு நரசென்மமாய்க் கருதப் பிறத்தலரிது" என்றும், "அரிது, அரிது மானிடராதல் அரிது" என்றும் கூறப்பட்டுள்ள மூதுரைகளுக்கு இணங்க மக்கட் பிறவியே சிறந்ததாகும். இம் மேம்பாட்டிற்குக் காரணம் மற்றை விலங்குகளினின்றும் வேறாகக் காணப்படும் பகுத்தறிவு ஒன்றே. இவ்வறிவு இல்லாதவர்கள் மிருகங்களுக்கு ஒப்பாவார்கள் என்பது நுண்ணிய ஆராய்ச்சியுடையோர் துணிவு. இவ்வறிவு கல்வியினாலேயே கூடப்பெறும் என்பது தெள்ளிதின் ஆராய்ந்த ஓர் விடயமாகும்.

கீழ்க்குறிப்பிடும் செய்யுளை ஒவ்வொருவரும் நன்கு கற்க

"உற்றுழி யுதவியுமுறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்றே
பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்பா லொருவன் கற்பின்
மேற்பாலொருவன் அவன்கட் படுமே."

இதன்பொருள்:—"ஆசிரியருக்குத் துன்பம் வந்தவிடத்து உதவி செய்தும் வேண்டிய பொருள் கொடுத்தும் அவருக்கு வழிபட வேண்டிய முறையையும் வெறுக்காது கற்றல் மிகவும் நன்று. ஒரே வயற்றிற் பிறந்த பல பிள்ளைகளில் கற்றபிள்ளையினிடத்து தாய்க்கு அன்பு அதிகமாகும். ஒரு குடியில் பலர் பிறந்தாலும் வயசில் மூத்தவனை அழையாது கற்றவனையே அழைப்பர். அரசனும் அறிவுடையோன்வழி ஒழுகுவான். நான்கு மரபினுள்ளும் கீழ்குலத்தான் படித்தானாயின் மேற்குலத்தான் அவனிடம் அடைந்து கல்வி கற்பான்." இப்பொருளை நோக்குமிடத்துக் கல்வியைவிடக் கருந்தனம் ஒன்றும் இல்லை என்பது தெளிவாம்.

கல்வியின் உயர்வைப் பற்றிப் பண்டைய மொழிகள் சில நோக்கற்பாலனவாம்:—

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

என்று வள்ளுவர் குறளும்,

"இம்மைபயக்குமால் ஈயக்குறைவின்றால்
தம்மைவிளக்குமால் தாமுணரக்கேடின்றால்
எம்மையுலகத்தும்யாங்காணேம் கல்விபோன்
மம்மாறுக்கு மருந்து"

என்று நாலடியாரும் விளக்கியுள. கல்வியைப் பற்றி எழுதப் புகுந்தால் ஓர் விரிந்த கட்டுரையாகும். ஆதலின் விரிவஞ்சி நிறுத்தினேன்.

இத்தகைய சீரிய கல்வி ஆண்பாலார்க்கு மட்டுமேயன்றிப் பெண்பாலார்க்கும் இன்றியமையாததாகும்.



"மருவியகாதன் மனையாளுந்தானும்
இருவரும் பூண்டுய்ப்பினல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கையென்னு மியல்புடைவான்சகடம்
செல்லாது தெற்றிற்றுநின்று"

என்று அறநெறிச்சாரத்துச் செய்யுளை உய்த்துணரவேண்டும். காதலனும் காதலியும் சேர்ந்து இல்வாழ்க்கையென்னும் ஓர் பெரிய சகடத்தை (வண்டியை) இழுத்தாலல்லாமல் அது சரியாய்ச்செல்லாது. ஆகவே இருவரும் ஒரே தன்மை யுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது தெற்றென விளங்கும். இருவர்களில் ஒருவர் மனங்கோணினால் மேற்கூறிய வாழ்க்கையில் எஞ்ஞான்றும் துன்பமே குடிகொண்டிருக்கும். இஃது நாடோறும் கண்கூடாகப் பார்க்கக் கூடிய ஒரு செய்தியே. "இல்லாள் வலிகிடந்த மாற்றமுறைக்கு மேல், அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்" என்ற மூதுரையையும் நன்கு கவனிக்கவேண்டும். இவர்களது மனப்பான்மை ஒரே தன்மையாக இல்லாததனால் விளையுந் தீமைகள் எண்ணிறந்தன. மனைவி நான்றுகொண்டு நிற்பதையும், கிணற்றில் விழுவதையும், கத்தியால் அரிந்து கொள்வதையும், கணவன் சவட்டுவதையும் போன்ற செய்திகள் நிகழ்கின்றன. இஃதெல்லாம் பெண்கள் படிப்பின்மையினாலேயே விளைகின்றன என்பது நுண்ணிய அறிவுடையோர் கருத்தாம்.

"காசுக்கோர் புரவியும் வேண்டும், காற்றைப்போற் பறக்கவும் வேண்டும்" என்பதுபோல் பெண்டிர்கள் கல்லாதவர்களாயிருக்கவும் வேண்டும், உத்தமிகளாய் நடக்கவும் வேண்டும் என்றால், எங்ஙனம் கைகூடும்? ஆடவர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் உள்ள வேறுபாட்டைத் தினந்தோறும் காண்கின்றோம். அங்ஙனமிருக்கப் பெண்களுக்குமாத்திரம் கல்வி யில்லாமலே சகல குணங்களும் உண்டாகுமென்பதற்கு என்ன உறுதி? கற்ற பெண்கள் நிரம்பவும் உத்தமிகளாக இருக்கச் சரித்திரவாயிலாகவும் காட்சிப்பிரமாணமாகவும் அறிந்திருக்கின்றோம். சீதை, திரௌபதை, சந்திரமதி, சகுந்தலா, சாவித்திரி முதலியவர்கள் எவ்வளவு உத்தமிகளாக இருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. தமிழ்நாட்டு மக்களிலும் திலகவதியார் காரைக்காலம்மையார் போன்ற எத்தனையோ உத்தமிகள் இருந்திருக்கின்றனர். இவைகளை யெல்லாம் கவனிக்கப் பழைய காலத்தில் பெண்களுக்

குக் கல்வி அதிகமாகவே யிருந்தது என்பது தெளிவாம். புறநானூற்றுச் செய்யுட்களில் பெண்பாலாரது செய்யுட்களும் காணப்படுகின்றன. இங்ஙனமிருக்கத் தற்காலம் பெண்களது கல்வியைக் கவனியாதிருப்பது எவ்வளவு பேதைமையாம்.

கணவனும் மனைவியும் ஒரே தேகம் என்பது, எல்லாம் வல்ல இறைவன் தம்முடலில் இடது பக்கத்தில் பார்வதி தேவியாரை வைத்து ''அர்த்தநாரீஸ்வரர்'' என்ற பெயரையும் அடைந்திருப்பதனால் அறியலாகும். மேலும் ''பைபிளி''லும் முதன்முதல் ஆணைப் படைத்ததாகவும், பின் அவனது விலாவெலும்பில் நின்றும் பெண்ணைப் படைத்ததாகவும் காண்கின்றோம். அங்ஙனமிருக்கக் கணவன்மாத்திரம் வாசித்து மனைவி வாசியாமலிருப்பது, பாதி உடலை அலங்கரித்து மற்றப் பகுதியை அலங்கரியாமல் விடுவது போலாம். அரசனுக்கு மந்திரி எப்படியோ, அவ்விதமே மனைவி கணவனுக்கு உதவியாவள் கல்வியுடைய பெண் தன் கணவனுக்கு மந்திரியாகவும், காரியஸ்தனாகவும், கணக்கனாகவும், நற்சயம்பாகியாகவும், வைத்தியராகவும், சிநேகிதராகவும் இருப்பாள்.

பெண்கள் கற்றிருந்தால், வீட்டுவேலை நேரம் போக மற்ற நேரங்களில், வம்புக்கிடங்கொடாது தங்கள் குழந்தைகளைப் படிப்பிக்கத் தக்கவர்களாயிருப்பார்கள். ''தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்ற பழஞ்சொல்லுக்கேற்பக் குழந்தைகள் வளர வளரக் கல்வியில் மிகவும் விருப்பமுள்ளவர்களாவார்கள். அத்தகைய குழந்தைகளும் நன்கு முன்னேற்றமடையும். சில குழந்தைகள் தாய் சொல்லிக்கொடுத்தால் படிக்கின்றன. ஆனால் தகப்பனைக் கண்டால் படிக்க மறுக்கின்றன. கற்ற தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எத்தனையோ விதத்தால் உதவி புரியலாம். அவர்கள்கீழ் வளரும் பிள்ளைகள் மற்ற பிள்ளைகளைவிட வேறுபாடாகவே தோன்றும். மேலும், குழந்தைகளுக்கு நோய் வந்தால் தகுந்தபடி பரிபாலிக்கத் தெரியும். மற்றவர்கள் வைத்தியர் ஒன்று சொன்னால் வேறொன்று செய்வார்கள். இவ்விதமான ஒரு தீய வழக்கத்தைப் பெண் கல்வியானது வேரோடு களையும். மேலும், பெண்கள் வீட்டுவேலை நேரம் போக மற்ற காலங்களில் அயல் வீட்டுப் பெண்களிடத்திற் சென்று வீண் பேச்சுப் பேசிக் காலங் கழிப்பதோடுகூட, கோட் சொல்லிக்கலகத்திற்குங் காரணமாகிறார்



கள். இத்தகைய கெட்ட வழக்கத்தை நிறுத்தக்கூடியது கல்வியொன்றே.

சிலர், பெண்கள் படிப்பினால் கற்பு நிலைமை கெடுகிறார்கள் என்று பிதற்றுவதைக் கேட்டிருக்கின்றனன். இங்ஙனஞ் சொல்லுகிறவர்கள் படிப்பில்லாததனால் கற்பில் தவறவில்லை என்று காண்பிப்பார்களோ? இவர்களது கூற்றுப் பயனற்றதே. பெண்களது கற்பு வளர்பிறைச் சந்திரனைப்போல் கல்வியினால் வளருமேயன்றி, குன்றாது. சரித்திர வாயிலாகவும், புராண வாயிலாகவும் உற்றுநோக்குமிடத்துத் தமயந்தி, சாவித்திரி, நளாயினி முதலிய கற்ற பெண்கள் கற்பில் நிரம்பவும் பேர்பெற்றவர்கள் என்பது நன்கு விளங்கும். இன்னும் விரிப்பிற் பெருகும். ஆதலால் இத்துடன் நிறுத்துவல்.

நம்மவர்கள் இருக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் ஒரு பெண் பாடசாலை தாபித்துப் பெண்பிள்ளைகளை இனிமேலாவது படிப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டியது. அன்றி வீணே காலங்கழித்தால் மற்றை மரபினர்கள் முன்னேற்றமடைய நாம் பார்த்துப்பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே யிருப்போம். நமது மரபினர்கள் பரிதாபப்படக் கூடிய நிலைமையிலாவார்கள். இதற்குத் தனவந்தர்கள் ஆங்காங்கே சேர்ந்து கட்சிப்பிரிவுகளை விட்டு ஒற்றுமையுடன் எவ்வழியினும் முயற்சி செய்யவேண்டிய வழிகளைப் பின்பற்றவேண்டும். நம்மரபிலுள்ள செல்வர்கள் பணங்களைக் குவித்துக் கொள்ளுவதில் நோக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்களேயொழிய, மற்றை நாட்டினரைப்போல் ஏழைமக்கள் முன்வரவேண்டும், நாடு செழிப்படையவேண்டும் என்ற எண்ணமே யில்லாதிருக்கின்றார்கள். ஏழைமக்கள் கடன் வாங்கிக் கடன் கொடுத்தவர்கள் பின்னால் மேல் வேட்டியை அரையில் கட்டி வாய் பொத்திப் பின் வருவதைப் பார்ப்பது தான் இவர்கள் கொள்கைபோலும். அன்பர்களே! முதன்மையாகச் சுற்றத்தார்களுக்குத் தொண்டு செய்க; இரண்டாவதாக மரபினர்களுக்குத் தொண்டு செய்க; மூன்றாவதாக ஊராருக்குத் தொண்டு செய்க; நான்காவதாக நாட்டிற்குத் தொண்டு செய்க. இவ்வித தொண்டுகளை இயற்றும் அன்பர்கள் மனதில் படைத்தழித்துக் காக்கும் இறைவர் குடிகொண்டிருப்பர். சுபம்.

ஏ. எஸ். முத்தையா முதலியார், பி.ஏ., கோட்டாறு

## கொல்லாமை.

ஆபுத்திரனென்பான் ஒருவன், அந்தணரென்னும் மந்தணர் சிலர் யாகத்திற்காகக் கட்டி வைத்திருந்த ஒரு பசுவைப் பார்த்தான். அப்பசு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது; ஆபுத்திரனுக்கு மனஞ் சகிக்கவில்லை. ஆதலால், அப்பசுவை எங்ஙனமேனுங் காக்கவேண்டுமென்னுங் கருத்துடையனாகி, நள்ளிரவில் யாவரும் அறியாவண்ணங் கைப்பற்றி விரைந்து சென்றான். சின்னாழி கழிந்ததும் அவ்வேள்விப் பசுவைக் காணாமையால் அப்பார்ப்பனர் திகைத்து மூலைக்கொருவராகத் தேடிச் சென்றனர். அவர்களிற் சிலர் அடிச்சுவடு கண்டு விரைந்து சென்று ஆபுத்திரனையும் பசுவையுங் கண்டனர். கண்டவுடன் மனம் அழன்று கைப்பற்ற வருவதைக் கண்ட ஆபுத்திரன், தான் கைப்பற்றியிருந்த பசுவை, பார்ப்பனர் தொடர்ந்து பற்றாவண்ணம் விரைந்து செல்ல விடுத்துத் தான்மட்டும் சிக்குண்டான். அப்பசுவையும் ஒரு பார்ப்பனன் விரைந்து உடனோடிப் பற்ற, அப்பசு பார்ப்பனனைக் குத்திக் குடர்கிழித்து ஓடிப்போனது.

பின்னர், ஆபுத்திரனைப் பற்றிய அந்தணர், பசுவைக் கவர்ந்தமைக்குக் காரணம் யாதென வினவினர். ஆபுத்திரன், அவர்களைப் பார்த்துக் "கொலைக்கஞ்சா மூர்க்கர்களே!

விடுநில மருங்கிற் படுபுல்லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கெல்லாம்
பிறந்தநாள் தொட்டுஞ் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றமென்னே!

பசுவைக் கொன்றோ நீவிர் பயனடைவது" என அவர் வெட்குமாறு கழன்று, தன் வழியே சென்றனன்.

அருளாளர்களே! ஆராய்ந்து பாருங்கள். இவனன்றோ மகனென்பான்! தன்னுயிருக்குண்டாம் ஊற்றினையும் நோக்காது, பிறவுயிர்மாட்டு இரங்கிய இவனுடை மனக்கனிவு எத்தகையது! இன்னும் அருளாளர் பலரைப் பற்றிய வரலாற்றை நீங்கள் உணர்ந்திருக்கலாம்; ஈண்டுரைப்பிற் பெருகும்.

இஃதிங்ஙனமாக, ஆறறிவுடன் மக்களாகப் பிறந்திருந்தும் சிலர், அருளென்பது சிறிதும் இன்றி, அந்தோ! பிறவுயிர்களைக் கொன்று தம்முடைய தூராக் குழியைத் தூர்க்க முயல்கின்றனர்.



உண்ணும் உணவில் ஈ, எறும்பு முதலியவை வீழ்ந்து கிடந்தால், அவ்வுணவை உண்ணாமல் உண்ட உணவையும் வாந்தி யெடுக்கும் இவர்கள், புலவுமிக்க புலாலை உண்ணும் பொருட்டு ஒருயிரை யாக்கையினின்றும் துள்ளத் துள்ளப் பிரிக்கின்றனர்.

'தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைத்தின்பர்—அந்தோ
நடுநின் றுலக நயனிலா மாந்தர்
வடுவன்றோ செய்யும் வழக்கு.'

என்பது 'அறநெறிச்சாரம்.'

கொல்லப்படும் பிராணிகளோ ஐயறிவு உடையவை; பிறர்க்கொரு தீங்கும் நினையாதவை; இவர்கள் உண்ணும் உணவைப் பகிர்ந்துகொள்ளாதவை; பிறரால் வளர்க்கப்படும் அவசியமின்றித் தாமே வளர்ந்த புல் தழை முதலியவைகளைப் புசிக்கின்றவை.

இவைகள் இருப்பதினால் அவர்களுக்கு ஏதேனும் இடையூறு உண்டா? இடையூறு உண்டெனினும் இவைகளைக் கொல்லும் நியாயம் ஏதேனும் உண்டா? நியாயம் இருப்பதாகக் கொள்ளினும், இவைகளைக் கொல்பவரும் இவைகளுக்கு இடையூறாக இருப்பதால், அவர்களைக் கொல்பவர் யாவர்? அந்தோ! தம்முடைய ஊனை வளர்க்கும்பொருட்டுப் பிறிதொன்றன் ஊனை வகிர்ந்து உண்ணும் இவர்கள், மேன்மையான மக்கட்பிறவியாலடையக்கிடக்கும் பெரும்பயனை அடைய ஏதேனும் வழியுண்டா? ஒருகாலும் இல்லை.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

எனக் கூறிய பொய்யாமொழியார் வாக்கின் பொருளை நன்கு ஆராய்ந்து பாருங்கள்.

சிலர், ஊனுண்ண விரும்பினால், தாமே கொன்று தின்ன மனம் ஒப்பாமல், பிறரைக் கொண்டு கொல்வித்து உண்கின்றனர். இவர்களின் உள்ளமே கொலையை மறுத்தும், ஊனுண்ணலை விட மனமில்லாமல் உண்கின்றனரன்றோ! இவர் பொருட்டாலேயே அப்பிராணி மடிகின்றது என்பதை உன்னாத இவர்களின் அறிவின் திறனென்னே!

சிலர், "வழிவழியே (பரம்பரையாக) ஊன் உண்ணுதவர்களே ஊன் உண்ணுதிருக்கவேண்டும்; ஊனுண்டவர்களின் வழித்தோன்றியவர்கள் உண்ணுது நீக்கினுல், தம்முடைய உடம்பை நோயின்றி வைத்திருக்க இயலாது" என, தம்முடைய புது நூலாராய்ச்சிக் கொள்கையாக வாதிக்கின்றனர். இங்கு நாம் ஆராயத் தக்கது ஒன்றுளது. என்னெனில், "வழி வழியாக ஊனுண்டவர்கள் இடையே நீக்கினுல், நீக்கினவர்களுடைய உடம்பு கெடும்; இவர் வழிப் பிறந்த பின்னோர்கட்கும் உடம்பு வலியற்றதாகும்" என்பது சுகாதார முறைமை யென்பது உண்மையாயின், 'வழிவழியாகக் கொலைத் தொழில் புரிதல் முதலிய கூடாவொழுக்கங்களால் தம் முன்னோர்களீட்டிய தீவினையைப் பின்னோர்களாகிய 'ஊனுண்ணுமையால் உடம்பு கெடும்' என்னுங் கொள்கைகொண்டோர் ஈட்ட வேண்டும்" என்பதும் அவசியமாகாதோ? ஆகவே தீய ஒழுக்கம் உள்ளவர்களின் மரபினரெல்லாரும் தீயராகவே யிருக்கவேண்டுமல்லவா? இஃதின்னனமாக, நன்னெறியிலொழுகி நல்லோராக முயல்வானேன்? வழிவழியாக ஊனுண்ணு மக்களைவிட, வழிவழியாக ஊனுண்டு இடையில் ஊனை நீக்கிய மக்கள் பெறுவது பெரும் புகழ் அல்லவா? இதனை ஆராயாமல், தம்முடைய நிலையில்லாவுடம்பை நிலையுடையதாகக் கருதி, ஊனுண்டு, நிலையாக என்றும் அழியாதிருக்கும் ஆன்மாவுக்கு ஊறு உண்டாக்கலாமா?

அறிவுடைய நண்பர்களே! "எப்பொருள் யாவர் வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பது அறிவு" ஆகையால், உங்களுடைய கிடைத்தற்கரிய மக்களுடம்பைக் கொண்டு பெரும்பேறு அடைய முயலுங்கள். "உயிர் அழியாதது; யாவராலும் அழிக்க முடியாதது. உடம்பைத் தானே அழிக்கின்றோம்; அதனுல், நமக்குப் பாவம் உண்டாகாது" என்றும், உலகத்தில் மனிதர்கள், "ஊனுண்ணுவிட்டால், மிருகங்களும் பறவைகளும் மலியும்; அதனுல், உலகம் மிகுந்த கூட்டமுடையதாகி உணவின்றி வருந்தும்" என்றும், "தாவர வர்க்கங்களுக்கு உயிரில்லையா? அவைகளைக் கொல்லும்போது, மிருகங்களையும், பறவைகளையும் கொன்ருல் என்ன?" என்றும் கூறும் வீண்வழக்குக்கட்கு ஆளாகாமல், "கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க எல்லார்க்குஞ் சொல்லுவதுஞ் செய்வதும்" உங்கள் கடமையாகக் கொள்ள வேண்டுகிறேன். கொண்டால்,



"நல்லிசை யுலகில் மல்கிய நண்பர்காள்!
'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்' என் றறியற்புட
நன்று வுரைத்த செந்நாப் போதரின்
உரையது மெய்யென் றுரையுறக் காண்பீர்.
அருளே கடவுளுக் கணிமை யாவது
அருளே நிலத்தில் அலைவற நிற்பது
அருளே மக்களா லடையத் தக்கது
அருளே தீவினை யகலக் காண்பது
அருளே பிறவியை ஆற்றுந் தாயது
யாவுங் கடவுளின் செயலென் றறைந்து
ஓவறக் கொலைபுரி பாவிகள் தமக்குப்
பொள்ளா மணியின் விள்ளா நிலையதாம்
வீட்டு நெறியிற் கூட்டுற வில்லை
ஊனுண் பவர்க ளிலரே யாகில்
ஊன்விற் பவர்க ளொருவரும் இங்கிலை
நடுவு நிலையை நாடிக் காண்பிற்
கடுவள வேனும் காணீர் ஒருதலை
மக்கள் உடம்பே மாண்பினைப் பூண்டது
மக்கள் உயிரே மிக்க அறிவது
மக்கள் உடம்பே வீட்டின் வழியது

ஆதலால்,

எங்ஙன மேனும் துங்க மடைய
மிக்க நல் அறிவின் மேன்மை
யிக்கால் எய்த இளையீர் மாதோ,"

முற்றும்.

பண்டிதர். ஜ. இராஜு முதலியார்,
போர்டு உயர்தர பாடசாலை, பூவிருந்தவல்லி.

---

## மாமிச பக்ஷண விலக்கு.

(௩௩௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

இது காறும் யாம் கூறியவற்றைவிட, மானிடராய்ப் பிறந்தோர் யாது காரணங்கருதி இதைப் புசித்து வருகின்ருரோவெனின் ஊனைத்தின்று ஊனைப்பெருக்கும் நோக்கமாகவே எனலாம். அவ்விதமாக ஊனைப்பெருக்க விரும்பினும் தேகத்திற்கதிக போஷணை அளிக்கத்தக்க தாவரபோசனத்தைப் புசித்துப் பெருக்கினுலென்?

மாமிச உணவிலிருக்கும் போஷணையளிக்கும் சக்தியிலும் தாவர போசனத்திலேயே அதிகமானசத்து இருக்கின்றது. இதைக் கண்டறிந்த மேனாட்டாரும் இது காரணம் கருதியே அத் துர்வழக்கத்தை அறவே ஒழிக்க முயல்கின்றனர்.

அதைவிட ஈசன் அவற்றின் இரட்சகரென்பதை நாமறிதல் வேண்டும். உயிர்களைப் பாதுகாத்தல் அவரது தொழிலாயிருக்கின்றது. அவரே சீவ பிராணிகளைக் காக்கும் தொழிலை மானிடரிடத்தி லொப்படைத்திருக்கின்றார். ஆகவே நாமிச்சீவ பிராணிகளை யெல்லாம் எவ்வுயிருமீசன் கோயிலெனப் போற்றி வரல்வேண்டும். ஈசன் நம்மிடத்தில் காத்தற்றொழிலை ஒப்படைத்திருக்க, நாமெல்லாம் அழித்தற்றொழிலைக் கையாண்டு நம் வயிற்றையெல்லாம் இடுகாடாக்கல் தக்கதோர் நீதியா?

இவைகளன்றிக் கொலைசெய்யாமையா லுண்டாகும் பெரும் பேற்றைக் குறித்து மேலோரும்,

"கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே கூறியமேலான ஞானமாகும்
கொலையகன் றொழுகும் தவங்கடாமே குற்றமிலா நற்றவமென் றுரைக்கு [நூலுங்
கொலையாதி யகற்றிய நல்லறங்கடாமே குவலயத்தி லொப்பரிய அறங்க [ளாகும்
கொலையாதியகன்ற பெருஞ் செல்வந்தானே கூறினுயிர்க்கிதமான [வாழ்வதாமே."

என வியந்திருக்கின்றார்.

பெரிய கல்வி கேள்வி முதலானவற்றில் மேம்பட்டவனாயிருந்தாலும் புலைத்தொழில் செய்வானேயாயின் கொடிய நரகமடைவதே யன்றிச், சிவபதமடைய மாட்டானென்பதைப் பின்வரும் செய்யுள் விளக்கி நிற்கும்:—

"கலையெலாமுணர்ந்தானேனுங் கரிசறத் தெளிந்தானேனும்
மலையெனவுணர்ந்தானேனு மனமயலகன்றானேனும்
உலகெலாம்புகழப் பல்லோர்க்குதவியகையனேனும்
இலகியவிரக்கமின்றேலெழுநரகடைவனன்றே."

பின்னும், ஒரு துண்டிறைச்சியை உண்போன் துன்பமடைவான் என்பதைப் பின்வரும் செய்யுளாலறிக,

"கொன்று விலங்கின் தசை நுகரும் கொடுமையோர்க்கிரங்கினுன்
றுன்னுமயிரொத்தனையாமத்தனையகாலம் வெந்நரகி
னுன்றினுகர்வாய்ப்புழுவொழுகவுழுப்பரென்க வுணர்ந்தேயே
கன்றுசினவெங்கொடுவிலங்கும்பல்லூன் றின்னக்கருதாவால்."



இவ்வித இழிதொழிலை மனுஷனாகப் பிறந்த எவனும் செய்யாதிருத்தல் வேண்டும். விசேஷமாக, நம்குலத்தோராகிய செங்குந்தர்களொருபோதும் செய்யாதிருத்தல் வேண்டும். மேலும், மாமிசம் புசிப்போரிடத்தில் புசிக்கலாகாது; புசிப்பின், அன்னோர் தம்குலவொழுக்கத்தினின்றும் தவறினோரேயாவர்.

V. K. சின்னதம்பி முதலியார்.
காரவெட்டி, இலங்கை.

---

## பொது நன்மைக்கு உழைத்தல்.

உலகத்திலேயுள்ள ஒவ்வொருவரும் தனித்தனியே செய்து கொள்ளத்தக்க காரியங்கள் சில உள. பலருங்கூடி உழைத்தே ஆகத் தக்க காரியங்கள் பல இருக்கின்றன. ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், சீன முதலிய தேசங்களிலே பலர் ஒன்று கூடி உழைக்கும் ஒற்றுமை மிகுதியினாலே அவர்களுக்கு வேண்டிய காரியங்கள் மிக எளிதில் முடிகின்றன. அதனால் அவர்கள் எண்ணியவற்றை அவ்வக்காலத்தே அடைகின்றார்கள். கைத்தொழில், வியாபாரம், விவசாயம் இவைகளிலே அன்னிய நாட்டினரெவரையும் எதிர்பாராமல் அவர்களுக்குள்ளேயே எளிதில் முடித்து மேன்மை யடைகின்றார்கள். அதனால் செல்வத்தை விருத்திசெய்து எல்லாச் சுகங்களையும் பெறுகின்றார்கள். ஒவ்வொரு காரியங்களையும் பலர் கூடி முடிக்கின்றார்கள். இன்னும் ஆகவேண்டுவனயாவை எனப் பலர் கூடிச் சிந்திக்கின்றார்கள். தேக சிரமமும் பொருட்செலவும் பாராமல் பாடுபடுகின்றார்கள். அதனால் வரும் பலனைப் பலரும் அநுபவிக்கின்றார்கள்.

நமது தேசத்திலோ இப்படிப்பட்ட அரிய குணங்கள் உடையோர் மிகச் சிலரே. பொதுநன்மையைக் குறிப்பவர் இல்லை. அதற்கெனச்செலவழிப்பவரில்லை. பாடுபடுபவர் இல்லை. பொதுநன்மையை நாடுங் குணங்களும் இல்லை. இவைகளில்லையாகவே தேசத்துக்குண்டான தீமைகள் பல. கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவை நாளுக்கு நாள் விருத்தியாகாமைக்குக் காரணம் பொது நன்மையை நாடும் குணமில்லாமையேயாகும். பொது நன்மைக்கு உழைத்தல் என்றால் யாருக்கோ உழைப்பது என்று

சிலர் நினைக்கின்றார்கள். அது தவறான நினைப்பு. நமக்குத் தனித் தனி ஆகவேண்டிய காரியங்களையே பலருஞ் சேர்ந்து முடித்துக் கொள்ளுகிறோமேயன்றி வேறில்லை. ஆகவே பொது நன்மைக்குப் பாடுபடுதல் வேண்டும்.

இன்னும் நமது தேசத்திலே ஒவ்வொருவரும் அற்ப முயற்சியாலும், அற்பவருவாயினாலும், அற்ப சீவனத்தினாலும் திருப்தியடைகின்றார்களேயன்றி, நாளுக்கு நாள் எல்லா வகையிலும் மேலோங்கி நன்மையடைய வேண்டுமென்னும் எண்ணம் சிறிதும் இல்லாமலிருக்கின்றனர். இன்னும் சிலகாலம் இப்படி இருக்கின் இத்தேசம் மிக வறுமைப்பட்டுவிடும்.

ஆதலால், அறிவும் நாகரிகமும் படைத்த விவேகிகள், அபிமானம் பூண்டு, பொதுநன்மைக்கானசெயல்களைச் செய்ய முன்வர வேண்டும். கைத்தொழிலும், வியாபாரமும், விவசாயமும் விருத்தியாகி, இத்தேசப் பொருள் இங்கேயே தங்கும்படியும், எல்லாரும் சுகமடைய வேண்டுவனவற்றைச் செய்யவும் முயற்சிக்க வேண்டும்.

இங்ஙனம்,

நன்மை விரும்பி, பிள்ளையார் பாளையம்.

---

## செங்குந்த மித்திரன் வாழ்த்துப்பாக்கள்.

I

சித்தாந்த மறைகளுக்கு மெட்டாத செஞ்சுடர்வேல்
சேந்தனடி சேவை செய்து
எத்திசையு மடிபணிய முசுகுந்தன் பெற்றநவ
வீரர்குல மேன்மை யெல்லாம்
மித்திரனைச் சென்றேகி மிளிர்காத்தே கண்கண்டு
வாய்செப்பிச் சிந்தை கொள்ள
இத்தலத்தே சுருதியதாய் நிலவியருள் பெரியாரோ
டிறைவனருள் பெற்று வாழி

க. குழந்தைவேலு முதலியார்.



II

மங்களஞ்சேர் சென்னை வளநகரில் வந்துதித்த
செங்குந்தன் பத்திரிகை சீருடனே—எங்கும்
நிலவி நிலைக்க நிமலன் திருத்தாள்
மலரைநித நெஞ்சே வணங்கு.
ஐயிரண்டு திங்களேயான செங் குந்தனுளம்
நையமிக வாடி நடுங்குகின்றான்—மெய்யாகச்
சந்தாத் தொகையாம் தகுமுணவைத் தந்தையரும்
தந்தா தரியாத தால்.
நிறைந்த உலகில்நிதமுஞ் செங் குந்தன்
சிறந்து விளங்கிடச் செய்க—அறந்திகழ்
தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.
பங்குக் கொருபேப்பர் வாங்கிப் படித்தோமேல்
செங்குந்த னும்பெரிய செல்வனும்—எங்கும்
பெரிய முதலவனைப் பேணித் திரட்டல்
உரிய கடனு முமக்கு.

கோட்டாறு A. S. முத்தைய முதலியார். B.A.,

## செங்குந்த மித்திரனை ஆதரிப்பதின் அவசியம்.

குழந்தைகள் பிறந்தவுடன், அல்லது பிறந்து சில மாதங்களுக்குள், வயது சென்ற பெரியவர்களைப்போல், தங்களது பெற்றோர்க்கோ மற்றவர்க்கோ பெரும் பயன் கிடைக்குமாறு உழைக்கத் தலைப்படுவது அருமையிலும் அருமை. குழந்தைகள் தக்க வயது வரும் வரையிலும், பெற்றோர் பால் முதலிய வேண்டியவற்றை ஊட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பது இயற்கையன்றோ? அவ்வாறன்றி, ஒழுக்கத்திற் சிறந்து விளங்கிய செங்குந்த குலமானது பலவாண்டுகளாகச் செய்த தவப்பயனைச் சில மாதங்கட்கு முன்னே பிறந்து செங்குந்தமித்திரன் என்னும் பெயர்பூண்டு, நம் செந்தமிழ் நாடேயன்றி வெளி நாடுகளிலும் உலவி வந்து நம் குலத்திற்கே ஓர் அரும் புதல்வனென இருக்குங் குழந்தையானது பத்துமாதக் குழவிப் பருவத்திலேயே, சைவ சமயத்திற்கு இரு கண்கள்போன்ற ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளையும், ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரியரையும் போன்று, தனது பெற்றோராகிய செங்குந்த குலத்திற்குப் பெரும் பயன்

விளைத்திருக்குமானால், வயது ஏற ஏற உண்டாக்கும் பயனைக் குறித்து வாசகர்களே யூகித்து உணர்ந்துகொள்ளலாம்.

தான் பிறந்த பத்து மாதங்களுக்குள்ளாகவே அம்மவாரி குப்பமென வழங்கும் அம்மையார் குப்பம், திருமழிசை, சைதாப்பேட்டை, மைலாப்பூர், மாணம்பதி, பெருநகர், உத்திரன்மேரூர், அம்மயப்பட்டு, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் தென்னிந்திய சேங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கங்களை ஸ்தாபித்தான் அல்லவா? அநேக ஜில்லாக்களிலுள்ள நம் குல ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், உணவு முதலியவை கொடுத்து ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறானல்லவா? தூர தேசங்களிலும் வெளி ஜில்லாக்களிலும் இதுவரையில் அன்னியர்போல் வசித்து வந்த நம் குலச் சகோதரர்களை ஒருவருக்கொருவர் அருந்துணைவர்களாகவும், சிநேகிதர்களாகவும் செய்து வருகிறானல்லவா? உண்மைச் செங்குந்தர்களது சீலத்தையும், சிறப்பையும் வெளிப்படுத்தி மன்றாடுகின்றானல்லவா?

நம் குலக்குழவியாகிய மித்திரனுக்கு உணவு முதலியவை கொடுத்து ஆதரிப்பது நமது கடமை. அவனால் நம் குலம் பெரும்பயனைப் பெற இருப்பதால், ஒவ்வொரு சேங்குந்தரும் மித்திரனை வாங்கி வாசிப்பதேயன்றி, நம் குலச் சிறுவர் சிறுமிகளையும் மித்திரனில் பிரசுரித்துள்ள விஷயங்களை வாசித்துணருமாறு செய்யவேண்டும். குலாபிமானத்தை உண்டாக்குவதற்கு இளமைப் பருவமே தகுந்த காலமாகும். இக்காரணம் பற்றியே "இளமையிற் கல்" என மூதாட்டியுங் கூறியுள்ளார். மித்திரனால் நாம் பெறக்கூடிய பயன் எவ்வளவு அவனைப் போற்றுகிறோமோ அவ்வளவேயாகும் என்பதை நம் குலச் சகோதரர்களுக்கு அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சந்தா நேயர்களுள் பெரும்பாலார் இன்னும் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தவில்லையெனத் தெரிகிறது. அவர்கள் சீக்கிரத்திலேயே செலுத்துவார்களென எதிர்பார்க்கின்றேன்.

குருசுவாமிகள் கா. ச. சாமிநாத தேசிகர் அவர்கள்,

கற்பகவள்ளலார் ஆதீனம், திருக்கழுக்குன்றம்.

---



# செங்குந்தர் கிளர்ச்சி.

## காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்.

### சங்க ஸ்தாபனம்.

பிரபவ வருஷம் ஆவணி மாதம் 26-யில் (11-9-27-ல்) காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் கிருஷ்ணராயர் தெருவு திருநாவுக்கரசநாயனார் மடத்தில் காலை 9-மணிக்குச் செங்குந்தர்கள் பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று. அக்கூடத்திற்கு ஸ்ரீமான் ஐ. பொ. முருகேச முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகித்தார். அது சமயம் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்கள் திருவாரூர் முனிசிபல் கவுன்சிலரும் செங்குந்த மித்திரன் பதிப்பாளரும் ஆகிய உயர் திருவாளர் T. N. சபாபதி முதலியார் அவர்களும், செங்குந்தமித்திரன் ஆசிரியர் உயர் திருவாளர் M. சண்முகசுந்தர முதலியார், M. A., L. T., அவர்களும், செங்குந்த பிரமுகர்களான திருவாளர்கள் M. முருகேச முதலியார் (தாலூகா போர்டு மெம்பர்), பரமானந்த முதலியார், நடேச முதலியார், முனியகாளத்தி முதலியார், முனிசிபல் உபாத்தியாயர்கள் D. C. கந்தசாமி முதலியார், D. முத்துக்குமாரசுவாமி முதலியார், பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், க. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்களும் மற்றுமுள்ள பிரபல செங்குந்தர்களும் ஆகச் சுமார் 200க்கு மேற்பட்டுக் குழுமியிருந்தார்கள்.

அச் சமயம் திருவாளர்கள் க. வஜ்ஜிரவேலு முதலியார், T. N. சபாபதி முதலியார், T. V. திருஞானசம்பந்த முதலியார், M. சண்முகசுந்தர முதலியார் ஆகிய இவர்களால் நம்முடைய செங்குந்த சமூகமானது தற்போது மிகத் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறதென்றும், நம்முடைய சமூகத்தினர் பலர் செங்குந்தர் என்று சொல்வதற்குங் கூட வெட்கப்படுகிறார்கள் என்றும், கல்வியில் நாம் முன்னேற்றமடைய முயலவேண்டும் எனவும், ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் இலவசச் சாப்பாடு முதலிய சௌகரியங்கள் செய்ய வேண்டுமெனவும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் தற்போது சுமார் 12 மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து உதவி செய்கிறார்கள் என்றும், அதற்குப் பொருள் வேண்டுமெனவும், நமது சமூகத்தினரை நன்னிலைமைக்குக் கொண்டுவரப் பத்திரிகைகளும், சங்கங்களும் அவசியமென்றும், வாலிபர்கள் தான் மிக்க ஊக்கமுடையவர்களென்றும், நமது சமூகத்தினர்க்குத் தலைநாடாய் விளங்கும் இக்காஞ்சி மகா

நாட்டில் இளைஞர் சங்கம் அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்றும் 12 மணி வரையில் சொற்பெருக்குகள் நிகழ்த்தப்பெற்றன. பிறகு காஞ்சிச் சேங்குந்தர் வாலிப சங்கம் நிறுவப்பெற்றது.

காஞ்சிபுரம் முனிசிபல் எல்லைக்குள் வசிக்கும் செங்குந்தர்களில் 35 வயதிற்குட்பட்ட அனைவரும் இச்சங்கத்தில் அங்கத்தினராக உரிமையுடையவராவார்கள் என்றும், அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்களும் வாலிப ஊக்கமுடையவர்களாயின் அங்கத்தினராகச் சேரலாமென்றும் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரால் பிரேரேபிக்கப்பட்டு திரு. சிதம்பர முதலியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

கீழ்க்கண்டவர்கள் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பிறகு இன்னும் இரண்டு நிர்வாகசபை அங்கத்தினர்களை அடுத்த நிர்வாக சபைக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், இவ்வாலிப சங்கத்தின் அங்கத்தினர்கள் வருஷம் ஒன்றுக்கு அணா நாலு செலுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றன. பகல் 1 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

தலைவர்:—திரு. M. முருகேச முதலியார்.
(தாலுக்கா போர்டு மெம்பர்.)

துணைத்தலைவர்:—திரு. பண்டிதர் T.V. திருஞானசம்பந்த முதலியார்.

காரியதரிசிகள்:— { திரு. அருணசலம்.
திரு. இராஜமாணிக்கம்.

பொக்கிஷதார்:— (தலைவர்)

நிருவாக சபையின் இதர அங்கத்தினர்கள்.

1. திரு. பரமானந்த முதலியார். 7. T. P. ஆதிமூல முதலியார்.
2. ,, நடேச முதலியார். 8. B. C. வீராசாமிமுதலியார்.
3. ,, முனியகாளத்திமுதலியார். 9. சிதம்பர முதலியர்.
4. ,, இந்திர முதலியார். 10. D. C. கந்தசாமி முதலியார்.
5. ,, கனகசபை முதலியார். 11. திருவேங்கிட முதலியார்.
6. ,, D. முத்துக்குமாரசாமி முதலியார்.

முதல் நிருவாக சபைக் கூட்டம்.

17-9-27-ல் நடந்த நிர்வாகக் கூட்டத்திற்கு திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—



(1) திரு. நா. மாணிக்க முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய இருவரும் நிருவாக சபை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (2) சந்தா வசூல் செய்யத் திருவாளர்கள் சி. அருணசல முதலியார், தெ. முத்துக் குமாரசுவாமி முதலியார், செ. கந்தசாமி முதலியார், சிதம்பர முதலியார், ர. இராஜமாணிக்க முதலியார் ஆகிய இவ் வைவர் கூடிய சப்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. (3) சங்கத்தின் சட்ட திட்டங்களைத் தயார்செய்ய திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், சி. அருணசல முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார் ஆகிய மூவர்கள்கொண்ட தனிக்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. (4) நாளது செப்டம்பர் 26-ல் நடைபெறவிருக்கும் முனிசிபல் தேர்தலில் 10, 11 வார்டுகளில் செங்குந்த அபேக்ஷகர்களையே ஆதரிக்க வேண்டுமெனச் செங்குந்த சமூக வாக்காளர்களை இந்தச் சங்கமானது மிகவும் வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகிறது. (5) ஒரே வார்டில் செங்குந்த அபேக்ஷகர்கள் பலர் நின்றால் யாருக்கு அதிக வாக்குகள் கிடைக்கு மென்றிருக்கின்றதோ அவரை இந்தச் சங்கம் ஆதரித்து வெற்றியுறும்படி முயற்சி செய்வதோடு, மற்ற அபேக்ஷகர்கள் அந்த அபேக்ஷகருக்கு உதவியாக இருந்து உழைக்கவேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறது. இந்த விஷயத்தை 20-9-27-ல் நடைபெறும் பொதுக்கூட்டத்திலேயே அனைவருக்கும் தெரியப்படுத்தி நமக்கு உதவியாக இருக்கும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டியது.

காரியதரிசி.

## காஞ்சி முனிசிபல் தேர்தலும் வாலிபர் சங்கமும்.

11-வது வார்டு கௌன்சிலர் ஸ்தானத்திற்காகச் செப்டம்பர் மாதம் 26உ நடந்த தேர்தலில் செங்குந்தராகிய திருவாளர் V. வினைதீர்த்தமுதலியார் அவர்களும், வேளாள குலத்தவரும் இவ்வார்டின் தற்காலத்திய கௌன்சிலருமான திருவாளர் B. குமாரசாமி முதலியார் அவர்களும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். திருவாளர். V. வினைதீர்த்த முதலியாருக்கு அனுகூலமாய் நமது வாலிப சங்கத்தார் தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கத்தின் பெயரால் வீடு வீடாய்ச் சென்றும், ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டியும், நம்குலத்தவரை ஆதரிப்பதால் நமக்குண்டாகும் நன்மைகளை விளக்கிக் கூறி உபந்யாசங்களைச் செய்தும், முதலியார் அவர்களுக்கு யாதொரு செலவுமின்றி வெற்றியுண்டாக்கினர்.

மிகச் செல்வாக்கும், அந்தஸ்தும் உள்ள நம் குலத்தவர்கள் பலர் நிரம்பப் பாடுபட்டும் திருவாளர் B. குமாரசாமி முதலியார் தோல்வியுற்றனர். தேர்தலின் முடிவு தெரிந்தவுடனே தென்னிந்

இய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு ஜே! காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கத்துக்கு ஜே! T. N. சபாபதி வள்ளலாருக்கு ஜே! M. சண்முகசுந்தர முதலியார்க்கு ஜே! என்ற பெருஞ் சப்தத்தினிடையே வெற்றிக்குக் காரணமாயிருந்த நமதுவாலிபர்கள் மாலை சூட்டப்பெற்றனர்.

இனியாவது நம் குலத்தலைவர்கள் காலப்போக்கையும், நமது மகா ஜன சங்கத்தின் நன்னோக்கங்களையும், நன்குணர்ந்து நம்குல முன்னேற்றத்திற் குழைக்க முன்வரவேண்டுமென்று வேண்டிக் கொள்வதாகத் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் எழுதுகிறார்.

## வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

ஷை சங்கக் கட்டிட ஹாலில் ஷை சங்கத்தின் ஆதரவில், சென்ற செப்டம்பர்மீ முதல் தேதி வியாழக்கிழமையன்று காலை 8-மணிக்குத் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை என்னும் பெயருடன் புளியங்குடி திருவாளர் ஆதிநாராயண பிள்ளை அவர்களைத் தலைமை உபாத்தியாயராகக்கொண்டு ஒரு பகல் பள்ளிக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீ சண்முக மூர்த்திக்குப் பாதப் பணிவிடை உபசாரம் செய்து குழந்தைகளுக்கும், மற்றும் கூடியிருந்த பெரியோர்களுக்கும் சண்முகப் பெருமானது பிரசாதமளிக்கப்பெற்றது என ஷை சங்கத்தலைவர் திரு. ஆ. மு ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரதிநிதிகளின் சுற்றுப் பிரயாணம்

திரு ஆ. முருகேச முதலியார் அவர்கள் வேண்டிக்கொண்டபடி சென்ற செப்டெம்பர்மீ 18௳ ஞாயிற்றுக் கிழமை திருவாளர்கள் தி அ. சண்முகமுதலியார், மா. அ. கனகசபைமுதலியார், முனுசாமி முதலியார் ஆகிய மூவரும் பல்லாவரத்தை யடுத்த ஆனைக்கா புத்தூருக்குப் பிரசாரத்தின் பொருட்டுச்சென்றனர். அன்று மாலை 5½ மணிக்கு ஸ்ரீ முருகப்பெருமான் ஆலய மண்டபத்தில் திரு விஜயரங்கமுதலியார் (Retired Post Master) அக்கிராசனத்தின் கீழ் ஒருபெருங் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் திரு, தி. அ. சண்முக முதலியார் "நமது முன்னேற்றம்" என்பதைப் பற்றியும், திரு. மா. அ. கனகசபை முதலியார் "தலைச்சங்கமும் கிளைச்சங்கமும்" என்பதைப் பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவ்வூர்ச் செங்குந்தர் அனைவரும் மிகுந்த ஊக்கங் காட்டினர்.



நாளது அக்டோபர் மாதம் நமது சங்கப் பிரதிநிதிகள் அநேக இடங்களுக்குச் சென்று பிரசாரம் செய்தும் கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்தும் வந்திருக்கின்றனர். இவற்றின் விவரம் மறு சஞ்சிகையில் வெளிவரும்.

---

# ஒட்டக்கூத்தர் திருநாள்.

## மன்னார்குடி.

இவ்வூரில் சென்ற ஆவணி மாதம் 22௳ புதன்கிழமை ஒட்டக்கூத்தரின் திருநக்ஷத்திரத்தன்று அக்குல ஸ்ரேஷ்டரின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ பழனியாண்டவர் ஸ்வாமிக்கு அபிஷேக ஆராதனையும், பாரத மாதா வர்சகசாலையில் அப்பெரியாரின் குரு பூஜையும் நடந்தேறியது. அங்குக் கூடியிருந்த கூட்டத்தின் முன் ஒட்டக்கூத்தர் சரித்திரம் வாசிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான் காளிமுத்துமுதலியாரவர்கள் 'செங்குந்தரும் நமதுகடமையும்' என்பது பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். முடிவில் தற்காலம் நம் குலமுன்னேற்றங் கருதி அரும்பாடுபடும் நம் 'மித்திரன்' மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்ற அருள்பார்க்கும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கூட்டம் இனிது கலைந்தது. பிறகு, சுமார் 200 ஜனங்களுக்கு அறுசுவையுடன் அன்னம் அளிக்கப்பட்டது.

## காட்டூர் செங்குந்தர் சங்கம்.

தொந்திபுரம் திசைநாட்டுக் கிளை ஐந்து நாட்டில் ஒன்றாகிய காட்டூரில் ஆவணி-மீ 22-௳ கூத்தர்பெருமான் திருநக்ஷத்திரத்தன்று கிளைச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பெற்று அச்சங்கம் அமாவாசை தோறும் கூடவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றதென்றும், அச்சமயம் திரு. ச. நாகலிங்கமுதலியார் அவர்கள் அச்சங்கச் சார்பில் வருஷாவருஷம் நடைபெறும் கூத்தர் திருநாள்கொண்டாட்டத்திற்கு வேண்டிய பொருளுதவிசெய்வதாக வாக்களித்தாரென்றும் ஷை சங்கக் காரியதரிசி திரு சா. இராஜு முதலியார் எழுதுகிறார்.

## சைதாப்பேட்டை சூரசம்மார உற்சவம்.

சென்னை சைதாப்பேட்டை செங்குந்தர் கோட்டத்தில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் ஆலயத்தில், நிகழும் ஐப்பசிமீ 10௳

8439

முதல் நடைபெறும் திருநாளில் ஆருவது நாளாகிய சோமவாரம் மாலை 6-மணிக்குமேல் சூரசம்மார உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும். அச்சமயம் நம் சகோதரர்களால் சூரசம்மாரம் நாடகமாக நடத்தப்பெறும் எனத் திருவாளர் தி. ம. காளத்தி முதலியார் எழுதுகிருர்.

---

## போலிச் செங்குந்தர்

### கண்டனக் கூட்டங்கள்.

#### காஞ்சி மகாநாட்டுச் சேங்குந்தர் கண்டனம்.

கோயம்புத்தூரிலுள்ள செங்குந்தமகாஜன சங்கத்தார், 16-8-27 தேதி சட்ட சபை அங்கத்தினர்களுக்குக் கொடுத்துக் கொண்ட மனுவில் உள்ள சிலவார்த்தைகள் உண்மைச் செங்குந்தர்களது புகழுக்கும், கௌரவத்திற்கும் பெரும்பாதகம் விளைப்பதாக இருப்பதனுல், அவைகளைக் கண்டிக்கும்பொருட்டுக் காஞ்சிபுரம் செங்குந்த வாலிபர் சங்க ஆதரவில் சில தினங்களாகப் பல தெருக்களில் கூட்டங்கள் கூட்டப்பட்டுவருகின்றன. முதலாவதாக, 28-9-27 மாலை பிள்ளையார்பாளையம் மண்டபத் தெருவில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப் பட்டது. ஆயிரக்கணக்கான செங்குந்த குலதிலகர்கள் விஜயம் செய்திருந்தனர். அக்கூட்டத்திற்கு வித்வான் திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். திருவாளர்கள் செ. சிதம்பர முதலியார், குமாரசாமி முதலியார், தூ. செ. கந்தசாமி முதலியார், பி. செ. மணிக்கவாசகமுதலியார், க. வச்சிரவேலு முதலியார், திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் முதலிய அநேக அறிஞர்கள் செங்குந்தர்களது பண்டைப் பெருமையினையும் புகழினையும் மிக விரிவாக விளக்கி, தற்போதும் செங்குந்தர்கள் நல்லொழுக்க சீலர்களாக ஒளிர்கின்ருர்களென்றும், அப்புகழுக்கும் கௌரவத்திற்கும் கோயம்புத்தூர் தேவதாசி வகுப்பினர் பங்கம் விளைவிக்கும்படி பெண்களைக் கோவில்களுக்கு விடுகிற வழக்கம் கைக்கோள குடும்பங்களில் உண்டு என்று எங்கும் இல்லாத வழக்கத்தைக் கூறுவதைச் செங்குந்தரனைவரும் கடுமையாகக் கண்டிக்கவேண்டுமென்றும் கூறினர்.

பிறகு திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்து அதனை ஆதரித்து நீண்டதொரு உபந்நியாசம் செய்தார். தீர்மானமாவது:—"கோயம்புத்தூரிலுள்ள போலிச் செங்குந்த மகாஜன சங்கத்தார் 16—8—27ந் தேதி சென்னை சட்டசபை அங்கத்தவர்கட்கும், தேவஸ்தானப்பரிபாலன



போர்ட்டார் முதலியவர்கட்கும் அனுப்பியுள்ள மனுவில் கண்ட சில வார்த்தைகள் ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட உண்மைச் செங்குந்தர்களின் புகழுக்கும், கீர்த்திக்கும், ஒழுக்கத்திற்கும் பங்கம் விளைவிப்பனவாக இருப்பதால் இக்கூட்டம் அவைகளை மிகவும் பலமாகக் கண்டிக்கின்றது." இத் தீர்மானத்தைக் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தர பாடசாலைத் தமிழாசிரியர் திருவாளர்திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் ஆதரித்துப் பேசிய பின்பு எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு திரு. க. வச்சிரவேலு முதலியாரவர்கள் "மகாத்மா காந்தியடிகள் ஸ்ரீரங்கம் சென்றிருந்தபோது செங்குந்த சங்கத்தின் சார்பாக மிஸ். ஜீவரத்தினம்மாள் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரமானது உண்மைச் செங்குந்தர்களது கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கின்றதாதலின் இக்கூட்டம் மிக வன்மையாக அப்பத்திரத்தைக் கண்டிக்கின்றது" என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். தீர்மானம் திரு. செ. சிதம்பர முதலியாரால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 10-30 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

அதே தீர்மானங்களை வலியுறுத்தும் பொருட்டு 1—10—27 நடுத்தெரு ஆலயத்திலும், 5—10—27 தேதி விளக்கொளிப் பெருமாள் கோவில் வீதியிலும், 7—10—27 தேதி மண்டபத் தெருவிலும் பொதுக்கூட்டங்கள் கூட்டப்பட்டன. ஒவ்வொரு நாளும் செங்குந்த சிகாமணிகள் அளவில்லாது குழுமியிருந்தனர். நடுத்தெரு கூட்டத்தில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திரு வீ. திருஞான சம்பந்த முதலியாரவர்கள் தலைமை வகிக்கத் திருவாளர்கள் C. பக்கிரிசாமி முதலியார், ஏ.எஸ். சண்முக முதலியார், செ. சிதம்பர முதலியார், குமாரசாமி முதலியார், க. வச்சிரவேலு முதலியார், சிரஞ்சீவி கைலாயம், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் முதலியோர் கோயம்புத்தூர் போலிச் செங்குந்த சங்கத்தாரின் மனப்பான்மையைக் கண்டித்துப் பேசினர். இரவு 11 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

5-10-27 ல் கூடிய கூட்டத்திற்குச் செங்கற்பட்டு மிஷன் ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. வே. முத்துசாமி முதலியாரவர்கள் தலைமை வகிக்க, திருவாளர்கள் ஐயங்கார்குளம் வித்வான் அ. க. பொன்னுசாமி முதலியார், C. பக்கிரிசாமிமுதலியார், ஆ. கா. சண்முக முதலியார், செ. சிதம்பரமுதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், கா. செ. கந்தசாமி முதலியார், திரு. வீ. திருஞானசம்பந்த

முதலியார் முதலிய பலரும் செங்குந்த முன்னேற்றம் என்பது பொருளாகக்கொண்டு பேசத்தொடங்கி, ஒட்டக் கூத்தர், பொய்யாமொழிப்புலவர், படிக்காசுப் புலவர் முதலிய பல வித்வான்கள் செங்குந்த மரபில் உதித்து அச்சமூகத்திற்குப், பெரும் புகழ் தந்தனர் என்றும், செங்குந்த மன்னர்கள் அநேகர் அரசுபுரிந்துள்ளார்களென்றும், 63 நாயன்மார்களில் செங்குந்த சமூகத்தைச் சார்ந்த நாயன்மார்கள் பலர் உண்டென்றும் பல சரிதங்கள் மூலமாக இந்தச் சமூகத்தின் புகழை நன்றாக எடுத்துக் கூறி, தற்போது செங்குந்தர்களுக்கு இழிவை உண்டாக்கத் தக்க விதத்தில் தேவதாசி சமூகத்தார் வெளிப்பட்டிருப்பதை ஒவ்வொரு செங்குந்தனும் கண்டிக்க வேண்டுமென்றும் கூறினர். இரவு 11 மணிக்கு வந்தனோபசாரத்தோடு கூட்டம் கலைந்தது.

7—10—27 ந் தேதி கூடிய கூட்டத்திற்கு திரு. முத்துச்சாமி முதலியாரவர்கள் தலைமை வகித்தனர். அப்போது திருவாளர்கள் ச. ஸ்ரீலஸ்ரீசிவசாமிதேசிகர், ஐயங்கார்குளம் அ. க. பொன்னுசாமி முதலியார், செ. சிதம்பர முதலியார், தா. செ. கந்தசாமி முதலியார், ஆ. சா. சண்முக முதலியார், முத்துக்குமாரசாமி முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு நாகேஸ்வரம் வீரப்ப சாமியார் ஆகிய அறிஞர்கள் பலர் சொற்பெருக்கிட்டனர். உபந்நியாசத்தில் கோயம்புத்தூர் தேவதாசிகள் இழி தொழில் விருந்து விடுபட வேண்டியது அவசியமென்றும், அதற்கு அனைவரும் துணை புரிய வேண்டுமென்றும், ஆனால் தேவதாசி வகுப்பினர் உண்மைச் செங்குந்தர்கட்கு மனத்தாங்கல் உண்டு பண்ணுவழியில் தாங்கள் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டுமென்றும், அவர்கள் சொல்லுகிறபடி எந்த இடத்திலும் உண்மைச் செங்குந்த மரபினர் கோயில்களுக்குத் தங்கள் பெண்களை விடுவதில்லை என்றும், ஆகையால், செங்குந்தர்வழியும் ஒவ்வொரு கிராமத்திலும் கண்டனத் தீர்மானங்கள் செய்தனுப்ப வேண்டுமென்றும் எடுத்துக் கூறப்பட்டது.

காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 11 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

பீ. செ. மாணிக்கவாசக முதலியார், காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்க விளம்பர சபைத் தலைவர்.

---

## மாணும்பதி நாட்டார் கண்டனம்.

கோயம்புத்தூர் போலிச் செங்குந்த சங்கம் 16—8—27ல் சென்னை சட்டசபை அங்கத்தினர் முதலியோர்களுக்கு அனுப்பியுள்ள மனுவைக் கண்டித்தற்காகத் தொந்திபுரம் திசைநாட்டிற்குத் தலைநகராகிய காஞ்சிபுரம் தாலுக்கா மாணும்பதி கிராமத்தில் 7—10—27 மாலை 7-மணிக்குப் பெருநகர் வித்வசிரோமணி திரு. தில்லை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் செங்குந்த குலமக்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்துக்கு அக்கிராம வாசிகளேயன்றிச் சுற்றிலுமுள்ள பெருநகர் முதலிய கிராமங்களிலிருந்தும் செங்குந்த மஹாஜனங்கள் பெருந் திரளாக வந்து கூடினர். இக்கூட்டம் மேற்படி மாணும்பதி கிராமத்தின் போர்டு பெண் பாடசாலை மாணவிகளால் கடவுள் வாழ்த்து பாடப் பெற்று ஆரம்பித்தது.



பிறகு, திரு. அ. பசுபதி முதலியார் அவர்கள், ஒவ்வொரு சமூகங்களினது முன்னேற்றத்திற்கும் கல்வியானது இன்றியமையாததென்றும், அத்தகைய கல்வியில் செங்குந்தர்கள் மிகவும் பிற்பட்டு நிற்றலினாலே அக்கல்வியைப் பெறச் செங்குந்தர்கள் முற்படவேண்டும் என்றும் மிகத் தெளிவாக உபந்யசித்தார்கள்.

பிறகு பிள்ளையார் பாளையம் திருவாளர் க. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்கள் செங்குந்தர்கள் தற்காலம் அனுபவித்து வரும் வறுமைக்கும் துன்பத்திற்கும் முக்கிய காரணங்கள் இவர்கள் கைக்கொண்டுள்ள நெய்தற்றொழில் அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு விருத்திக்குக் கொண்டுவரப்படாமையும் இவர்கள் அரசியல் முறை அறிந்து கொள்ளாமையும் என்றும், கூடிய சீக்கிரத்தில் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் சார்பில் ஓர் செங்குந்த மஹாநாட்டைக் கூட்டி அதன் வாயிலாக இவர்களுடைய குறைகளை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அன்னிய ஜாதியினர் நமக்கு உதவி செய்வார்களென்று நம்புவதினால் பயன் இல்லையென்றும், உலக நிகழ்ச்சியை அறிந்து தங்களைச் சீர்திருத்திக் கொள்வதற்குப் பத்திரிகைகளை வாசித்து வரவேண்டும் என்றும், கோயம்புத்தூர் போலிச் செங்குந்தர்கள் அரசாங்கத்தாருக்கு அனுப்பிய மனுவைப்பற்றியும் தெளிவான விரிவுரை ஒன்றை நிகழ்த்தியபின், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் அக்கூட்டத்தில் நிறைவேறின:—

(1) கோயம்புத்தூர் தேவதாசி வகுப்பினர் தங்கள் பிறப்பிற்குரிய இழிவை மறைத்தற்பொருட்டுக் கர்ணபாரம்பரியும் சமூகப்பிரபந்தங்கள் முதலியவற்றோடு சிறிதும் ஒவ்வாத நிலையில் செங்குந்தரென்னும் பெயரைத் தமக்கு உரியது எனப் பாவித்துக்கொண்டு 16—8—27ல் சென்னை சட்டசபை அங்கத்தினர் முதலியவர்களுக்குத் தயாரித்து அனுப்பியுள்ள மனு உண்மைச்

செங்குந்தர்களது கௌரவத்துக்கும் பண்டைப் புகழிற்கும் மிகுந்த கேட்டை விளைவிக்கக்கூடிய வாக்கியங்களை உடையதாதலின், அவ்வாக்கியங்களை இக்கூட்டம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. (பிரேரேபித்தவர்:—திரு. ர. ராஜமாணிக்க முதலியார் அவர்கள். ஆமோதித்தவர்:—திரு. இ. சம்பந்தமூர்த்திமுதலியார் அவர்கள், யூனியன் பஞ்சாயத்து பிரசிடெண்டு, மாணம்பதி.)

(2) இத்தீர்மானத்தை எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும், சென்னைச் சட்டசபை டெப்டி பிரசிடெண்டு டாக்டர் முத்துலக்ஷிமி அம்மையார் அவர்களுக்கும் அனுப்பும்படி யூனியன் பஞ்சாயத்து பிரசிடெண்டு திரு. இ. சம்பந்தமூர்த்திமுதலியார் அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. (பிரேரேபித்தவர்:—திரு. க. வஜ்ஜிரவேலு முதலியார் அவர்கள். ஆமோதித்தவர்:—திரு. ர. ராஜமாணிக்க முதலியார் அவர்கள்.)

தலைவர் முடிவுரை நிகழ்ந்தபின்னர் திரு. சு. அருணசல முதலியார், பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டு, மாணம்பதி, அவர்களால் வந்தனோபசாரம் செய்யப்பெற்றுக் கூட்டம் முடிவுபெற்றது.

இடையிடையே இன்னிசைக் கருவிகளுடன் தேவாரங்கள் ஓதப்பெற்றன.

## எலப்பாக்கம் மடத்துச் செங்குந்தரின் கண்டனம்.

1927-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 10உ வட ஆர்க்காடு ஜில்லா பின்னபூண்டிக்கடுத்த எலப்பாக்கம் மடம் என்னும் ஊரில் திரு. குமாரசாமி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ்ச் செங்குந்தர்களது பெருங்கூட்டம் ஒன்று கூடிக் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது:—

கோயம்புத்தூர் போலிச் செங்குந்தர் மகாஜன சங்கத்தார், தாங்கள் சிலராக இருந்தும், தங்களிடத்துள்ள இழிதொழிலை மறைத்துக் கொள்ளும்பொருட்டு, பெருந் தொகையினராயுள்ள தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர்களுக் கெல்லாம் அவ்விழி தொழில் உண்டு என்று சட்டசபைஅங்கத்தினர்களுக்கும், மற்றும் பத்திரிகைகளுக்கும் கொடுத்திருக்கும் மனுவை இக்கூட்டம் ஏகமனதாய்ப் பலமாகக் கண்டிக்கின்றது. அச்சங்கத்தார் தங்களிடத்து உள்ளதாகத் தாங்களே சொல்லுகிற கோவிலுக்குப் பெண்களை விடுதல் என்ற தீயவழக்கம் உலகத்திலுள்ள எல்லாச் செங்குந்த குடும்பங்களிலும் பரம்பரையாக இருந்து வருகிறது என்னும் அர்த்தம் படிப்பவர் மனதில் உண்டாகும்படி வாக்கியங்கள் அமைக்கப்பட்டுள்ள ஒரு மனுவைச் சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தேவஸ்தான பரிபாலன சபையார் முதலியவர்களுக்கும் தயாரித்து அனுப்பியுள்ளனர். உண்மைச் செங்குந்தர்களுக்கு



அவை பெரிதும் அவமானத்தையும், அகௌரவத்தையும் உண்டு பண்ணுதலின் அவ்வாக்கியங்களை இந்தக் கூட்டமானது மிகப்பலமாக ஏகமனதாய்க் கண்டிக்கின்றது.

இத்தீர்மானத்தைச் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மூலமாகச் சென்னை சட்டசபை உபதலைவர் ஸ்ரீமதி டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மையார் அவர்களுக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

---

## கொடுங்காலூர் செங்குந்தரின் கண்டனம்.

நிகழும் பிரபவஞு புரட்டாசிமீ 22உ (8-10-27) சனிக்கிழமை மாலை 5-மணிக்கு வட ஆர்க்காடு ஜில்லா வந்தவாசியையடுத்த கொடுங்காலூர் கிராமத்தில் உத்திரன்மேரூர் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் ஆசிரியர் கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் செங்குந்த மகாஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு அவ்வூரிலுள்ள ஜனங்களும், அவர்கள் வேண்டுகோளின்படி மாணம்பதி உத்திரன்மேரூர் முதலிய இடங்களிலுள்ள செங்குந்தகுல அறிஞர்களும் பெருந்திரளாக விஜயம் செய்து இருந்தார்கள். அப்பொழுது ம-ா-ா-ஸ்ரீ தங்கவேலு முதலியார், ம-ா-ா-ஸ்ரீ சு. ஆறுமுக முதலியார் முதலிய பல அறிஞர்கள் செங்குந்தர்களின் பழமையாகிய புகழையும் கௌரவங்களையும், அவர்கள் தற்காலத்தில் உலக நிகழ்ச்சியையறிந்து அதற்கு ஏற்ப அவ்வப்பொழுது தங்களுக்கும் தங்கள் பண்டைய புகழிற்கும் பிறரால் உண்டாகும் கெடுதியைப் போக்கிக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளாமல் இருந்துவிட்ட படியால் தங்களுக்கு வரும் குறைகளையும், இப்பொழுது கோயம்புத்தூர் என்ற ஒரு ஜில்லாவிலிருக்கும் தேவதாசி வகுப்பினர் தங்கள் ஜாதியின் சீர்திருத்தத்தைக் கருதி அரசாங்கத்தாருக்குத் தயாரித்து அனுப்பியுள்ள மனுவில் கண்டிக்கக்கூடியதாய்க் காணப்படுகின்ற பாகங்களையும் பற்றி உபந்யசித்தார்கள். இடையிடையே அக்கிராசனர் அவர்களும் அவ்விஷயங்களை விளக்கிக் காட்டினர். அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாய் நிறைவேறின:—

(1) கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசி வகுப்பினர் தங்களுடைய பிறப்பிற்குரிய இழிவை மறைத்துக்கொள்ள வேண்டிப் பழமை தொட்டுப் புகழும் நல்லொழுக்கமும் பூண்டு நிற்கும் செங்குந்தர்களது பெயரை வைத்துக்கொண்டு தாங்கள்

உண்மைச் செங்குந்தர்களின் பிரதிநிதிகள் என்று பாவித்துப் பேசித் தங்களுக்குத் தாங்களே பெருமை பாராட்டி வந்துள்ளார்கள். அவர்களிடத்து நிகழும் மானக்கேடான இழிதொழிலை விலக்கப் பலவகையில் தாங்களே முயன்று பார்த்தும் அரசாங்கத்தாரின் உதவி தங்களுக்கு ஆவசியகமாக வேண்டும் எனக் கருதினர் போலும். ஆகவே அவர்கள் சென்ற ஆகஸ்டு மாதத்தில் அரசாங்கத்தாருக்கு ஒரு மனுவைத் தயாரித்து அனுப்பியுள்ளார்கள். அதில் அவர்கள் ''கோயிலுக்குப் பெண்களை விடுதல் ஹிந்து மதத்தைச் சார்ந்த சில சமூகங்களுக்கு பொதுவாகவும், அவற்றுள் செங்குந்த சமூகத்திற்குச் சிறப்பாகவும் உண்டு'' என்னும் அர்த்தத்தைத் தரும்படி வாக்கியங்களை அமைத்திருந்தார்கள். அது அவர்கள் சேர்ந்துகொள்ளக் கருதும் எல்லா ஜாதிகளுக்கும் பொதுவாகவும், செங்குந்த சமூகத்திற்குச் சிறப்பாகவும், அகௌரவமும் மானபங்கமும் செய்ததாகின்றது.

அந்த இழிதொழில் எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் செங்குந்தர்களிடத்தில் இருக்கக் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. அது செங்குந்த சமூக பிரபாவங்களை விரித்துக் கூறும் ஒரு நூலிலும் காணப்படவில்லை. பாரம்பரியத்திற்கும் முற்றும் விரோதமாகக் காணப்படுகின்றது. அன்றியும் அவர்கள் ஷை மனுவில் பிறருக்கு வெளிப்படையாக விரைவில் புலப்படாதபடி சொற்களைப் புகுத்தியதைப் பார்க்கின், அவர்களுக்குச் செங்குந்தர் என்னும் பெயர் நீடித்து நிலையுறாது என்றும், இவ்வாறு செய்யின் அவர்கள் சிலகாலத்தின் பிறகு தங்களுக்குப் பரம்பரையாகச் செங்குந்தரென்னும் பெயருண்டு. என்று சாதித்துக் கொள்ளலாம் என்றும் கருதியே செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாகத் தெரிகிறது. இவ்வாறுகலின், மேற்குறித்தபடி உண்மைச் செங்குந்தர்களின் பண்டைப் புகழையும் கௌரவத்தையும் பங்கம் செய்யக்கூடியதாக ஷை மனுவில் காண்கின்ற சொற்றொடர்களை இச்செங்குந்த மகாஜன பொதுக் கூட்டமானது மிகப் பலமாகக் கண்டிக்கின்றது.

(2) இத்தீர்மானத்தை அரசாங்கத்தாருக்கும் பத்திரிகைகளுக்கும் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர் அவர்களின் மூலமாக அனுப்ப இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

---

## அம்மையப்பட்டுச் செங்குந்தரின் கண்டனம்.

1927-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ந்தேதி வட ஆர்க்காடு ஜில்லா வந்தவாசிக் கடுத்த அம்மையப்பட்டு என்னும் [illegible]



திரு. பாலசுந்திர முதலியார் தலைமையின் கீழ்க் கூடிய செங்குந்த மகா ஜனக்கூட்டத்தில் சில அறிஞர்கள் உபந்யாசங்கள் செய்த பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின:—

(1) கோயம்புத்தூர் செங்குந்த மகாஜன சங்கம் எனப் பெயர் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சங்கம் 16-8-27-ல் அச்சங்கத்தைச் சார்ந்தவர்களிடத்தில் உள்ளதாக அவர்களே கூறிக்கொள்ளுகிற மானக்கேடான இழிதொழிலை அரசாங்கத்தாரது உதவியைக்கொண்டே நீக்கவேண்டுமென்று கருதி ஒரு மனுவைச் சட்டசபை அங்கத்தினர் முதலியவர்களுக்கு அனுப்பி உள்ளதாகத் தெரிகிறது. அவர்கள் அவ்வாறு செய்துகொள்வது அவர்களுக்குப் பெரிதும் பயன்தரத் தக்கதேயாம். ஆனால் அம்மனுவில் ''ஹிந்துமத சமூகங்களில் சிலவற்றிற்கு (செங்குந்த சமூகமும் அவற்றில் ஒன்று) பெண்களைக் கோவில்களுக்குபபொட்டுக் கட்டி விடுவது வழக்கம்'' என்றும், ''இத்தீய ஒழுக்கம் தங்கள் ஜாதிக்குச் சிறப்பாக உண்டு'' என்றும் கூறியுள்ளார்கள். அவற்றில் இரண்டாவது கூறியதுதான் தங்களுக்கே என்று இருப்பினும், அவர்கள் தங்களைச் செங்குந்தர்களென்று சொல்லுதலின் செங்குந்தர்களெல்லோருக்கும் அக்கெட்ட வழக்கம் உண்டு என்று கூறியதாகும். ஆதலின் ஷை மனுவிலுள்ள மேற்குறித்த சொற்றொடர்கள், சுய மரியாதையையும், ஆண்மையையும், வீரத்தையும் உடையவர்களின் வழித்தோன்றல்களாய், நல்லொழுக்கமும், நெசவுத் தொழிலும், பக்தியும் உடையவர்களாய், அம்மனுவில் கூறிய இழிதொழிலை ஒருகாலும் மேற்கொண்டிராத தென்னிந்தியாவிலுள்ள பெருந்தொகையினரான செங்குந்தர்களுக்குப் பெரியதொரு மானபங்கத்தையும் அவமானத்தையும் உண்டு பண்ணுகின்றன. ஆதலின், மேற்படி மனுவிலுள்ள மேற்குறித்த சொற்றொடர்களை இப்பெரிய செங்குந்த மகாஜனங்களின் பொதுக்கூட்டமானது ஒருமையுடன் பலமாகக் கண்டிக்கின்றது.

(2) சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் மூலமாக இத்தீர்மானத்தைச் சென்னை சட்டசபை டிப்டி பிரஸிடெண்டு டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மையார் அவர்களுக்கும் மற்றும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

---

## உத்திரன்மேரூர் செங்குந்தரின் கண்டனம்

அக்டோபர்மீ 15உ உத்திரன்மேரூர் செங்குந்தர் குலாபிமான சபையார் ஷை ஊர் சைவசித்தாந்த சபை கட்டடத்தில் மாலை 6 மணிக்குத் திரு. [illegible] முதலியார் அவர்களின் தலைமை

ின் கீழ்க்கூடித தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் போலிச் செங்குந்தரைப் பற்றிய தீர்மானத்தை ஆதரித்துக் கீழ்க் கண்டுள்ள கண்டன தீர்மானத்தை நிறைவேற்றினர்:—

"கோயம்புத்தூர் செங்குந்த மகாஜன சங்கம் என்னும் போலிச் செங்குந்த சங்க காரியதரிசி சென்னை சட்ட சபை அங்கத்தினர்களுக்கு அனுப்பியுள்ள மனுவில் காட்டியுள்ள அவதூறான வாக்கியத்தை இச்சபையானது கடுமையாகக் கண்டிப்பதுடன், இவ்விஷயமாகத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் மூலம் சட்ட சபையாருக்கும் தெரிவித்து மேல் கண்ட மனுவிலுள்ள செங்குந்த குலமக்களுக்கு இழிவினைக் கற்பிக்கும் வாக்கியத்தை வாபீஸ் பெரும் வகை முயற்சிக்கத் தீர்மானிக்கிறது."

"இத்தீர்மானத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் மூலம் சென்னை சட்ட சபைக்கும் தேவஸ்தான பரிபாலன சபைக்கும் தெரிவிக்கும்படி இச்சபை அமைச்சருக்கு அனுமதி கொடுக்கக்கின்றது."

தி. துரைசாமி முதலியார், சபைத் தலைவர்.

---

## சோளிங்கபுரத்துச் செங்குந்தரின் கண்டனம்.

வடதிசை நாட்டின் தலைநகராகிய சோளிங்கபுரத்தில் 16-10-27-ல் கூடியசெங்குந்தர் சங்கத்தில் நிறைவேறிய கண்டன தீர்மானம்:—

"கோவைச் செங்குந்தர் மகாஜன சங்கமென ஒரு போலிப் பெயர்கொண்ட சங்கத்தார் கோயில்களுக்குத் தாசிகளாகத் தங்கள் பெண்களை விடுகிற வழக்கம் பொதுவாய்ச் செங்குந்தர்களுக்குண்டு என்றும், அதை நீக்கிக் கொள்ளவேண்டுமென்றும் தீர்மானம் செய்து, அதை அரசாங்க மூலமாய்த் தடுக்கும் பொருட்டுச் சென்னை சட்டசபை அங்கத்தினர் முதலியவர்களுக்கு மனு செய்துகொண்டிருக்கின்றார்கள் எனத் தெரிகிறது. அவர்களுக்குளிருக்கிற அக்கெட்ட ஒழுக்கத்தை அவர்கள் தொலைக்க முயல்வது நியாயமேயாயினும், எல்லாச் செங்குந்தருக்கும் அவ்வழக்கம் உண்டென்று சொல்லி, அவ்வழக்கம் எக்காலத்திலும் இல்லாதவர்களாகிய உண்மைச் செங்குந்தர்களுக்கு அவமானத்தையும் அவமதிப்பையும் உண்டுபண்ணுவதைப் பற்றி மிகவும் ஆத்திரத்துடன் பலமாய் இக்கூட்டமானது கண்டிக்கிறது".

---

## குருவராஜப்பேட்டை செங்குந்தரின் கண்டனம்.

குருவராஜப்பேட்டையில் 15-10-27வயன்று கூடிய செங்குந்தர் சங்கத்தில் நிறைவேறிய கண்டன தீர்மானம்:—



கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசியர் மரபைச் சார்ந்த சிலர் யாதொரு ஆகாரமுமின்றித் தங்களைச் செங்குந்தரெனச் சொல்லிக்கொண்டு செங்குந்தர் மகாஜன சங்கமென ஒரு சங்கம் நிறுவி, அச்சங்கம் எல்லாச் செங்குந்தர்களது சீர்திருத்தத்திற்கு ஆகவும் நன்மைக்காகவும்உழைப்பதாகச் சொல்லுவதன்றி, செங்குந்த மரபினர் பரம்பரையாய்த் தங்கள் பெண்களைக் கோயில்களுக்குத் தாசிகளாக விடுவது வழக்கமென்றும் அத்தீய ஒழுக்கத்தை அரசாங்க சட்ட மூலமாய்ஒழிக்கவேண்டுமெனவும் தீர்மானஞ்செய்து சென்னை சட்டசபையின் டெபுடி பிரஸிடெண்டாகிய டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மையாரை அச்சட்டசபையில் ஒரு தீர்மானங்கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டு ஷை சபையின் அங்கத்தினர் முதலியவர்களுக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவ்வாறு கோவை சங்கத்தார் தங்களைச் சீர்திருத்திக்கொள்ள முயல்வதில் உண்மைச் செங்குந்தர்களாகிய நமக்கு யாதொரு ஆக்ஷேபணையும் இல்லையாயினும், அவர்கள் அனுப்பியுள்ள மனுவில், யாவரும் இகழக் கூடியதும் வெட்ககரமானதுமாகிய அத்தீய ஒழுக்கம் பொதுவாய்ச் செங்குந்தர்களுக்கு உண்டெனப் பொருள் தந்து, அப்படிப்பட்டஒழுக்கம்இல்லாதவர்களாகிய உண்மைச் செங்குந்தர்களது பழமையான புகழுக்கும் கௌரவத்திற்கும் பங்கம் உண்டாக்கக் கூடிய சில சொற்றொடர்களைக் குறித்து இக்கூட்டமானது மிகவும் பலமாய்க் கண்டித்து, இதன் காபியைச் சட்டசபை அங்கத்தினருக்கு அனுப்பத் தீர்மானிக்கிறது.

---

## மதுரைச் செங்குந்த முதலியார் மகாஜன சங்கத்தின் கண்டனம்.

நிகழும் பிரபவ ஆண்டு ஐப்பசித் திங்கள் (19-10-27) அன்று ஷை சங்க மண்டபத்தில் இரவு 8-மணிக்குக் கூட்டம் நடைபெற்றது அதுசமயம் உயர் திருவாளர் N. K. நாகப்ப முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகித்தனர். அப்பொழுது காஞ்சிபுரத்தைச் சார்ந்த ஐயங்கார்குளம் வித்வான் புராணிகர் அ. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் செங்குந்தரது பழைய வழக்க ஒழுக்கங்களைப் பற்றி உபந்யசித்தார். பின்னர் தலைவர் கீழ்க் கண்ட தீர்மானத்தைபிரேரேபித்தனர்:—

"செங்குந்தசமூகத்தினர் பூர்வீகத்தில் சோழநாட்டில் குறுநிலமன்னர்களாயும், படைத் தலைவர்களாயும், தமிழ்ப் பெரும் புலவர்களாகவும் சிறந்து வாழ்ந்து வந்ததோடு, பாவமற்ற நெய்தற்றொழிலைக் கைக்கொண்டவர்களென நம் சமூகநூல்களில் காணப்படுகிறதே யன்றி, இத்தீய தொழிலாகிய தாசித்தொழில் இச்சமூகத்தினர்களுக்கு உண்டென்பது ஓரிடத்திலும்

நம் மரபினர்களின் சரித்திர சாஸ்திரங்களில் சொல்லப் படவேயில்லை ஆகையால், போலிச் செங்குந்தரான கோயம் புத்தூர் தேவதாசி வகுப்பினர்கள் செங்குந்த சமூகத்தினர் என்று சொல்லிக் கொள்ள உரிமையற்றவர்களெனவும், செங் குந்தருக்கு இத்தீய இழிவான செய்கை உண்டென்று சொல் லும் உண்மைச் செங்குந்தர்கள் கௌரவத்திற்கும், புனிதமான தொழிலுக்கும், சீலமான ஒழுக்கத்திற்கும் பொருந்தாத வாய் மொழியான கட்டுரையை இச்சங்கம் பலமாகக் கண்டிக்கிறது.''

இத்தீர்மானத்தைத் திருவாளர் K. பழனிசாமிமுதலியார் அவர்களும், K. ஆறுமுக முதலியார் அவர்களும் ஆதரித்துப் பேசினார்கள். அக்கூட்டத்தில் கூடியிருந்த எல்லோராலும் தீர்மா னம் ஏகமனதுடன் நிறைவேறியது. இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

N. K. நாகப்ப முதலியார்,
திருவாப்புடையார் கோவில், மதுரை.

குறிப்பு:—பிரசங்கத்தின் சாராம்சம் அடுத்த பத்திரிகையில் வெளி யிடப்பெறும்.

## சைதாப்பேட்டை செங்குந்த சங்கத்தின் கண்டனம்.

நிகழும் பிரபவஞு ஐப்பசிமீ ௮உ (24-10-27) திங்கட் கிழமை மாலை 4-மணிக்குச் சைதாப்பேட்டை எஸ். எஸ். எம். இந்து எலிமிண்டரி பாடசாலையில் சங்கத்தின் நிருவாகசபையின் விசேஷ கூட்டம் சங்கத்துத் தலைவரும், முனிசிபல் கவுன்சிலரும் திருவாளர் S. சடையப்ப முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிக் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது:—

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள தேவதாசி வகுப்பினர் தங்களுடைய பிறப்பிற்குரிய இழிவை மறைத்துக் கொள்ளக் கருதி பழைமை தொட்டுப் புகழும் நல்லொழுக்கமும் பூண்டு நிற்கும் செங்குந்தர்களது பெயரை வைத்துக்கொண்டு தாங்கள் உண்மைச் செங்குந்தர்களின் பிரதிநிதிகள் என்று பாவித்துப் பேசி, அவர்களிடத்து நிகழும் மானக்கேடான இழி தொழிலை விலக்கப் பலவகையில் தாங்களே முயன்று பார்த்தும் முடியாமல் அரசாங்கத்தாரின் உதவி தங்களுக்கு ஆவசியமாக வேண்டுமெனக் கருதினர் போலும். ஆகவே, அவர்கள் சென்ற ஆகஸ்டு மாதம் சென்னை சட்டசபையினர்க்கும் தேவஸ் தான பரிபாலன சபையினருக்கும், ஒரு மனுவைத் தயா ரித்து அனுப்பியுள்ளார்கள். அதில் அவர்கள் கோவிலுக்குப் பெண்களை விடுதல் இந்து மதத்தைச் சார்ந்த சில சமூகங்களுக் குப் பொதுவாகவும், அவற்றுள் செங்குந்த சமூகத்திற்குச் சிறப்பாகவும் உண்டு என்னும் பொருள்பட வாக்கியங்களை



அமைத்து இருக்கிறார்கள் அந்த இழிதொழில் செங்குந்த சமூக பிரபாவங்களை விரித்துக் கூறும் ஒரு நூலினும் காணப்படவில்லை. பாரம்பரியத்திற்கு முற்றும் விரோதமாகக் காணப்படுகின்றது. ஆதலினால் மேற்படி மனுவில் கண்ட மேற்குறித்த குற்றம் பொருந் திய பாகங்களை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கின்றது. அப் படிப்பட்ட வழக்க ஒழுக்கமுடையவர்கள் போலிச் செங்குந்தர் களே ஒழிய செங்குந்தர்கள் அல்லர் என்பதை வலியுறுத்து கின்றது.

24-10—27, S. முருகேச முதலியார். பி.ஏ., எல்.டி.
காரியதரிசி.,

## இலங்கைக் காரைவச் செங்குந்தரின் கண்டனம்.

நாளது பிரபவஞு ஐப்பசிமீ 19-ந்தேதி சாயங்காலம் 7-மணிக்கு ஓர் விசேடகூட்டம் "கோயம்புத்தூர் ஜில்லா —போலிச் செங்குந்தர்கள்" என்னும் விஷயத்தைப்பற்றி ஆலோ சிப்பதற்காகக் கூட்டப்பட்டது.

செங்குந்தமித்திரன் புரட்டாசிமீ அநுபந்தத்திற் தங்க ளாற் பிரசுரிக்கப்பட்ட விஷயம் வாசித்துச் சபையாருக்கு விளக் கப்பட்டது.

பின்னர் ஸ்ரீமான் T. V. கந்தையா முதலியார் (Station Master) அவர்கள், "ஓர் ஆதாரமுமில்லாதபடியால் கோயம்புத் தூர் தேவதாசி வகுப்பினரைச் செங்குந்தர்களாகிய நாம் நம்மர பினராகச் சேர்த்துக்கொள்ளக் கூடாது" எனப் பிரேரிக்க ஸ்ரீமான் S. S. கார்த்திகேசு முதலியார்—A. N. வேலுப்பிள்ளை முதலியார் (சுதேச வைத்தியர்) அவர்களும் அனுவதிக்க இந்நிர் ணயம் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

சபையோர் சம்மதப்படி, க. சிற்றம்பல முதலியார்.
அக்கிராசனர், காவைச் செங்குந்த குலசங்கம்.

## செங்குந்த சமூகமும் 'திராவிடன்' பத்திராதிபரும்

திராவிடன் பத்திராதிபர், தமது பத்திரிகையில் 7-10-27ம் தேதி 'செங்குந்த சமூகம்' என்னுந் தலைப்பில் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். அதில் அவர் சென்னை தென்னிந்திய செங்குந்த

மகாஜன சங்கத்தின் உண்மை நோக்கங்களைச் செவ்வனே உணராமல் பல கூறியுள்ளார்.

சென்னைச் சங்கம் சொல்வதாவது கோயமுத்தூர் ஜில்லாவில் செங்குந்தர் என்று சொல்லிக் கொள்ளுகிற ஒரு சிலர்களாகிய கோவைச் சங்கத்தார், தங்களிடத்து உள்ளதாய்க் காண்கின்ற தீய ஒழுக்கம், தாங்கள் அரசாங்கத்தாருக்குத் தயாரித்து அனுப்பிய மனுவில் "செங்குந்த சமூகம் முழுதிலும், பரம்பரையாக, விசேஷ நிலையில் உண்டு" எனப் படிப்போர் நினைக்கும்படி சொற்றொடர்களை அமைத்தது, பெருந் தொகையினராகிய உண்மைச் செங்குந்தர்களது கௌரவத்திற்கும் பண்டைய புகழிற்கும் பெரியதொரு பங்கம் செய்ததாக ஆகிறது என்பதும், அவர்கள் கூறுகிறபடி அந்த ஒழுக்கத்தை மேற் கொண்டுள்ள சாதி 'தேவதாசி' என்னும் பெயரானேயே வழங்கப்படும் என்பதுமே ஆகும். இவற்றை யெல்லாம் சாவதானமாக உற்று நோக்கப் பொறுமையும் நடு நிலைமையும் இல்லாமல் ஒருவர்மேற் குற்றங் கூறப் புகுதல், ஜனங்களது பொதுநன்மைக்கும், உண்மையுணர்ச்சிக்கும் சீர்திருத்தத்திற்கும் காரணமாயிருக்கும் பொறுப்பை வகிக்கும் பத்திராதிபர்களுக்கு அழகல்ல.

அன்றியும், அவர், பெண்களைப் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுவது கோயமுத்தூர் செங்குந்தர்களிடத்து இருப்பதாகக் காணப்படுகிறது. அது மற்றும் சில வகுப்பாரிலும் இருக்கக் காண்கின்றோம்; அவைகள் பிராமணர்களினுடைய சூழ்ச்சியால் நிகழ்ந்தன ; அவ்வாறு யாரும் ஏமாந்து போவது சகஜம் அவ்வாறு அவர்கள்' இக்கஷ்டமான காரியத்திற்கும் சம்மதித் திருத்தல் அளவிறந்த தெய்வ பக்தியால் என அறிவுடையாரால் கண்டித்து ஒதுக்கக் கூடிய பலவற்றைக் கூறியுள்ளார். அன்றியும், கோயமுத்தூர் சங்கத்தார் கூறியது போலவே இவரும், நமது நாட்டு மூடவழக்கம் குருட்டு நம்பிக்கை ஆகிய இக்கொடுமைகளுக்கு நமது செங்குந்த மரபு பெண்கள் ஈடுபட்டார்கள் எனவும் கூறியுள்ளார். இவர், பார்ப்பனரை இழித்துக் கூறுதற்கு ஒரு சந்தர்ப்பம் தேடிக்கொண்டாரே ஒழிய, உண்மையை நோக்க வில்லை என்பது இதனால் தெளிவாகிறது.

இப்பத்திராதிபரே, தாம் இந்தியாவில் பிறந்து வளர்ந்தும், பன்னாள் அநுபவத்தின் பயனாக இந்தியாவிலுள்ள கற்பரசிகளாகிய பெண்களை மாத்திரம் அன்றி இந்திய ஆடவர்களைப் பற்றியும் இவ்வளவு இழித்துப் பிரசுரிக்க முற்படுவாரேயானால், மிஸ் மேயோ என்ற அன்னியதேசத்தவள் சின்னாட் பழக்கங் காரணமாக இந்தியாவிலுள்ள பெண்களை மாத்திரம் இழித்து எழு



திப் போந்தவைக் குறித்து ஆச்சரியப் படுதற்குக் காரணமில்லை. இவ்வாறு பிரசுரித்தலை அவர் 'முற்போக்கு' என்று கருதினர் போலும். 'விச்சை நூல் பல கற்பினுஞ் சிவனருள் விரவாக் கொச்சையோர்தமை விடுவதோ கொடுமலச் செருக்கு?'

அன்றியும் அவர், 'கோவைச் சங்கம் 20 வருஷத்திற்கு மேல் ஏற்பட்டிருக்கிறது' என்று கூறுகிறார். அச்சங்கம் ஆரம்பித்து இன்னும் பதினைந் தாவது வருஷங் கூடப் பூர்த்தியாகவில்லை. அல்லாமலும் கோவைச் சங்கத்தார் மனுவின்படி, கோவைச் சங்கத்தார் 'பிரசாரம், வசப்படுத்துதல், சமுதாய விலக்கு முதலிய' பல்லாற்றானும் தங்களிடத்திலுள்ள தீய ஒழுக்கத்தை நீக்கமுயன்றும் முடியாமல் அரசாங்கத்தார் உதவியை நாடும்போது, அவர்கள் 'அக்குற்றங்களை 100-க்கு 75 பாகம் திருத்தி வந்திருக்கிறார்கள்' என்கிறார். இவையெல்லாம் யாரோ ஒருவருடைய தாக்ஷண்யத்திற்கும் வேண்டுகோளிற்கும் இரங்கிப் பார பக்ஷமாய் நிற்பார் கூற்றேயாதல் வேண்டும். உண்மையையும் நடுநிலைமையையும் தழுவிச் சொன்ன கூற்றாகாது.

ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பார்ப்பனர்களால் பிறர்மேல் சுமத்தப் பெற்று வந்த இழிவுகளை இப்பொழுது அறிந்து அவற்றினின்றும் நீங்க முயற்சித்துவரும் இந்நாகரிக காலத்தில், 15 வருஷங்களாக உண்மைச் செங்குந்தர்கள் மீது கோவைச் சங்கத்தார் மறைவிற் கூறிவந்த இழிவுகளைத் தென்னிந்திய மகாஜன சங்கத்தார் அறிந்து நீக்கப்புகின், அவர்களை 'ஆயிரம் வருஷந் தூங்கிய அரசர் கதைபோல் காணப்படுகின்றனர்' என்று சொல்லல் சால்புடைத்தன்று.

இங்ஙனம் :

பிள்ளையார் பாளையம்: க. வச்சிரவேலு முதலியார்.

---

## போலிச் செங்குந்தர்களைப்பற்றி உண்மைச் செங்குந்தர்கள் எழுதியுள்ள கடிதங்கள் சில.

1

'செங்குந்தமித்திர'ன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு.

அன்புடையீர்,

'செங்குந்தமித்திரன்' அநுபந்தத்தில் கண்டவைகளை நான் மனப்பூர்வமாய் ஆதரிக்கின்கின்றேன். பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டென்பதை நான் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆனால் ஒழுக்கத்தால் உயர்வு தாழ்வு உண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. எனது நண்பர் ஒருவர் தங்கள் அநு

பந்தத்தைப் பார்வையிட்டபின் என்னை நோக்கி, "அவர்கள் செங்குந்தர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டதனால் உங்களுக்கு எப்படி இழிவாகும்? நாவிதர்களில் சிலர் 'நாயுடு' என்றும், 'முதலியார்' என்றும் வைத்துக்கொள்ளுகின்றார்களே; கிறிஸ்தவர்களில் சிலர் 'அய்யர்' என்று தங்களை அழைத்துக்கொள்ளுகின்றார்களே; அதனால், நாயுடு, அய்யர், முதலியார் ஆகிய ஜாதியார் வருத்தப்பட்டுப் பயன் என்ன?" என்றார். நான் அதற்கு, "உண்மையில் தொழிலில் இழிவில்லை: நாவிதத் தொழிலாயிருந்தாலும் சரி, பாதரக்ஷைதைக்கும் தொழிலாயிருந்தாலும் சரியே. ஆனால் காசுக்காகத் தங்கள் கற்பை விற்பது இழிவல்லவா? அம்மாதிரி ஒழுக்கமுடைய ஓர் ஜாதியார், உயரிய ஒழுக்கத்தைக் கைக்கொண்ட ஒரு ஜாதியாரின்பெயரைப் புனைந்துகொண்டு, செங்குந்தர்களுக்குள் இத்தகைய தீய ஒழுக்கம் இருக்கின்றதெனச் சொல்வதையே நாங்கள் எதிர்க்கின்றோம்" என்றேன்.

எங்கள் ஊரில் உள்ள உண்மைச் செங்குந்தர்கள் இப்போலிச் செங்குந்தர்களைக் கலியாணம் முதலிய விசேஷங்களுக்கு மேளம் வாசிக்கவும் நாட்டியம் ஆடவும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோமே யன்றி, வேறு அவர்களிடத்தில் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்வது கிடையாது. இந்த (கோயம்புத்தூர்) ஜில்லாவில் உள்ள ஜனங்கள் இப்போலிச் செங்குந்தர்களை 'மேளகாரர்' என்றும், 'நட்டுவர்கள்' என்றும், 'தேவரடியார்' ஜாதியினர் என்றும் பொதுவில் அழைக்கின்றனரேயன்றிச் 'செங்குந்த'ரென்றாவது, 'கைக்கோள'ரென்றாவது அழைப்பது கிடையாது.

இவ்விஷயமாக எங்கள் ஊரில் ஒரு கூட்டம் கூடிப் போலிச் செங்குந்தர்கள் நடத்தையைக் கண்டிக்க ஏற்பாடு நடந்து வருகின்றது.

இப்படிக்குத் தங்களன்புள்ள,

16-10-27. S. மீனாக்ஷி சுந்தர முதலியார், பி.ஏ.,.எல்.டி.,
ஈரோட்டு, கோயம்புத்தூர் ஜில்லா.

2

'சேங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,
அன்பின் மிக்க ஐயன்மீர்,

இம் மாதம் வெளிவந்துள்ள நம் செங்குந்த மித்திரனில் "உண்மைச் செங்குந்தரும் போலிச் செங்குந்தரும்" என்று தலையங்கமிட்டிருப்பதைக் கண்ணுற்ற நம் செங்குந்தகுல மக்களுக்குப் பெரும் உணர்ச்சி யுண்டாகித் தூங்கி விழித்ததைப்போல் விழித்துக் கொண்டு, விடாமுயற்சியுடன் ஈரோட்டில் தங்கள்



தலைமையின் கீழ் ஒரு மகாநாடு நடத்த வேண்டுமென்று உறுதிகொண்டிருக்கிறார்கள். ஷை மகா நாடும் இனிது நடந்தேறுமாறு முருகக் கடவுள் துணை புரிவாராக. சென்ற சில வருஷங்களுக்கு முன், போலிச் செங்குந்தர் கிளர்ச்சி யொன்று ஏற்பட்டு அவர்களுக்கு'நட்டுவனார்'என்றும் நமக்குச் 'செங்குந்தர்'என்றும் ஈரோடு தாலுக்கா ஊத்துக்குளியைச் சேர்ந்த செங்கப் பள்ளி யென்னும் ஊரில் கூடிய பஞ்சாயத்து மகா நாட்டில் சில பட்டக்காரர்களால் தீர்மான மாயிருக்கிறது.

8-10-27. R. V. கருப்பண்ண முதலியார், ஈரோட்டு.

3

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சரவர்களுக்கு.

ஐயா! தாங்கள் தங்கள் சங்கத்தின் சார்பாக வெளியிட்ட போலிச் செங்குந்தர் வியாசத்தின்மறுப்பாகத்'திராவிடன்,''தமிழ்நாடு,' சுதேசமித்திரன்'முதலிய பத்திரிகைகளில்வெவ்வேறு வியாசங்கள் காணப்படுகின்றன. அதுபற்றிக் கவனிக்க வேண்டுகிறேன். பெண்களைப் பொட்டுக்கட்டி விடும் வழக்கத்தோடு மேளம் (டவுல் நாககுரம்) வாசிக்கும் தொழிலையும் கோவையில் உள்ள சங்கத்தவர் கொண்டுளார். பல ஜனங்கள் அவர்களை 'மேளக்கார முதலியா'ரென்றும் கூறுகின்றனர். ஈட்டி எழுபது முதலியவற்றில் இவ்விரு தொழிலும் செங்குந்தர்கட்குள என்று எங்கும் குறிப்பிடவில்லை என்பவை கவனிக்கத் தக்கன.

சேலம்: } சிவஸ்வாமி தேசிகர்,
16-10-27. } குருஸ்வாமிகள், பிள்ளையார் பாளையம்.

4

'சேங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,
கனந்தங்கிய ஐயா!

21-9-27-ல் நமது சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் போலிச் செங்குந்தர்களைப் பற்றிச் செய்த தீர்மானத்துக்கு 7-10-27யில் 'திராவிடன்' பத்திரிகையின் நனந்தலைக் காக்ஷியின் ஓர் பகுதியில் ஷை பத்திரிகையின் அபிப்பிராயம் எழுதப்பட்டிருக்கிறது. அது அநாவசியமானதும் ஆராய்ச்சி இல்லாததுமான ஒருதலைப்பக்ஷ அபிப்பிராயமாகும். அதைப்பற்றி நாம் கண்டனம் எழுதவேண்டியது முக்கியம். ஆனால், ஒருவருக்கொருவர் கண்டனங்களை வளர்த்தி எழுத அந்நிய பத்திரிகைகள் இடந்தரா ஆனதால், நேரே நமது சங்கத்திலிருந்து ஷை 'திராவிடன்' ஆசிரியருக்கு நோட்டீஸ் எழுதி மன்னிபபுக் கேட்கும்படி செய்ய வேண்டும். இல்லையேல் வெகு கண்டிப்பான கண்டனம் எழுதித்

தவறாமல் பல பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படி செய்ய வேண்டும். இது தவிர 12-10-27 சுதேசமித்திரனில் கோவை சங்கத்தின் காரியதரிசி ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். அன்னாருக்கும் தக்க பதில் எழுதிக் கண்டிக்க வேண்டியதும் நமது சங்கத்தின் முக்கிய கடமையாகும். நாமும் அவர்களும் புராண ஆதாரங்களையோ வேறு எந்த ஆதாரங்களையோ ஒரு புறம் ஒதுக்கி வைத்து, பிறப்பின் தன்மையை மாத்திரம் எடுத்துக் கொண்டு, 'பிதா இன்னாரென்று தெரியாத ஒரு சேய்க்கு எப்படி ஜாதியைக் கண்டு பிடிப்பது? அந்தணர் முதல் மற்ற கீழ் ஜாதியார் ஈறாக சம்பந்தப்பட்டுப் பிறக்கும் ஒரு சேய் யாரைத் தகப்பன் என்று கொள்ளுவது? அல்லது தாய் வழியில் ஜாதி கண்டு பிடிப்பதா?' என்ற ஓரே கேள்வியைக் கிளப்பிப் போலிகளைத் தலையிரக்கச் செய்ய வேண்டும். கபிலர் தான் பிராம்மணவர்ணமென்றும் பிதாவின் வழி சந்ததி என்றும் சொல்லியிருக்கிறார். இப்பொழுதும் 27-9-27ல் மகாத்மா காந்தியை வர்ணாச்சிரம தர்மத்தைப் பற்றி ஸ்ரீமான் ஷண்முகஞ் செட்டியார் பேட்டிகண்டு பேசிய காலத்தில், 'கலப்பு விவாகத்தின் காரணமாகப் பிறந்தவனின் வர்ணம் யாது?' என்ற கேள்விக்கு 'அவனுடைய தந்தையின் வர்ணம்' என்று பதிலளித்திருக்கிறார். ஆகவே தாய்வழி சொல்லமுடியாது. ஆனால், இன்னும் அநேகர் கோர்ட்டு முதலிய நடவடிக்கைகளில் தாசி இன்னாரின் மகன் என்று வழங்கக் காண்கிறோம். அதுவும் நியாயமே. சம்பந்தமில்லாத தாசிவகுப்பார் ஒரு வகுப்பில் வந்து ஒட்டிக் கொள்ள நினைப்பது மிகவும் வெட்கக்கேடு. உடனே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

17-10-27. தி. மு. அரு. அருணாசல முதலியார்

மஞ்சட்கொல்லை.

5

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சரவர்களுக்கு.

மெய்யன்புடையீர் ?

மித்திரன் அநுபந்தமும் அதினுள் பொலிந்து கிடக்கும் போலிச் செங்குந்தர்களின் செய்கையையும் கண்ணுற்றோம். உண்மையான உபசுப்பிரமணியர் மரபில் உதித்த உத்தமர்களுக்கு இழிவைத் தேட முயற்சிக்கும் வகுப்பினர் எவரேயாயினும் அவர்களைத் தக்க முறையில் கண்டிப்பது தலைச்சங்கத்தின் கடனன்றோ? அதை ஆமோதிப்பது அன்புள்ள செங்குந்தர்களின் கடமையாதலால், தலைச்சங்கத்தின் விசேஷ நிருவாகசபைக் கூட்டத்தின் தீர்



மானங்களை ஆமோதிக்கின்றோம். தீபாவளி பண்டிகை கழித்துக் கூட்டம் ஒன்றைக் கூட்டித் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புகிறோம்.

இங்ஙனம் தங்கள் மெய்படிமை,

17-10-27. சி. தி. தாண்டவராய முதலியார்,

திருமருகல் சங்கக் காரியதரிசி.

---

## கோயம்புத்தூர் சங்கத்துக் காரியதரிசியின் கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ பத்திராதிபர் அவர்கள்,

செங்குந்த மித்திரன் சென்னை.

அன்பார்ந்த ஐயா,

தங்கள் செப்டம்பர் மாதத்திய சஞ்சிகையில் வெளியாயுள்ள 'போலிச் செங்குந்தர்கள்' என்ற தலைப்பில்காணும்விஷயங்களுக்குக் கோவைச் சங்கத்தின் சார்பாய் இத்துடன் அனுப்பியுள்ள பதிலைத் தயவு கூர்ந்து தங்கள் சஞ்சிகையில் பதிப்பிக்க வேண்டுகிறேன்.

கோயம்புத்தூர் செங்குந்த மகாஜன சங்கம், 12—10—27.

இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள, என். பழனியப்ப முதலியார், காரியதரிசி.

தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்தின் கூட்டுக் காரியதரிசிகள் கோயமுத்தூர் ஜில்லா செங்குந்தர் மஹாஜன சங்கத்தை அநியாயமுறையில் தாக்கிச் 'செங்குந்தமித்திரன்' என்னும் சஞ்சிகையின் செப்டம்பர் மாதப் பகுதியில் பிரசுரம் செய்ததுமல்லாமல், மற்ற சென்னைத் தினசரிப் பத்திரிகைகளிலும் பெருவாரியாக விளம்பரப்படுத்தி எழுதியிருப்பதை ஆச்சரியத்துடனும் வருத்தத்துடனும் படிக்கலானேன். "செங்குந்தர்" என்னும் பெயரைக் கோயமுத்தூர் சங்கத்தார் ஆதாரமின்றி வைத்துக்கொண்டிருப்பதாய் அவர்கள் கண்டிக்கிறார்கள். செங்குந்த மஹாஜன சங்கம் என்ற பெயரால் ஒருசங்கம் ஏற்படுத்திக் கொண்டு தாங்களும் செங்குந்தர் என்பதாய்க் கோவைச் சங்கத்தார் ஆக்கிரமித்துத் தங்களுக்கு ஒரு கௌரவத்தைத் தேடிக் கொண்டதுபோல் படிப்பவர் மனதில் படும்படி அக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கோவைச் சங்கத்தைச் சார்ந்த எங்களுக்குச் செங்குந்தர் என்ற பெயரானது பாரம்பரியமாயும், சரித்திர பூர்வமாயும், பழக்க வழக்கத்திலும் உரியது என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. எங்கள் மரபினருக்குரிய நெடிய காலத்ததும், உண்மைத்தத்துவம் உள்ளதும், சாதாரண உலக விவகார வகையில் எழுதப்பட்டதுமான ஆஸ்தியைப்பற்றிய தஸ்தாவேஜுகளே இதற்குத் தக்க சான்றாகும்.

அக்கட்டுரையில் அதிக குற்றமுள்ள வாக்கியங்கள் "..............தேவதாசிகளின் சந்ததியார்..............." என்பவைகளே. இவ்விஷயமாய் நான் சொல்ல விரும்புவதெல்லாம் அக்காரியதரிசிகளுக்கே அவர்கள் பேசும் விஷயம் தெரியாதது என்பது மட்டுமேயாம்.

கோவைச் சங்கமானது சென்ற 15 வருடங்களாய் இந்த ஜில்லாவிற்குள் தற்போது நிலைகுலைந்திருக்கும் தேவதாசிகள் என்னும் ஸ்தாபனத்தை ஒழிக்க ஊக்கத்துடனும், வெளிப்படையாயும், வேலைசெய்து கொண்டிருப்பது யாவரும் நன்கறிந்த விஷயம். இச்சங்கம் செய்துள்ள வேலையும் இதன் மதிப்பும் இந்த ஜில்லாவிலும் வெளியிலும் உள்ள அறிவாளிகளான பொது மக்கள் யாவரும் அறிவர். உதாரணமாகக் கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களில் மதிப்பு வாய்ந்த விவசாய ஜாதியினரான கொங்கு வேளாள சங்கம், கோயமுத்தூரில் கூடிய தென்னிந்திய சமூக ஊழிய மஹாநாடு போன்றவைகள் எங்கள் சங்கத்தை ஆதரித்துக் தீர்மானங்கள் செய்திருப்பதானது, வகுப்புகளுக்குள் சிநேக பான்மையை உண்டுபண்ணுவதற்கு ஒரு தக்க வழியாகும். ஆனால், அதைவிட்டுத் தென்னிந்திய செங்குந்த சங்கத்தின் காரியஸ்தர்கள் பொதுஜன மதிப்பில் எங்களைத் தாழ்மையாய் எண்ணும்படி எழுதத் துணிந்தது அவர்களின் பிற்போக்கான மனப்பான்மையேயாகும்.

ஒரு வகுப்பானது பெரியதாயினும் சரி, சிறியதாயினும் சரி, அதனுடன் கலந்துகொள்ளக் கோவைச்சங்கம் எக்காலத்திலும் பிரயத்தனப்பட்டதில்லை. பரந்த நோக்கமுள்ள உயர்ந்த நாகரீகம் பொலிந்து விளங்கும் இந்த சுயநிர்ணய சுயமரியாதை காலத்தில் தனது பிறப்பிற்குள்ள குறையை மறைக்கப் பிறிதொரு மரபில் கலந்துகொள்ள முயலுவது எந்த அளவிலும் அவசியமாய்த் தோன்றவில்லை. பசுத்தோல் போர்த்த புலிபோல் நடக்க ஒருகாலும் எங்கள் சங்கம் முற்படவில்லையென்பது எவரும் அறிந்த உண்மை. கூட்டுக் காரியதரிசிகள் சொல்லியபடி கோவைச் சங்கத்தார் மற்றொரு மரபினருடன் உறவாடவோ தங்களை மறைத்து உயர்த்திக்கொள்ளவோ விரும்பியிருந்தால், தங்கள் குறையை வெளிப்படையாய் ஒருபொழுதும் சொல்லிக்கொள்ள முன்வந்திருக்கமாட்டார்கள். ஆனால் தற்காலத்தில் காணும் சில சமய சஞ்சீவிகள்போலக் காலத்திற்கேற்ற கோலம் பூண்டு காரியத்தை நடத்திக்கொண்டு போகப் பிரயத்தனப்பட்டிருப்பார்கள். "தென்னிந்தியாவிலுள்ள ஜாதிகளும் கூட்டங்களும்" என்று தார்ஸ்டன் துரை எழுதியுள்ள புஸ்தகத்தை மேற்கோளாய்க் கூறுவதுபோலக் கூட்டுக்காரியதரிசி



கள் தப்பு வியாக்கியானம் செய்து எழுதியிராத வரையில் நமக்கு இவ்வளவு தூரம் இதைப்பற்றி வளர்த்திக்கூற அவசியம் நேர்ந்திராது. கோவைச் சங்கத்தார் மனுவிற்குறிப்பிட்டிருக்கிற குறையானது உண்மைச் செங்குந்தர்களுக்கு ஒருபொழுதும் இருந்ததில்லை யென்று கூட்டுக்காரியதரிசிகள் வாதிக்கிறார்கள். (எங்கள் மனுவில் கண்ட விஷயங்கள் அனைத்தும் நேற்று இன்று நடந்தவைகள் அல்ல; சங்கத்தின் 15 வருட நடவடிக்கைகளை அவை பொருத்தனவாகும்). செங்குந்தர் அல்லது கைக்கோளர் மரபில் பெண்களைக் கோயில்களுக்குத் தேவார்ப்பணம் செய்தல் என்ற வழக்கம் இருப்பதாய் இதே தார்ஸ்டன் துரையவர்களும் அவர்போன்ற ஆராய்ச்சிக்காரரும் சொல்லுவது ஒருபுறமிருக்க, சென்னைச் சங்கத்துச் செங்குந்தர்களுக்கு இந்தத் துன்பம்இல்லையென்பதை அறியக் கோயமுத்தூர்சங்கத்தாரைக் காட்டிலும் அதிக சந்தோஷப்படக் கூடியவர்கள் வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

கோயமுத்தூர் ஜில்லாவில் கைக்கோள மரபினர் எல்லோருக்கும் தாசித்தொழில் சகஜமாய் உண்டென்று நாம் ஒருபோதும் சொன்னதில்லை. தென்னிந்தியா முழுதும் வியாபகமாயுள்ள ஒரு பொருப்புள்ள சென்னைச் சங்கத்தார் கோவைச் சங்கத்தாரைத் "தங்களைச் சீர்திருத்திக்கொள்ள விரும்பும் தேவதாசி வகுப்பினர் - போலிச் செங்குந்தர்" என்று சொல்லி ஜாதிச்சண்டைகளைக் கிளப்பி நம்மை அடியுடன் புறக்கணிக்க முன் வந்துள்ள சூழ்ச்சி உத்தேசம் என்ன என்பது உற்றுநோக்கும் எவருக்கும் புரியாமற் போகாது.

கோவைச் சங்கமும் சென்னைச் சங்கமும் ஒன்றுபட்டன என்று பொது ஜனங்கள் மயங்கிவிடாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணம் சென்னைச் சங்கத்துக்கு இருந்திருந்தால் கோவைச் சங்கத்தார் குறிப்பிடும் ஒரு குறை தங்களுக்கு இல்லை யென்றும், இவ்விரண்டும் வேறுவேறு சங்கங்கள் என்றும் பொது ஜனங்களுக்குத் தெரிவித்து, விஷயத்தை அம்மட்டோடு நிறுத்திக்கொண்டிருக்க வேண்டியது தான் முறை. அதைவிட்டு எங்களை அடியோடு வீழ்த்திச் செங்குந்தர் என்ற எங்கள் பிறப்புரிமையையும் பறிமுதல் செய்ய இவர்கள் பார்ப்பது தான் விந்தையிலும் விந்தை.

ஆதலால் இவர்கள் ஸ்ரீமுகம் விடுதல் போன்ற வார்த்தைகளை மஹா ஜனங்கள் கண்டு மயங்கிவிடாமல் எங்கள் மரபினர்க்கல்லாமல், இந்து சமூகத்திற்கே ஒரு ஹானியை உண்டு பண்

ணும் இக்கொடிய வழக்கத்தை ஒழிப்பதில் எங்களுக்கு இது வரை தந்து வந்த உதவியை இனியும் தளராமல் தந்து வரக் கோருகிறேன்.

என். பழனியப்ப முதலியார்,
கோவைச் சங்க காரியதரிசி.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் முடிவான அபிப்பிராயம்.

நாளது அக்டோபர்மீ 19உ கூடிய கூட்டத்தில் டி சங்கத்தின் நிருவாக சபை கீழ்க்கண்டபடி தீர்மானித்திருக்கிறது:—

சென்ற செப்டம்பர்மீ 21-ந் தேதி நிறைவேற்றப் பெற்ற எமது தீர்மானத்திற்குக் கோயம்புத்தூர் சங்கக் காரியதரிசியவர்கள் பத்திரிகைகளில் எழுதி அளித்த பதிலையும், "செங்குந்த சமூகம்" என்னும் தலைப்பின் கீழ்த் "திராவிடன்" பத்திராதிபர் 7-10-27-ல் எழுதியுள்ள குறிப்பையும், காஞ்சீபுரம், மாணம்பதி, பெருநகர், கொடுங்காலூர், அம்மையப்பட்டு, எலப்பக்கம் மடம், குருவராஜப்பேட்டை, சோளிங்கபுரம், உத்திரமேரூர், மதுரை முதலியவிடங்களிலுள்ள செங்குந்தர்களின் கண்டன தீர்மானங்களையும், ஈரோடு வாசிகளாகிய திருவாளர்கள், S மீனாக்ஷிசுந்தர முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களும், R. V. கருப்பண்ண முதலியார் அவர்களும், மதுரைச் செங்குந்த முதலியார் சங்கக் காரியதரிசி அவர்களும், திருமருகல் சங்கக் காரியதரிசியவர்களும், குருஸ்வாமிகள் சிவசாமி தேசிகரவர்களும், மஞ்சக்கொல்லை திரு. தி.மு.அரு. அருணாசல முதலியார் அவர்களும் மற்றோரும் எழுதியுள்ள கடிதங்களையும் இன்று (19-10-27) வாசித்துப் பார்த்தோம்.

பத்திரிகைகளுக்கும், இவ்விஷயத்தில் சம்பந்தமுள்ள பல கனவான்களுக்கும் சங்கங்களுக்கும் கீழ்க்கண்ட பதிலை அனுப்பத் தீர்மானித்திருக்கிறோம்:—

தொடக்கத்தில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நோக்கங்கள் பொதுஜனங்களின் முற்போக்கிற்கு ஒருசிறிதும் விரோதமானவை யல்லவென்றும்; தங்களுக்குள்ளிருக்கும் துராசாரங்களைத் திருத்திக்கொள்ளப் பிற வகுப்பினர் உண்மை நெறிகளில் செய்யும் முயற்சிகளுக்கு விரோதமாய் நிற்கவேண்டுமென்றாவது, தென்னிந்தியாவிலுள்ள எல்லாப் பண்டைய ஜாதிகளும் முடிவில் ஒற்றுமை பெற்ற ஒரே சமூகமாகும் வண்ணம் ஒவ்வோரினத்தாரும் தங்கள் தங்களுக்குள் மேன்மை, நல்லொழுக்



கம், ஒற்றுமையாகியவற்றை விளைவிக்கக்கூடியவையும், குற்றமற்றவையும், இயற்கையின் போக்கிற்குப் பொருந்தியவையுமான முயற்சிகளைச் செய்து முன்னேறுவதைத் தடுக்க வேண்டுமென்றாவது, இந்து சமூகம் அடங்கலுக்கும் அழியாத அவமதிப்பைத் தருவனவாகிய துராசாரங்களை வேரோடு களைந்தெறியும் பொருட்டுச் சட்டசபைகளில் கொண்டுவரும் திட்டங்களை எதிர்க்க வேண்டுமென்றாவது இச்சங்கம் ஒருபோதும் கருதியதேயில்லையென்றும், எவ்விதத்திலும் வகுப்புத் துவேஷம் உண்டாக்க வேண்டுமென நாங்கள் கனவிலும் நினைத்ததில்லை என்றும், பொது ஜனங்களுக்கு தெளிவாய் தெரிவித்துக் கொள்ளுகிறோம் ?

ஆயினும், கோவைச் சங்கக் காரியதரிசி குறித்துள்ளபடிச் சென்னையிலுள்ள செங்குந்தருக்கே யன்றித், தென்னிந்தியாவிலுள்ள எல்லாச் செங்குந்தருக்கும் பிரதிநிதிகளாக நாங்கள் நிற்கின்றோமாகையால், செங்குந்தர்கள் ஒருபோதும் மேற்கொண்டிராத யாதொரு வெட்ககரமான வழக்கம் அவர்களுக்குண்டென்று பொதுஜனங்கள் நம்புமாறு, முன்வந்ததாகக் கருதப்படும் ஒரு சங்கமோ அல்லது ஒரு நபரோ, சமூக முன்னேற்றத்திற்கு உழைக்க வெளிப்படையாகவோ குறிப்பாகவோ சொல்லும் மொழிகளையும் செய்யும் முயற்சிகளையும் யாதொரு தவக்கமுமில்லாது மறுக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். கோயம்புத்தூர் சங்கக் காரியதரிசியே அவர் பதிலில் மற்றோரிடத்தில் ஒத்துக்கொள்ளுகிறபடி, எங்களுடைய மகாஜன சங்கம், நிறுவப் பெற்றுச் சில மாதங்களேயாயினும், தென்னிந்தியா முழுதும் தமிழ் ஜில்லாக்களெல்லாவற்றிலும் விரவி இருபதுக்கு மேற்பட்டுள்ள செங்குந்தர் அல்லது கைக்கோளர் கிளைச்சங்கங்களையுடையதாயிருக்கிறது. ஆகவே, இது, கைக்கோளர்கள் வதியும் பல இடங்களிலுமுள்ள பிரதான ஸ்தானங்களின் பிரதிநிதிகள் சேர்ந்த ஒரு காரிய நிர்வாக சபையை யுடையதும், தனக்கு உதவி செய்வனவும் தன்னால் ஆதரிக்கப் பெறுவனவுமாகிய பல கிளைச் சங்கங்களை யுடையதுமாகிய ஒரு மகாஜன சங்கமாகும். எனவே, இச்சங்கத்தின் நிருவாக சபையார் சொல்லுவது இன்னதென்று தங்களுக்கே தெரியாதெனக் கோவைச் சங்க காரியதரிசி சொல்லினும், தென்னிந்தியாவிலுள்ள எல்லாச் செங்குந்தர்களின் சார்பாகப் பேச எங்களுக்கு எவ்விதத்திலும் உரிமை உண்டு. எங்கள் சங்கம் சமீபத்தில் நிறுவப்பெற்றதென்ற காரணத்ினாலேயே, இதுவரையில் கேட்டாரின்றிக் கூறப்பெற்ற அவதூறான வார்த்தைகளைக் கண்டித்து எங்கள் சமூகத்தின் மேன்மையையும் கீர்த்தியையும் நிலைநாட்ட எங்களுக்குள்ள உரிமையை எவரும் மறுக்க முடியாது. கோவைச் சங்கத்தின் கட்டுரைகளைக் குறித்துக் கோபத்தையும் ஆத்திரத்தையும் வெளியாக்கும் பலமான கண்ட

னங்கள் பல எங்கள் 'செங்குந்த மித்திரன்' பத்திரிகையில் வெளியிடும்படி தென்னிந்தியாவின் பலவிடங்களிலுமிருந்து ஒவ்வொரு நாளும் வந்துகொண்டிருப்பதே, வறுமையால் நொந்தும் நன்னெறி வழுவாத எங்கள் சமூகத்தாருக்குள் உண்டாயிருக்கும் பரந்த கிளர்ச்சியையும், அவர்களுக்குள்ள நியாயமான சீற்றத்தையும் காட்டப் போதிய சான்றாகும். நாங்கள் அன்னாரது மனத்தாங்கலை அவர்கள் சார்பாக வெளியிடாதிருப்போமாயின், எங்கள் கடமையைச் செய்யத் தவறினவர்களாவோம்.

கோவை சங்கத்தார் 16-8-27ல் சட்டசபை அங்கத்தினருக்கு அனுப்பிய மனுவில் எழுதியுள்ள கீழ்க்குறித்த சொற்றொடர்களைச் செப்டம்பர் மீ 21உயில் நாங்கள் நிறைவேற்றிய தீர்மானத்தில் பலமாய்க் கண்டித்திருக்கிறோம். அவையாவன: 'இந்து சமூகத்தின் சில வகுப்பார் (அவற்றுள் செங்குந்த வகுப்பும் ஒன்று) தங்கள் பெண்களைக் கோயில்களுக்கு விடுகிற கெட்ட பழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்', 'எங்கள் வகுப்பிற்குச் சிறப்பாயுள்ளதான விசனிக்கத்தக்க ஒரு துராசாரம்' செங்குந்த சங்கமெனப் பெயர்கொண்ட ஒரு சங்கத்திலிருந்து இத்தகைய தொடர்மொழிகள் வெளிப்போந்தபடியால், செங்குந்தர் அல்லது கைக்கோளர் என்னும் வகுப்பானது (ஒருபோதும் தான் மேற்கொண்டிராத) தாசித்தொழிலையுடைய வகுப்பென்று பொதுஜனங்கள் கருத இடந்தருமாகையால், நாங்கள் அவற்றைக் குறித்து ஆக்ஷேபித்தோம். கோயம்புத்தூர் சங்கக் காரியதரிசி, இப்போது தாம் எழுதியுள்ள பதிலில், 'கோயம்புத்தூர் ஜில்லாவில் கூடக் கைக்கோளமரபினர் எல்லோருக்கும் தாசித் தொழில் சகஜமாய் உண்டென்று தாம் ஒருபோதும் சொன்னதில்லை எனகிறார். இப்பொருள் அச்சங்கத்தார் சட்டசபை யங்கத்தினருக்கு அனுப்பியுள்ள மனுவில் காணப்படும் தொடர்மொழிகளுக்குப் பொருந்துமென்று சொல்ல எவரும் துணியார். மேற் கண்டித்த தொடர்மொழிகள் முன்னமே கெடுதியை விளைக்க ஆரம்பித்துவிட்டன என்பது "செங்குந்த சமூகம்" என்னும் தலையங்கத்தின் கீழ் 7-10-27-ல் "திராவிடன் பத்திராதிபர் எழுதத் துணிந்ததிலேயே விளங்குகிறது. தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாத எல்லா வகுப்பாரின் நன்மைக்காகவும் சரியாகவோ, அல்லது தப்பாகவோ இலக்ஷக்கணக்கான செங்குந்தரது ஒத்தாசையைக் கொண்டுள்ள ஒரு கக்ஷியின் நன்மைக்காகவும் உழைப்பதாகக் கருதப்படும் ஒரு பிரதான பத்திரிகையின் ஆசிரியரே, கோயம்புத்தூர் சங்கத்தாரது விஷயப் புரட்டால் மயங்கித், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கண்டனத்தைப் முக்கியமாக பிராமணரைக் குடைந்து குற்றங் கூறுவதற்கு வாய்த்த ஒரு சந்தர்ப்ப



மாகக் கொண்டனரே அன்றி, அதன் கருத்தைத தெளிவாக உணர்ந்துகொண்டவராகத் தோன்றவில்லையென்றால், ஆராய்ச்சி, வழக்க ஒழுக்கம், வகுப்புச் சீர்திருத்தம் முதலியவற்றின் பெயரால் தற்காலத்தில் பேசப்பட்டுவரும் குப்பைகளிலிருந்து உண்மையைப் புடைத்தெடுத்து உணர ஆழ்ந்த சரித்திர ஆராய்ச்சியும், சிரத்தையும், நோக்கமும் அற்ற பொது ஜனங்களுக்கு எவ்வாறு இயலும்.

ஆகையால், வேளாளர் வேளாள தாசிகளினின்றும் இசை வேளாளரினின்றும், வன்னியர் வன்னிய தாசிகளினின்றும், பேரிசெட்டிமார் பேரிசெட்டி தாசிகளினின்றும், வணிகர் வணிகதாசிகளினின்றும், கம்மாளர் கம்மாள தாசிகளினின்றும் பலிஜர் பலிஜ தாசிகளினின்றும் எவ்வாறு வித்தியாசப்பட்டவர்களாவார்களோ, அவ்வாறே நன்னெறியி லொழுகிவரும் பெருங் கூட்டத்தவரான செங்குந்தர் அல்லது கைக்கோளர் என்போரும், செங்குந்த அல்லது கைக்கோள தாசிகள் என்போரினின்றும் முற்றும் வேறுபட்டவர்களாவார்கள் என்பதைப் பொதுஜனங்களுக்கு மறுபடியும் தெளிவாகக் கூறுவது எங்கள் பொறுப்பான கடமையாகும். யாதாமொரு ஜாதிப் பெயரைக் கொண்ட தாசிகள் உள்ளதினாலேயே அப்பெயர்கொண்ட வகுப்பார் பூராவும் அவ்வெட்ககரமான தொழிலை உடையவர்களெனக் கருதுதல் கூடாது. ஆசாரம் அல்லது சாதி திட்டங்களுக்கு மீறி நடப்பவர்களை அவ்வச்சாதிக் கூட்டங்களில் சாதிப் பிரஷ்டம் முதலியவற்றால் தண்டிக்கும் வழக்கமான ஏற்பாட்டை யாவரும் அறிவர். இத்தகைய இனக் கூட்டங்கள் அநேகம், விபசாரம் போன்ற குற்றங்களுக்கேயன்றி (செய்வோர் கைக்கோள ஆடவராயினும் பெண்டிராயினும்), குலாசாரத்திற்கு விரோதமான சுருட்டுப் பிடித்தல் முதலிய குற்றங்களுக்குங்கூட, தப்பிழைத்தவர்களைத் தண்டிக்கவோ அல்லது கண்டிக்கவோ கைக்கோள வகுப்பினருள் இன்னும் கூடுவதைக் காணலாம். இத்தகைய கண்டிதமும் சீலமும் தேவதாசி இனத்தவர்க்குள் நிலைக்க இடமுண்டா?

ஆகையால், ஏறக்குறைய ஆறு லக்ஷம் மொத்த ஜனத்தொகையையும் (கோயம்புத்தூர் ஜில்லாவில் மாத்திரம் 50000), என்றும் கற்பரசிகளாக வாழ்ந்துவரும் மூன்றுலக்ஷத்திற்கு மேற்பட்ட எண்ணுள்ள ஸ்திரீகளையும் உடைய செங்குந்தராகிய ஒரு பெரு வகுப்பினர் சார்பாக, கோயில்களுக்குப் பெண்களைத் தாசிகளாக விடுகிற கெட்ட வழக்க முடையவரும், தற்போது அதை ஒழிக்க முயன்றுவருவோருமாகிய கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள மூந்நூறு அல்லது நானூறு குடும்பங்களைத் தழுவி நிற்கும் ஒரு சங்கம் பேசத் துணிந்ததை நாங்கள் கண்டிக்கவேண்டியவர்களா

யிருக்கிறோம். மிஸ் மேயோ இந்து சமூகத்தைக் குறித்துக் கூறியுள்ள அவதூறுகளைக் கண்டிக்கிற இக்காலத்தில், அத்தகைய அவதூறுகளுக்கு அடிப்படையா யிருக்குங் குற்றத்தையே வேரோடு அழிக்க முயன்றுவரும் ஒரு சங்கமானது; இதை விட உண்மைக்கு மாறானதும் அவதூறானதும் வேறொன்றில்லை என்று எண்ணும்படி, செங்குந்தர் வகுப்புத் தாசி வகுப்பென நேரே பொருள்தரக் கூடிய மொழிகளைத் தன் மனியில் சேர்த்துள்ளதானது ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் விளைவிக்கிறது. புகழ்பெற்ற போர்வீரர்களது உதிரம் தங்கள் இரத்தக் குழாய்களில் ஓடப்பெற்றவர்களும், தங்கள் பண்டைய நல்லொழுக்கத்தை விவரிக்கும் பாரம்பரியங்களையும் பழைய நூல்களையு முடையவர்களும், தங்கள் ஒழுக்கத்துக்கு முரணாகக் கூறப்படும் அவதூறுகளைக் கேட்கப் பொறாதவர்களுமாகிய எங்கள் பழமைபான இனத்தைச் சார்ந்த ஆடவர்கள் சார்பாகவும், பெண்டிர்கள் சார்பாகவும், இதுவரையில் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் சொல்லியுள்ள அவதூறான வார்த்தைகளைக் கண்டிப்பதன்றிப், பொது ஜனங்கள், ஆறுலக்ஷம் தொகையினரான தங்களைப் போன்ற மக்களுக்கு உரிய கடமையைச் செய்யக் கருதுவாராயின், மொத்தத்தில் செங்குந்த வகுப்பினர் சார்பாகப் பேசக் கோயம்புத்தூர் சங்கத்திற்கு உரிமையில்லை யென்பதையும், வேளாளர்கள் எவ்வாறு வேளாள தாசிகளாகமாட்டார்களோ, வன்னியர்கள் எவ்வாறு வன்னிய தாசிகள் ஆகமாட்டார்களோ, அவ்வாறே செங்குந்தர்கள் அல்லது கைக்கோளர்கள், செங்குந்தர் அல்லது கைக்கோள தாசிகள் ஆகமாட்டார்கள் என்பதையும் தெளிவாக உணருமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

| | |
|---|---|
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை. 19-10-27. | தி. நா. சபாபதி முதலியார், ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., |

அமைச்சர்கள்.



## REPORT OF THE PROCEEDINGS OF THE CENTRAL GOVERNING BODY OF THE

# South Indian Sengundha Mahajana Sangam

### AT ITS MEETING HELD ON 19-10-27.

READ the reply of the Secretary of the Coimbatore Sangam to our resolution dated 21-9-27, published in the dailies, an editorial note entitled "The Senguntha Samoogam" in 'Dravidan' of the 7th instant, the reports of the protest meetings of the Sengunthars of Conjeevaram, Manambadhi and Perunagar, Kodungalur, Ammavapet, Elappakkam Madam, Kururajapet, Sholingar, etc., and the letters from Messrs. S. Meenakshisundara Mudaliar, B. A., L. T., and R. V. Karuppanna Mudaliar of Erode, from the Secretaries of the Senguntha Mudaliar Sangams of Madura and Tirumarugal, and from Mr. T. Arunachala Mudaliar of Manjakollai, and Sree Sivaswami Desigar of Conjeevaram.

RESOLVED that the following reply be sent to the Press and the several gentlemen and Sangams concerned:—

At the outset, we have to make clear to the public that the objects and policy of the South Indian Senguntha Mahajana Sangam, Madras, are far from being conservative and reactionary, and that it has never been its aim either to stand against the honest endeavours of other communities to reform the social evils prevalent in their midst, or to check the operation of healthy natural tendencies that may lead to the betterment, purification, and consolidation of individual communities ultimately to result in the fushion of all the ancient castes of Southern India into a compact whole. Nor is it our aim to oppose any measure that may be brought in the Legislatures of our country to eradicate root and branch the prevalent social evils which are a standing disgrace to the entire Hindu society. And we had never even dreamt to create bad blood among communities.

At the same time, we have to state that we cannot leave unchallenged any statement, attempt or insinuation, made under the cover of these endeavours and tendencies by any Sangam or person, which may lead the public to believe that the Sengunthar or Kaikola community for whom we stand (and not merely for the Sengunthars in Madras as the Coimbatore Sangam seems to insinuate) is addicted to any shameful custom which it had never adopted. As the Coimbatore Sangam itself admits in another sentence, our sangam is South India wide in its operations and has already, within a few months of its inception, affiliated to it more than a score of Sengunthar or Kaikola branch Associations, scattered all over the Tamil Districts. It has a federal constitution with a governing body consisting of the representatives of the principal Kaikola centres of various districts. We can, therefore, in spite of the assertions of the secretary of the Coimbatore Sangam that our executive do not know what they are writing about, claim to speak on behalf of the community as a whole. Nor can the fact of our Sangam being of a recent origin deny it the right to establish the prestige and fair name of the community against the calumnies that have been till now perpertrated against it unchallenged. The heated and strongly worded protests against the assertions of the Coimbatore Sangam, which we are receiving daily from various parts of Southern India, with requests to publish them in our journal "Sengunthamitran", are significant symptoms of the wide awakening that has arisen among the members of this poor but virtuous community, and of the righteous consternation that is prevailing in their midst. We will be failing in our duty if we do not voice forth their feelings.

In our resolution of the 21st September we strongly objected to the following expressions used by the Coimbatore Sangam in its memorial dated 16-8-27 to the members of the Legislative Council: "the evil custom of dedicating girls of certain communities of the Hindu society (the Sengunthars being one of them) to temples;" "and the deplorable social evil peculiar to our community." We objected to these expressions



because, coming as they did from an association which styles itself a Sengunthar Sangam, it might mislead the public into the belief that the Sengunthar or Kaikola community is a commuuity of Devadasis, which it had never been. Of course, the secretary of the Coimbatore Sangam now says that 'his Sangam had never said that prostitution is universal among the Kaikola community even in the Coimbatore district,' an interpretation which no one could have dreamed of applying to the phrases in question. That these expressions have already begun to do evil, can be noted from the way in which the Editor of the 'Dravidan' had chosen to write under the head "Senguntha Samoogam" on the 7th inst. If the Editor himself of a responsible journal which is credited to be the primary vernacular organ of all the Non-brahmin communities of South India, and of a party which had rightly or wrongly the support of lakhs of Sengunthars or Kaikolars, can have his perceptions blunted and succumb to a belief in the misrepresentations of the Coimbatore Sangam—from which district he hails, by the bye—, and cannot bring himself to realise the significance of the South Indian Senguntha Mahajana Sangam's protest, except to find in it an opportunity to pen a diatribe against the monstrous Brahmin, who can be sure that the public who have neither the time, the inclination, nor the trained historical insight for the purpose, will sift the truth from the chaff of ambiguities and irrelevancies that are now being indulged in in the name of research, local custom, personal observation, and communal and social reform ?

It has, therefore, become our bounden duty once again to make it clear to the public that the large commuity of virtuous-living Sengunthars or Kaikolars are quite different from the commuity called Senguntha Dasis or Kaikola Dasis in the same way as the Vellalas are different from Vellala Dasis or Isai-Vellalas, the Vannias from Vannia Dasis, Berichetties from Berichetty Dasis, Vaniars from Vania Dasis, Kammalas from Kammala Dasis, Balijas from Balija Dasis, and so on. The fact that there are Devadasis who go under the name of a particular community can never be taken to mean that the entire community is addicted to the shametul profession. This

can be further inferred, if any proof were needed on this matter, from the system of social ostracism or excommunication and the other penalties inflicted on members of any one of these communities who stray from the path of virture or communal discipline, by their respective communal gatherings. We can point to hundreds of similar communal gatherings which are being held even today among the Sengunthars or Kaikolars, where individuals of the community, both male and female, are punished and ostracised for vices of the type of adultery, and even for such offences against communal decorum and virtue as smoking. Can this moral rigour and discipline be ever associated with a community of Devadasis?

We cannot, therefore, too strongly condemn the presumption of a Sangam, which claims to represent merely a few hundreds of families in the Coimbatore district itself who have taken to the evil of dedicating girls to temples and are trying to give it up, in attempting to speak on behalf of the entire community of Sengunthars or Kaikolars, who number about six lakhs in population (and about 50,000 in the Coimbatore district itself), and whose women who number about three lakhs had always been models of virtue and chastity. It is strange that, in these days when the calumnies of Miss Mayo on Hindu society are being so widely protested against, a sangam which is claiming to be endeavouring to eradicate the very evil which had occasioned the calumnies, should include statements in its memorial which directly mean that the Senguntbar community is a community of Devadasis,—an unambiguous implication than which nothing can be more untrue and calumniatory. On behalf, therefore, of the men and women of our ancient community who have the blood of glorious warriors coursing in their veins, whose traditions and literature speak of a virtuous past, and who can never brook such calumnies against their social morality, we protest against the assertions and insinuations till now indulged in against them, and request the public, if they desire to do justice to six lakhs of their fellow-beings, to realise that the Coimbatore Sangam cannot



resume to speak on behalf of the Senguntbar Community as whole, and that Sengunthars or Kaikolars are not the same ommunity as Senguntha Dasis or Kaikola Dasis, in the same vay as the Vellalas are not the same as Vellala Dasis, and the Vannias are not the same as Vannia Dasis.

T. N. SABAPATHY MUDALIAR,

*Municipal Councillor, Tiruvalur.*

M. SHUNMUKHASUNDARA MUDALIAR, M.A., L.T.,

*Muthialpet High School, Madras.*

**Joint Secretaries.**

---

## செங்குந்த சமூகம்

22-10-27ல் 'திராவிடன்' பத்திரிகாசிரியர் எழுதுகிறார்:—

7-10-27ல் 'செங்குந்த சமூகம்' என்ற தலையங்கத்தின் கீழ் நாம் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் சில தென்னிந்தியாவில் உள்ள எல்லாச் செங்குந்த சமூகத்தாரிடமும் பெண்களைக் கோவிலுக்குப் பொட்டுக்கட்டி விடுகின்ற வழக்கம் இருப்பதாக நினைக்கும்படி இருப்பதாய்த் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசி அவர்களால் நமக்குத் தெரியவருகிறபடியால், அதைப்பற்றி நாம் சிறிது விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதாவது கோவிலுக்குப் பெண்களைப் பொட்டுக்கட்டி விடுவதுஎன்கின்ற வழக்கம் கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள செங்குந்த மகாஜனங்கள் என்பவர்களில் ஏதோ சில குடும்பங்களில் மாத்திரம் தான் இருந்து வருகிறது என்பதாகக் கருதியே, அதே பொருள்படும்படி எழுதி இருக்கின்றோமே ஒழிய, அச்சமூகத்தைச் சேர்ந்த எல்லா குடும்பங்களிலும் இருக்கின்றது என்பதாகவாவது தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம் என்பதைச் சார்ந்த செங்குந்த மகா ஜனங்களிடையில் இருக்கின்றது என்பதாவது நாம் கருதவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாம் முன் எழுதியது அந்தப்படி ஒரு போதும் பொருள்படாது என்று மறுபடியும் தெரிவிப்பதோடு அப்படியாராவது, தப்பாய் நினைத்து வருத்தப்பட நேருவதாய் இருந்தாலும் அதற்காக நாம் மிகுதியும் வருந்துகின்றோம்.

FROM A COMMUNICATION WHICH WE HAVE received from the Secretaries of the Sengunthar Mahajana Sangham of Madras, we learn that the community is very much exercised and is indignant over the resolutions passed by the Coimbatore Sangham with regard to the system of Devadasis. The danger of generalisations is very great in India, where customs and manners vary so widely between locality and lecality. We know that it is absolutely incorrect to say that there is or was at any time a custom amongst the Senguntbars to dedicate a member of the family to temple worship. It is ofcourse absurd to suggest that the custom of Devadasis prevails only among the Sengunthars. The system is prevalent all over India, whereas the Sengunthars are found only in certain districts. This pernicious custom is found among several communities and is a degenerated relic of an idea which finds its parallel in the band of vestal virgins of ancient Rome or the brides of the church of mediaeval Europe. We know of many towns which are solely inhabited by Sengunthars where this custom is absolutely unknown. We regret that a hasty resolution should have given rise to so much misunderstanding.

27—10—27-ல்

'ஜஸ்டிஸ்'

பத்திரிகாசிரியர் எழுதுகிறார்.

## ஒரு முக்கியமான அறிக்கை.

இரண்டொரு மாதங்களாகச் 'செங்குந்த மித்திர' னுக்குச் சந்தாத் தொகைகளை அனுப்பும் சிலர் அவைகளை 'நாகலிங்க முனிவர், பத்திரிகாசிரியர், ''செங்குந்தமித்திரன்''' என்ற விலாசமிட்டு அனுப்புகின்றனர். ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் நமது 'மித்திர'னின் பத்திரிகாசிரிய ஸ்தானத்தினின்று ஆவணிமீ முதல் விலகிக்கொண்டார் என்பதை முன்னமே தெரிவித்திருக்கிறோம். அதற்குப் பின் வந்த சஞ்சிகைகளில் நமது பத்திரிகையின் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ, எல்.டி., அவர்கள் என்பதை வெளியிட்டிருக்கிறோம். ஆகவே இனிப் பணஞ் செலுத்த இருக்கும் சந்தா நேயர்கள் அதைத் திருவாளர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் பேருக்கே அனுப்ப வேண்டுமென்பதையும் மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



மேலும், துண்டுப்பிரசுரம் முதலிய செய்வதற்கும், வேறு விலாசமிட்டு அனுப்பும் சந்தாவுக்கும் நாங்கள் உத்திரவாதமாக மாட்டோம். 'செங்குந்தர் புராணம்' என்னும் ஒரு நூலை வெளியிடுவதற்கும், யாரோ தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பெயரால் பிரசாரஞ்செய்து பணம் தண்டி வருவதாகத் தெரிவித்து, அவை பிரசுரம் ஆய்விட்டனவா என்றுதென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்களுக்குச் சிலர் புதுச்சேரி, திருப்பத்தூர், சோளிங்கபுரம், குருவராஜப்பேட்டை முதலிய இடங்களிலிருந்து கடிதம் எழுதியும் ஆளனுப்பியும் கேட்கின்றனர். இதனால், யாரோ குலாபிமானிகளைப் போலவும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரதிநிதிகளைப் போலவும் பாசாங்கு செய்துகொண்டு, அயோக்கிய வழியில் பிரபுக்களையும் பாமரர்களையும் ஏமாற்றிப் பணம் பறித்துச் சாப்பிட்டுக்கொண்டு வருகின்றனர் என விளங்குகிறது. இனியாவது நம்மவர் இவ்விதம் ஏமாறுது இருப்பாராக. துண்டுப் பிரசுரம் செய்யவாவது, 'செங்குந்தர் புராணம்' என்னும் புத்தகத்தைப் போடவாவது எமது சங்கம் பணம் தண்டிவர யாரையும் அனுப்பியதில்லை; இனியும் அனுப்பப்போகிறதில்லை. எங்களுக்குப் பணம் வேண்டியகாலத்தில் 'மித்திரன்' பத்திரிகையில் பிரசுரித்தாவது, லிகித மூலமாவது, அறிக்கை மூலமாவது, எங்கள் அத்தாக்ஷிபெற்ற பிரதிநிதிகளை யனுப்பியாவது பணம் வசூலிப்பது எங்கள் வழக்கம். இவ்வழக்கத்துக்கு விரோதமாக யாராவது பணம் வந்து கேட்பாராயின் அவரிடம் கொடுக்கும் பணத்திற்குச் சங்கத்தார் உத்திரவாதம் ஆகமாட்டார்கள் என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தற்போது நாம் செய்துவரும் எமது சங்கத்தின் சார்பாகப் பிரசாரம் செய்துவரும் எமது சங்கப்பிரதிநிதிகள் பின் குறிப்பிட்டுள்ள கனவான்களேயாவர்:—திருவாரூர் முனிஸிபல் கௌன்சிலர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள், 'செங்குந்தமித்திரன்' பத்திரிகாசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள், திரு. ம. கனகசபை முதலியார் அவர்கள், திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள், உத்திரன்மேரூர் திரு.கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள், காஞ்சிபுரம் திரு. பீ. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், திருவல்லிக்கேணி திரு. M. இராமலிங்க முதலியார் அவர்கள், திருமயிலை திரு. சரவண முதலியார் அவர்கள் திருக்கழுக்குன்றம் ஸ்ரீலஸ்ரீ கா. ச. சுவாமிநாத தேசிகர் அவாகள். இவர்களன்றி மற்றவர்களிடம் கொடுக்கும் பணத்திற்கு நாங்கள் உத்திரவாதம் ஆகமாட்டோம்.

இங்ஙனம் :

**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர்கள்.**

## வியாபாரிகளிடம் புரட்டாசி மாதம் தண்டிய மகமை நன்கோடை வரவு.

---

### சைதாப்பேட்டை

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| நா. சுப்பருய முதலியார் | .... | 0 | 6 | 9 |
| சே. மு. பழனி முதலியார் | .... | 1 | 0 | 0 |
| அ. கு. முருகப்ப முதலியார் | .... | 0 | 8 | 0 |
| நெ. குப்புசாமி முதலியார் | .... | 0 | 3 | 6 |
| ப. மாணிக்க முதலியார் | .... | 0 | 5 | 0 |
| தி. ஞா. சின்னப்பா முதலியார் | .... | 0 | 2 | 6 |
| நல்ல. தங்கவேலு முதலியார் | .... | 0 | 6 | 3 |
| ஆ. த. வைத்தியலிங்க முதலியார் | .... | 0 | 8 | 9 |
| கோ. நடேச முதலியார் | .... | 1 | 2 | 6 |
| பா. இராசு முதலியார் | .... | 1 | 0 | 6 |
| ம. சண்முக முதலியார் | .... | 1 | 5 | 9 |
| S. ரத்தினவேலு முதலியார் | .... | 0 | 14 | 9 |
| ம. கு. மணிக்க முதலியார் | .... | 0 | 5 | 9 |
| தி. அ. கந்தசாமி முதலியார் | .... | 0 | 10 | 6 |
| ம. குமாரசாமி முதலியார் | .... | 0 | 5 | 3 |
| நெ. போரூரான் முதலியார் | .... | 0 | 7 | 0 |
| அரு. ஆறு. முத்துவேலு முதலியார் | .... | 3 | 13 | 9 |
| கொ. செ. முனுசாமி முதலியார் | .... | 0 | 5 | 3 |

### குண்ணத்தூர் திருநாகேஸ்வரம்

| | | | | |
|---|---|---|---|---|
| இ. ஜெகநாத முதலியார் | .... | 0 | 13 | 0 |

### செம்பாக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| தி. சிற்றம்பல முதலியார் | .... | 2 | 2 | 3 |
| அ. வேதாசல முதலியார் | .... | 1 | 3 | 6 |
| வே. இரத்தின முதலியார் | .... | 0 | 8 | 3 |
| ம. ஜெம்புலிங்க முதலியார் | .... | 0 | 15 | 6 |
| ம. சோமசுந்தர முதலியார் | .... | 0 | 6 | 9 |



### திருமழிசை

| | | | | |
|---|---|---|---|---|
| ஐயா. முனுசாமி முதலியார் | .... | 0 | 3 | 9 |

### பரங்கிமலை

| | | | | |
|---|---|---|---|---|
| வே. மு. கண்ணப்ப முதலியார் | .... | 4 | 3 | 3 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | .... | 0 | 1 | 9 |

### படப்பை.

| | | | | |
|---|---|---|---|---|
| தொ. மு. திருமலை முதலியார் | .... | 0 | 2 | 6 |

### திருமயிலாப்பூர்

| | | | | |
|---|---|---|---|---|
| க. மாணிக்க முதலியார் | .... | 0 | 11 | 0 |

### மேப்பூர்

| | | | | |
|---|---|---|---|---|
| கா. சிவானந்த முதலியார் | .... | 0 | 12 | 0 |
| பொ. நடேச முதலியார் | .... | 0 | 6 | 6 |
| சோலை. முருகப்ப முதலியார் | .... | 0 | 3 | 6 |

### சென்னை

| | | | | |
|---|---|---|---|---|
| கி. ச. ரூம. இராமசாமி முதலியார் அவர்களால் உண்டியல் வசூல் | .... | 15 | 0 | 0 |
| மதுரூஸ் பாளயகாட் கம்பெனியாரால் உண்டியல் வசூல் | .... | 30 | 0 | 0 |

உ

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்.

கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

பிரபவஹு ஐப்பசிமீ, கார்த்திகைமீ, 1927, நவம்பர்மீ

தக்ஷிணாயனம், சரத்ருது, கலி-5029, பசலி-1338, சாலி-1849, பிரபவ-1.

| நவம்பர். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷநாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செவ் | சஷ், 6-19 | பூர, 4-58 | சி, 4-58 அ | வள்ளிகலியாண |
| 2 | 17 | புத | சப், 6-51 | உத், 7-29 | அ, 7-29 சி | பொய்கைஆழ் |
| 3 | 18 | வியா | அஷ், 8-18 | கிரு, 7-20 | சி, 60 | பூதத்தாழ்வார் |
| 4 | ஐப்பசிமீ 19 | வெ | ந,2-9த57-15 | அவி, 5-40 | சி, 60 | பேயாழ்வார் |
| 5 | 20 | சனி | ஏகா, 50-29 | ச2-10பூ5630 | அ,2-8ம | கரிநாள் |
| 6 | 21 | ஞாயி | துவா, 42-30 | உத், 50-55 | அ, 60 | விரதாரம்பம் |
| 7 | 22 | திங்க | திர, 34-40 | ரே, 44-50 | சி, 60 | பிரதோஷம் |
| 8 | 23 | செவ் | ச, 25-20 | அஸ், 37-10 | சி, 60 | அன்னாபி, மூலர் |
| 9 | 24 | புத | ○; 15-30 | பர, 28-45 | சி, 28 45அ | கிர்த்திகைகின்ற |
| 10 | துலாமீ 25 | வியா | பிர,6-5து,58 | கிரு, 20-55 | ம, 60 | இடங்கழி [சீர் |
| 11 | 26 | வெ | திரி, 51 | ரோக, 16 | ம, 16சி | மாடுவாங்க |
| 12 | 27 | சனி | சது, 45-50 | மிரு, 11-20 | சி, 60 | பிரயாணம் |
| 13 | 28 | ஞாயி | பஞ், 42-30 | திரு, 4-10 | சி 60 | கதிரறுக்க |
| 14 | 29 | திங்க | சஷ், 40-30 | புன, 7-30 | அ, 7-30 சி | சத்திநாயனார் |
| 15 | 30 | செவ் | சப், 41-10 | பூச, 8-30 | சி, 60 | கதிர்அருக்க |
| 16 | 1 | புத | அஷ், 42-28 | ஆயி, 11-20 | சி 60 | கரிநாள் |
| 17 | 2 | வியா | நவமி, 47-30 | மகம், 15-35 | அ,15-35சி | விதைக்க |
| 18 | 3 | வெ | தச, 52-48 | பூர, 21-40 | சி, 60 | சித்திரம் எழுத |
| 19 | 4 | சனி | ஏகா, 58-50 | உத், 29-5 | ம, 60 | சட்டநாதர்கு.பூ. |
| 20 | கார்த்திகைமீ 5 | ஞாயி | துவா, 60 | அஸ், 36 | அ, 36சி | ஆனாயநாயனார் |
| 21 | 6 | திங்க | துவா, 5-10 | சித், 43-33 | பி43-33அ | பிரதோஷம் |
| 22 | 7 | செவ் | திர, 11-30 | சுவா, 51 | சி, 51ம | விதைக்க |
| 23 | 8 | புத | சது, 17-50 | விசா, 58-30 | சி, 60 | கிணறு வெட்ட |
| 24 | 9 | வியா | ●, 23-30 | அநு, 60 | சி, 60 | அமாவாசை |
| 25 | 10 | வெ | பிர, 28-30 | அநு, 4-25 | சி, 4-25 ம | கரிநாள் |
| 26 | 11 | சனி | துதி, 32-30 | கேட், 10-5 | சி, 60 | மூர்க்க நாயனார் |
| 27 | விருச்சிகமீ 12 | ஞாயி | திரி, 35-30 | மூல, 15-30 | அ, 60 | சிறப்புலி நாய |
| 28 | 13 | திங்க | சது, 37-20 | பூரா, 18-20 | ம 18-20சி | கடன்தீர்க்க [னார் |
| 29 | 14 | செவ் | பஞ், 38 | உத், 20-5 | அ 20-50சி | கோடிகட்ட |
| 30 | 15 | புத | சஷ், 37-20 | திரு, 21 | சி,21-55பி | சூரியவிரதம் |


80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்



காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம்

பட்டணம்பொடி

ஷண்முகம் முக்குத்தாள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

முதல் தரமானது.

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் | தபால் சார்ஜு | பாக்கிங் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. | ரூ. அ. பை. |
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீ. 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீ. 1-க்கு ரூ. 4.

பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் புத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ் பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதல் குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்பமும் காரம், பவுன் நிறம் இவ் வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே நீங்கள்
என் கவலைப்படுகிறீர்கள்!

40,000 ஜனங்களால் வாசித்து எங்கும் பிரபல்யமடைந்த எமது

# ஆங்கில ஆசான்

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்
இங்கிலீஷ் பதங்கள் வெகு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இது 9-ம் பதிப்பு, 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது முதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இப் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு க-அணா முதல் 3,000 ரூபா வரைக்கும் மாதச்சம்பள கணக்கு போடப்பட்டிருக்கிறது. இதற்கு பின் வந்துள்ள போலி புத்தகங்களை வாங்கி ஏமாறாமல், இந்தப் படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் போட்டுள்ளதை பார்த்து வாங்குங்கள்.




முழு காலிகோ பைண்டு புத்தகம் 1-க்கு ரூ. 2.
வி. பி. தபால் செலவு அணா 8.
அந்நிய நாட்டினர் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

---

முந்துங்கள்! ]
[உடனே சேருங்கள்!!

இரண்டாம் ஆண்டு தொடங்கிவிட்டது.

வித்வத்துவம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்!
விச்சித்திரம்! அற்புதம் இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது

# ஆனந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தர வல்லதான
உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்கள்.

வருஷசந்தா: இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1
மாதிரிப்பிரதி இனாம். வெளிநாடுகளுக்கு ரூ. 1
சென்ற அக்ஷயவருஷ பவுண்டு வால்யம் ரூ. 1

அக்ஷயவருஷ சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்துலவுகிறது.

தி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை

## சந்தா செலுத்திய கனவான்களின் பெயர்.

**வலங்கிமான்.**
மா. வெ. வேலாயுத ஸ்ரீ

**பரங்கிமலை.**
கு. ஆலாலசுந்தர ஸ்ரீ

**திருமலை ராஜன் பட்டணம்.**
S. T. M. இரத்தினசபாபதி ஸ்ரீ
அ. ரு. மா. சாமிகண்ணு ஸ்ரீ

**உத்திரன்மேரூர்.**
குருபாத ஸ்ரீ
V. ஆனந்த ஸ்ரீ

**ஒழுகரை.**
சண்முகவேலாயுத ஸ்ரீ

**கோட்டியம்.**
கெ. க. உத்திராபதி ஸ்ரீ

**புதுப்பாளையம்.**
அ. குப்புசாமி ஸ்ரீ

**தஞ்சை மாரியம்மன் கோவில்.**
சி. காத்தபெருமாள் ஸ்ரீ

**காட்டுச்சேரி.**
பா. இருளப்ப ஸ்ரீ
அ. சோமசுந்தர ஸ்ரீ

**அப்துல்லாபுரம்.**
திரு. அ. ஆறுமுகஸ்ரீ

**ஐயம்பேட்டை.**
ர. ப. அ. கு. இரத்தினகிரி ஸ்ரீ

**மஞ்சக்கொல்லை.**
குமரவேலுஸ்ரீ

**அம்மையப்பட்டு.**
சு. பாலசுந்தர ஸ்ரீ
முத்து முனிசாமி ஸ்ரீ
T. கோவிந்தராஜு ஸ்ரீ
கு. இராஜகோபால் ஸ்ரீ
தா. மு. கிருஷ்ணசாமி ஸ்ரீ

**திருவையாறு.**
D. குமாரசாமி ஸ்ரீ

**மூலந்துறை.**
E. V. துரைசாமி ஸ்ரீ

**எழுமாத்தூர்.**
E. K. அங்கப்ப ஸ்ரீ

**அம்பாங். F. M. S.**
K. R. இராமசாமி ஸ்ரீ

**கோலாலம்பூர்.**
S. S. செனரிராஜ ஸ்ரீ

**சைதாப்பேட்டை.**
அரு. ஆ. மு. முத்துவேல் ஸ்ரீ

**ஆமூர்கஸ்பா.**
நாட்டாண்மை. மைல. வையாபுரி ஸ்ரீ

**காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையம்.**
கு. சோமசுந்தர ஸ்ரீ
க. குமாரசாமி ஸ்ரீ

**ஐயங்கார் குளம்.**
சமயம். முன்னுசாமி ஸ்ரீ
ஐ. சுப்பிரமணிய ஸ்ரீ
அம்பல. குருசாமி ஸ்ரீ
மொ. நா. சண்முக ஸ்ரீ
மா. ஏ. தணிகாஜல ஸ்ரீ
மொ. மு. கிருஷ்ணப்ப ஸ்ரீ
வ. சு. குப்புசாமி ஸ்ரீ
தணியம். அ. தணிகாசல ஸ்ரீ
தணியம். அ. கணேச ஸ்ரீ
மயிலம். சண்முக. தணிகைமலை ஸ்ரீ
வே. ஆ. வேதகிரி ஸ்ரீ
ப. வே. அருணாசல ஸ்ரீ
சின்ன. இராமசாமி ஸ்ரீ

**திருவத்திபுரம்.**
மா. லோகநாத ஸ்ரீ
மெ. க. முத்துத் தாண்டவராய ஸ்ரீ

**துருவராஜப்பேட்டை.**
தளவா. மாணிக்க ஸ்ரீ

**புதுச்சேரி.**
அம்பலவாண சபாபதி ஸ்ரீ
V. கிருஷ்ணசாமி ஸ்ரீ

**தென்காசி.**
ச. கு. பிச்சாண்டி ஸ்ரீ

**பவானி.**
க. செ. வீ. இராமசாமி ஸ்ரீ

**ஈரோடு.**
வ. மு. மொட்டையப்ப ஸ்ரீ

**ஸ்ரீரங்கம்.**
S. R. ஜம்புலிங்க ஸ்ரீ

**ஆக்கூர்.**
ச. கோவிந்தசாமி ஸ்ரீ

**கொல்லங்கோடு.**
S. சொக்கலிங்க ஸ்ரீ
பழனிமலை. முத்துவேல் ஸ்ரீ
பழனிமலை. சுப்பிரமணிய ஸ்ரீ
வயித்தியலிங்கம். சொக்கலிங்க ஸ்ரீ

(இன்னும் வரும்)